விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது

Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 ஆவணி 13 ஞாயிற்றுக்கிழமை (29.08.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 253

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## வடமராட்சி கிழக்கு பகுதியில் மீள்குடியேற்ற நடவடிக்கை

### யாழ். படைத் தளபதி கூட்டிய மாநாட்டில் முடிவு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சிக் கிழக்குப் பகுதியில் மீள்குடியேற்றம் தொடர்பாக பலாலி படைத் தலைமையகத்தில் நேற்று மதியம் முக்கிய மாநாடு இடம்பெற்றது.


யாழ்.குடாநாட்டின் படைத் தளபதி மேஜர் ஜெனரல் கத்துருசிங்க மற்றும் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர், பிரதேச செயலர் மற்றும் வடமராட்சி கிழக்குப் பகுதியைச் சேர்ந்த கிராம அலுவலர்களும் இம் மாநாட்டில் கலந்து கொண்டனர்.

இதில் வடமராட்சி கிழக்குப் பகுதியின் மீள் குடியேற்றம் தொடர்பாக ஆராயப்பட்டது. வடமராட்சி கிழக்கு குடாரப்பிலிருந்து சுண்டிக்குளம் வரையான பகுதியில் மக்களை மீளக் குடியமர்த்த வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

எனினும் இக் (20 ஆம் பக்கம் பார்க்க)

## ஹக்கீம் எங்களுக்குப் பச்சை துரோகம் இழைத்து விட்டார்

### குமுறுகிறார் ரணில் விக்கிரமசிங்க



(கொழும்பு)

ஹக்கீம் தலைமையிலான சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு தெரிவித்தமையானது எமக்குச் செய்யப்பட்ட துரோகம். நாம் அவர்களுக்கு அதிக இடங்களைத் தேர்தலின்போது வழங்கினோம் என ஐ.தே. கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆவேசத்துடன் தெரிவித்தார்.

நாம் எமது தலைமையில் பொது எதிரணி ஒன்றை ஏற்படுத்தி அதன் மூலம் மகிந்தவினால் கொண்டு வரப்படவுள்ள அரசியல் யாப்பு சீர்திருத்தத்தினை (20 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளை தோற்கடித்ததன் மூலம் நாடு ஒன்றிணைக்கப்பட்டது மக்கள் ஒன்றிணையவில்லை

### அமைச்சர் டியூ.குணசேகரவின் உண்மை விளக்கம்



(கொழும்பு)

யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதன் மூலம் நாடு ஒன்றிணைக்கப்பட்டுள்ள போதிலும் மக்கள் இன்னமும் ஒன்றிணைக்கப்படவில்லை. இவ்வாறு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான டியூ. குணசேகர தெரிவித்துள்ளார்.

(20 ஆம் பக்கம் பார்க்க)

## மக்கள் நல அரசியல் அமைப்பு திருத்தத்திற்கே ஐ.தே.க. ஆதரவு

### திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

குடும்ப நல அரசியல் அமைப்புத் திருத்தத்திற்குப் பதிலாக மக்கள்நல அரசியல் அமைப்பு திருத்தத்திற்கே ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவு வழங்கும் என அக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

அத்துடன் அரசியல் அமைப்புத் திருத்தங்களை மேற்கொள்வதற்குத் தேவையான நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுக் கொள்வதற்கு வசதியாக அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்க எடுத்துள்ள நிலைப்பாடு தொடர்பில் சிறிலங்கா முஸ்லிம் காங் (20 ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம் காங்கிரஸுக்கு இரண்டு அமைச்சுப் பதவி

(கொழும்பு)

உத்தேச அரசியல் அமைப்புத் திருத்தங்களுக்கு ஆதரவு வழங்க தீர்மானித்துள்ள சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு இரண்டு அமைச்சுப் பதவிகளை வழங்க ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தீர்மானித்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அண்மையில் ஜனாதிபதிக்கும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீமுக்குமிடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது இந்த இணக்கம் ஏற்பட்டுள்ளது.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு வழங்கப்படவுள்ள அமைச்சுக்களில் துறைமுக அபிவிருத்தி அமைச்சும் அடங்குவதாகக் கூறப்படுகின்றது. (ந-5)

## இலங்கைத் தமிழருக்கு மறுவாழ்வு அளிப்பதே இந்தியாவின் கொள்கை

### இந்திய அமைச்சர் நாராயணசாமி தெரிவிப்பு



(சென்னை)

இலங்கைத் தமிழர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதையே இந்திய அரசு முக்கிய கொள்கையாகக் கொண்டு செயல்படுகிறது என மத்திய நாடாளுமன்ற விவகாரத்துத்துறை இணை அமைச்சர் நாராயணசாமி தெரிவித்துள்ளார்.

புதுச்சேரியில் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் நாராயணசாமி,

இலங்கையில் உள்ள தமிழர்களின் மறுவாழ்வுக்குத் தேவையான பணிகளை இந்திய அரசு அந் நாட்டுடன் சேர்ந்து எடுத்து வருகிறது.

நிவாரணப் பணிகள் சிறப்பாக நடைபெறுகின்றதா என்பதையும் மத்திய அரசு கவனித்து வருகின்றது. இலங்கையில் தமிழர்களின் மீள்குடியேற்றம் செய்யும் இடங் களில் இந்திய அரசு 500 (20 ஆம் பக்கம் பார்க்க)

வீட்டிலும் வேலைத்தலத்திலும் இதமான காற்றை இனிதே அனுபவிக்க ...

சிங்கர் எயார்கண்டிஷனர்கள்

• உத்தரவாதம் • விற்பனைக்குப் பிந்திய சேவை • இலகு தவணைக் கொடுப்பனவு



SINGER

யாழ் மண்ணின் பரம்பரைத் தோழன்

யாழ்ப்பாணம்-ஸ்டான்லி வீதி, ஆஸ்பத்திரி வீதி, சுன்னாகம், நெல்லியடி, சாவகச்சேரி, மானிப்பாய்

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## ஜெருசலேம் புனித பூமிக்கான பயணம்

(கொழும்புத்துறை)

மன்னார் மாவட்ட விவிலிய மன்றத்தின் ஏற்பாட்டில் யாழ். மறைக்கல்வி நிலையமும் இணைந்து ஜெருசலேன் புனித பூமிக்கான ஆறு நாள் பயணம் மேற்கொள்ளவுள்ளது.

இப் பயணத்திற்கு வருக தரவிரும்புவோர் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் யாழ். பிரதான வீதியில் அமைந்துள்ள மறைக்கல்வி நடுநிலையத்தில் அல்லது 021 222 1239 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ். மறைக்கல்வி நிலைய அருட்பணி ம.இ.ரவிச்சந்திரன் அடிகளார் கேட்டுள்ளார். (6-51)

## புனித செபஸ்தியார் ஆலயத் திருவிழா

(கொழும்புத்துறை)

பூநகரி மன்னித்தலை செபஸ்தியார் ஆலய வருடாந்தத்திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7.15 மணிக்கு பாசையூர் அந்தோனியார் ஆலய பங்குத்தந்தை அருட்திரு ஜோய்ரோய் பேரிநஸ் தலைமையில் திருநாட்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது.

கடந்தகால யுத்தத்தினால் இவ் ஆலயம் சேதமுற்ற நிலையிலும் கரையோரப்பகுதி மக்கள் கடந்த ஒருவருட காலமாக மன்னித்லையில் தங்கியிருந்து திருவிழாவை கொண்டாடுவது இங்கு குறிப்பிடத்தக்கது. (ந-51)

## மகோற்சவம்

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை அராலி மேற்கு-கோட்டக்காடு நொச்சியம்பதி அருள்மிகு சிறி சித்தி விநாயகர் திருக்கோயில் மகோற்சவம் நாளை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்தும் 10 நாட்கள் நடைபெறவுள்ளது.

அடுத்தமாதம் 6ஆம் திகதி சப்பறமும் 7 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு தேர்த்திருவிழாவும் 8ஆம் திகதி முற்பகல் 11 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும்இடம் பெறும். (ந-3)

# பரமேஸ்வராக் கல்லூரியின் ஸ்தாபகர்தினம் நாளை பழைய மாணவர்களைப் பங்கேற்குமாறு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பரமேஸ்வராக் கல்லூரியின் ஸ்தாபகர் தினம் நாளை திங்கட்கிழமை காலை 9.45 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் இடம்பெறும்.

துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் தலைமையில் இடம் பெறும். இந் நிகழ்வில் உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்க பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

கௌரவ அதிதிகளாக அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.சுவாமிநாதன், வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எல்.இளங்கோவன் ஆகியோர் கலந்து கொள்வர்.

இந் நிகழ்வில் பரமேஸ்வராக் கல்லூரியின் பழையமாணவர்களையும் ஆர்வலர்களையும் கலந்து சிறப்பிக்குமாறு கல்லூரியின் பழையமாணவர் சங்கத் தலைவரும் ஓய்வு பெற்ற உதவிப் பொலிஸ்மா அதிபருமாகிய ரி.பேரின்பநாயகம் கேட்டுள்ளார். (ந)

# வெளிநாடு செல்லவேண்டாம் அரச எம்.பிக்களுக்கு அறிவிப்பு

(கொழும்பு)

செப்ரம்பர் 15ஆம் திகதி வரை வெளிநாட்டுக்கு செல்லவேண்டாம் என அரசாங்கத்தரப்பில் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் அறிவுறுத்தப்பட்டதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அரசியலமைப்பு சீர்திருத்த யோசனைகளை அரசாங்கம் நாடாளுமன்றத்தில் சமர்பிக்கவுள்ளமையே இதற்கான காரணம் எனவும் அவ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இது தொடர்பான அறிவுறுத்தல் கட்சி தலைமையகத்தால் விடுக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஏனைய கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பிரதம அமைப்பாளரால் விரைவில் அறிவிக்கப்படவுள்ளது.

இதேவேளை அரசியலமைப்பு திருத்த யோசனைகள் நாளை 30ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஒருவர் ஜனாதிபதியாக பதவி வகிக்கக் கூடிய காலம், சுயாதீன ஆணைக்குழுக்களுக்கான அங்கத்தவர்கள் நியமனம், 13ஆவது திருத்தச்சட்டத்தின் கீழான மாகாணசபைகளுக்கு அதிகாரங்களைப்பலப்படுத்தல் ஆகியன முதற்கட்டத்தில் கருத்தில் கொள்ளப்படும் எனவும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன. (ந-5)

## நாடுதிரும்புவதில் அகதிகள் ஆர்வம்

(கொழும்பு)

இந்தியாவில் வாழ்ந்த இலங்கை அகதிகளில் பெருந்தொகையானோர் நாடுதிரும்பியுள்ளதாக அகதிகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் செயலகம் தெரிவித்துள்ளது.

தமிழ் நாட்டில் பல வருடங்களாக அகதி முகாம்களில் வாழ்ந்து வந்தவர்களே யுத்தம் முடிபுற்ற பின் இவ்வாறு மீண்டும் இலங்கையை நோக்கி வருகின்றனர் என ஐ.நா. செயலகத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யுத்தம் இடம்பெற்றக் காலப்பகுதியில் இலங்கையிலிருந்து இந்தியாவுக்குச் சென்று இலட்சக்கணக்கான மக்கள் அகதிகளாக தென்னிந்தியாவில் வாழ்ந்து வருகின்றனர் என ஐ.நா.செயலக அறிக்கை தெரிவிக்கின்றது. (ந-5)

## ஒத்திவைப்பு

(கரவெட்டி)

கரவெட்டி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நாளை திங்கட்கிழமை நடைபெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது.

தவிர்க்க முடியாத காரணத்தினால் இக் கூட்டம் எதிர்வரும் 3ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறும் என கரவெட்டி பிரதேச செயலாளர் எல்.சத்தியசீலன் அறிவித்துள்ளார். (ந-3)

# முல்லைத்தீவுக்குச் செல்ல படையினர் அனுமதி மறுப்பு

(முல்லைத்தீவு)

செஞ்சிலுவைச்சங்க பணிகளை முன்னெடுக்கும் முகமாக முல்லைத்தீவை நோக்கி பயணித்த இலங்கை செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் பயணித்த வாகனத்தை மாங்குளம், முல்லைத்தீவு வீதியில் வைத்து படைத்தரப்பினர் முல்லைத்தீவுக்கு செல்ல விடாது திருப்பி அனுப்பியுள்ளனர்.

முல்லைத்தீவில் மக்கள் மீளக்குடியேறிய பகுதியில் செஞ்சிலுவைச்சங்க பணிகள் தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் அங்கு இடம் பெற்ற செஞ்சிலுவைச்சங்க இடைக்கால நிர்வாகக் கூட்டத்தில் கலந்து கொள்ளவுமே இவர்கள் முல்லைத்தீவை நோக்கி பயணித்திருந்தனர்.

இது தொடர்பில் இலங்கை செஞ்சிலுவைச்சங்க வடக்கு இணைப்பாளரும் யாழ். மாவட்டச் செயலாளருமான பாலகிருஷ்ணன் தெரிவிக்கையில்,

தாம் முல்லைத்தீவு நோக்கி பயணித்துக் கொண்டு இருக்கையில் மாங்குளம், முல்லைத்தீவு வீதியில் வைத்து இடைமறித்த படையினர் முல்லைத்தீவுக்கு செல்வதாயின் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி தேவை என கூறியே அங்கு செல்லவிடவில்லை என குறிப்பிட்டார்.

இதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்திற்கு இலங்கை செஞ்சிலுவைச்சங்கத்தின் இடைக்கால நிர்வாகம் ஒன்று நியமனம் செய்யப்பட்டுள்ளது. (ந-5)

B.Sc. in Computer Science
Qualification: O/L OR A/L OR HND
Duration: 2 - 2 1/2 Years
A/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான
புதிய பிரிவு ஆரம்பம்
01-09-2010
Diploma in Multimedia with IT
Duration: 1 Year
Qualification: O/L
16 July 2010
Colombo BMICH இல் நடைபெற்ற
8th International Convocation
இல் பட்டம்பெற்ற
NORTH LANKA IIT நிறுவன மாணவர்கள்..



இலங்கைக்கான
Malaysian High Commissioner
இடமிருந்து பட்டம்பெறும்
NORTH LANKA IIT
கணினிப் பட்டதாரி மாணவன்



மேற்படி கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன!
மேலதிக விபரங்களுக்கு:
NORTH LANKA IIT
#113, Laxan Plaza,
Navalar Road, Jaffna.
0213214305

# கண்காட்சியும் கலந்துரையாடலும்

(யாழ்ப்பாணம்)

சிவத்தமிழ் மானிட விடியற் கழகத்தின் ஏற்பாட்டில் சிறகுவிரிக்கும் சிட்டுக்கள்சிறுவர்நல்வாழ்வுக்கண்காட்சி இன்று நல்லூர் மூத்ததம்பி மடத்தில் அமைந்துள்ள சமூக அபிவிருத்தி மன்றத்தில் இன்று ஆரம்பமாகின்றது.

இக் கண்காட்சித்தொடராக இன்று மாலை 6.00 மணிக்கு எமது சிறுவர் நல்வாழ்வில் சமூகத்தின் பங்கு என்ற தொனிப்பொருளில் பல்துறை சார்ந்தோரின் கலந்துரையாடல் நல்லூரிலுள்ள சமூக அபிவிருத்தி மன்றத்தில் இடம்பெறும்.

இதில் ஆர்வமுள்ளவர்களைக் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டுக் குழுவினர் கேட்டுள்ளனர். (ந-5)

## நல்லூரில் மாயாஜால காட்சி

(யாழ்ப்பாணம்)

இந்தியாவின் பிரபல மெஜிக் மாயாஜால சாகச விற்பன்னர் பேராசிரியர் பிரதீப் ஹுடினோ வழங்கும் மாயாஜால காட்சி இன்று மாலை 7 மணிக்கு நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் இடம்பெறும்.

இக் காட்சி தொடர்ந்து ஏனைய நாட்களிலும் இடம்பெறுமென ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ச-5)

## மாட்டுச் சவாரி

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை விவசாயிகளினால் நடத்தப்படும் மாபெரும் மாட்டு வண்டி சவாரிப்போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு கொத்துத்துறை சவாரித்திடலில் இடம் பெறவுள்ளது. (ந)




கணினி திருத்தம்
(Computer Repair)
உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடனடியாக உங்கள் வீடுகளுக்கே வந்து உரியமுறையில் திருத்தித் தருகிறோம்.(Computer Repair)
அழையுங்கள் :-
0777483840 (2279)

## ஆயுள் தண்டனை கைதிக்கு மன்னிப்பு

(கொழும்பு)

பெண்ணொருவரை கொலை செய்தமை சம்பந்தமாக குற்றவாளியாக காணப்பட்டு ஆயுள்தண்டனை விதிக்கப்பட்ட இரத்தின புரி சமன் ஆலயத்தின் முன்னாள் பஸ்நாயக்க நிலமே என்டன் தென்னக்கோன், ஜனாதிபதி வழங்கிய பொது மன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

தனது மனைவியை கொலை செய்த குற்றத்துக்காக 2007ஆம் ஆண்டு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட தென்னக்கோன் வெலிகடை சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

இரட்டைக் கொலை சம்பவம் தொடர்பாக மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்த அமைச்சர் மில்ரோய் பெர்ணான்டோவின் மனைவிக்கு, ஜனாதிபதி ஏற்கனவே பொது மன்னிப்பு வழங்கி விடுவித்தமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

சேவை முகவர்
காணிகள், வீடு விற்பனைக்கு
சுந்தர்மடம், மணல்தறைலேன், வைமன் றோட், நல்லூர், மருதடி வீதி, பொற்பதி வீதி, பழம்றோட், கோண்டாவில், திருநெல்வேலி, 4, 3, 11/4, 2 பரப்பு அளவுகளில் நல்லூர்,யாழ்ப்பாணம்ஆகியஇடங்களில் விற்கவிரும்புவோர்தொடர்புகொள்ளவும்.
தொடர்பு : V.சுந்தரம்
222 9177
0714624830 (2278)

# Midea Electro Mart

Authorized Dealer for Abans Ltd.

**PRINTER**
HP p1102 Laserjet-16,500/=
HP deskjet 3920-6500/=

**SCANNER**
CANON LIDE 100-6900/=
HP G 2410-8900/=





| PERSONAL PC SYSTEM | INTEL ATOM PC SYSTEM | INTEL DUAI CORE PC SYSTEM | INTEL CORE 2 DUO PC SYSTEM |
|---|---|---|---|
| PROCESSOR | Intel Atom 1.6 GHZ | Intel Dual core2.7GHZ | Intel core2 Duo 2.93 GHZ |
| MOTHER BOARD | Intel 945 GNL Main Board | Intel Chipset G31 main Board | Intel Chipset G31 main Board |
| MEMORY | 1GB DDR-II, 800MHZ | 1GB DDR-II 800MHZ | 1GB DDR-II, 800MHZ |
| HART DISK | 250GB SATA-7200RPM | 250GB SATA-7200RPM | 250GB SATA-7200RPM |
| DISK DRIVE | LG DVD Writer | LG DVD Writer | LG DVD Writer |
| CASING | ATX 500W Ccivo | ATX 500W Ccivo | ATX 500W Ccivo |
| MONITER | 16" LCD AOC | 16" LG LCD | 19" LG LCD |
| KEY BOARD | Multimedia ps\2 | Multimedia ps\2 | Multimedia ps\2 |
| MOUSE | Optical USB\Ps2 | Optical USB\Ps2 | Optical USB\Ps2 |
| SPEAKER | Genius Multimedia 900W | Genius Multimedia 900W | Genius Multimedia 900W |
| UPS | Luminous 650VA | 1 Luminous 650VA | 1Luminous 650VA |
| PRICE | 40,900/= | 45,900/= | 54,900/= |

## COMPACQ CQ3014 DESKTOP PC

| | |
|---|---|
| PROCESSOR | Intel core2 Duo 2.8 Ghz E7400 |
| MEMORY | 2 GB DDR2 |
| HART DISK | 340 GB 3Gb/s Hard Disk |
| DISK DRIVE | DVD Writter |
| MONITER | 19" LG LCD |
| UPS | Toyostar 650 VA |
| SPEAKER | 900w |
| MOUSE | Compaq |
| KEYBOARD | Compaq |
| Price Rs. | 75,900/= |





Huawei e1750 Multi Dongle



D Link Wireless Router Rs. 8,300/=

உத்தரவாதத்துடன் இலவச விநியோகத்தைப் பெற்றிடலாம்



Logitech c120 Web Cam Rs. 2,350/=

| LAPTOPS | COMPACQ 620 | HP MINI | COMPACQ 420 |
|---|---|---|---|
| PROCESSOR | Intel core 2 Duo 2.2 Ghz E7400 | Atom Intel 1.6Ghz | Intel core 2 Duo 2.2 Ghz E7400 |
| WINDOS | Dos | XP Home Edition | Dos |
| MEMORY | 2 GB | 1 GB | 2 GB |
| HART DISK | 500GB HDD | 160 GB | 320GB HDD |
| DISK DRIVE | DVD Writter | Nill | DVD Writter |
| CAMERA | Web Camera with Mic | web Camera with Mic9" | Web Camera with Mic |
| MONITOR | 16.6" | | 14.6" |
| OTHERS | WIFI Blue Tooth | WIFI Blue Tooth | WIFI Blue Tooth |
| PRICE | 72,900/= | 46,900/= | 68,500/= |



Computers Three Years Warranty

**Show Room**

No:1-1, 1-H, STANLEY ROAD,
JAFFNA, SRI LANKA.
TEL: 021 222 4566, FAX: 021 222 1646
E-mail: midea21@gmail.com



Register now and save

CIMA
Chartered Institute of Management Accountants

# AnnouncemEnt

CIMA introduces new pricing



Register now

## Save Rs.14,850

CIMA is now more affordable at Rs. 9,600

Call 2503880

# நல்லூர் மஹோற்சவத்தை முன்னிட்ட நிகழ்வுகள்

(நல்லூர்)

நல்லூர் முருகன் உற்சவ காலத்தை யொட்டி நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தி னால் தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ் தானத்தின் அனுசரணையுடன் நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் நடைபெற்று வரும் தெய்வீக இசையரங்கில் 15 ஆம் நாளான இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணிமுதல் 7.30 மணிவரை திருமதி சிவரஞ்சனி ரமணா (பாட்டு), கே.குகபரன் (வயலின்), வி.ரமணா (மிருதங்கம்), கே.நந்த குமார் (முகர்சிங்) ஆகியோர் வழங்கும் திரு முறைக் கச்சேரி இடம்பெறவுள்ளன.

✦ ✦ ✦

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக் களத்தினால் நல்லூர் கந்தசுவாமி கோவில் மஹோற்சவ காலத்தில் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் ஆத்மீக சிந்தனையுடன் நடைபெற்று வரும் சமயச் சொற்பொழிவு மற்றும் கலை நிகழ்வுகள் இன்று பிற்பகல் 3 மணிமுதல் 6 மணிவரை நடைபெறவுள் ளன. இதில் 'குருவாய் வருவாய்' என்னும் விடயம் பற்றி கவிமணி அன்னைதாசன் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார்.

தொடர்ந்து மாதகல் காந்திஜீ அறநெறிப் பாடசாலை, இளவாலை சித்திரமேழி ஞான வைரவர் அறநெறிப்பாடசாலை, சுழிபுரம் ஜெக சோதி அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

✦ ✦ ✦

நல்லைக்கந்தன் ஆலய மஹோற்ச வத்தை முன்னிட்டு நல்லூர் சைவ மகா சபையினால் நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீன குருமூர்த்த மண்டபத்தில் நடை பெற்று வரும்' வில்லிபாரதம்' என்னும் தெய்வீகத் தொடர் இசைப் பேருரையில் இன்று மாலை 6.30 மணிக்கு' அரங் கேற்றம்' என்னும் பொருளில் பிரம்ம ஸ்ரீ சிவ. வை.நித்தியானந்த சர்மா தொடர் இசைப் பேருரை நிகழ்த்தவுள்ளார். (6)

# பெண்களுக்கான கரப்பந்தாட்டப்போட்டி

ஜனாதிபதி தங்க வெற்றிக் கிண்ணத் துக்கான பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிமுதல் இமையாணன் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கரவெட்டி பிரதேசத்திற்குட்பட்ட கழகங்க ளுக்கிடையில் நடைபெறும் இப்போட்டிக்கு, கழகத் தலைவர் மற்றும் செயலாளர் ஆகி யோர் குறித்த நேரத்தில் தமது அணிகளை போட்டிக்கான தயார் நிலையில் வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

அத்துடன் மேற்படி போட்டிகளின் போட்டி அட்டவணை இன்று தீர்மானிக்கப்படும் என் றும் போட்டிகளில் சம்பியனாகும் அணி மா வட்ட மட்ட போட்டிகளுக்கு தகுதி பெறும் என் றும் கரவெட்டிப் பிரதேச செயலர் எஸ். சத்திய சீலன் அறிவித்துள்ளார். (24)

# நல்லூரில் இந்து ஒளி வெளியீட்டு விழா

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் காலாண்டிதழான 'இந்து ஒளி' ஆடி – புரட்டாதி வெளியீடு நல்லைக் கந்தன் மஹோற்சவ சிறப்பிதழாக மலர்ந்துள்ளது.

இதன் வெளியீட்டு வைபவம் எதிர்வரும் 31 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 11 மணிக்கு நல்லைக் கந்தன் ஆலய வீதி யிலுள்ள ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத் தில் நடைபெறவுள்ளது.

இந்து மாமன்றத்தின் உபதலைவர் செஞ் சொற்செல்வர் ஆறு.திருமுருகன் தலைமை யில் இடம்பெறும் இந்நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் கலந்து கொண்டு ஆசியுரை வழங்குவது டன், இந்து ஒளி சிறப்பிதழின் முதற்பிரதி யையும் பெற்றுக் கொள்வார். (6)

# சிறப்புச்சொற்பொழிவு

(நல்லூர்)

வளலாய் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான மஹோற்சவம் நடைபெற்று வருகின்றது.

இதனை முன்னிட்டு கடந்த 20 ஆம் திகதி தொடக்கம் "மகாபாரதம்" என்னும் தலைப் பில் யாழ். பல்கலைக்கழக மாணவன் ச.கஜீந்தன் தினமும் இரவு 7 மணி தொடக் கம் 8 மணிவரை தொடர் சொற்பொழிவாற்றி வருகின்றார். (6-2-134)

✦ ✦ ✦

(யாழ்ப்பாணம்)

வதிரி உல்லியனொல்லை அருள்மிகு கண்ணகை அம்மன் ஆலய உற்சவத்தை யொட்டி நடைபெற்று வரும் சிறப்புச் சொற் பொழிவுகளில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6.15 மணிமுதல் 7.15 மணிவரை "தாபநிவாரணி" எனும் தலைப்பில் வவு னியா மாவட்ட தமிழ் சங்கத் தலைவரும், வவு.தமிழ் மத்திய மகா வித்தியாலய ஆசி ரியருமான தமிழருவி த.சிவகுமாரன் சொற் பொழிவாற்றவுள்ளார். (6)

# இராசி பலன்

29-08-2010
(ஆவணி 13, ஞாயிற்றுக்கிழமை)
பஞ்சமி முழுவதும்
ரேவதி காலை 7.20 மணிவரை
இராகுகாலம் 4.35-6.05 மணிவரை
சுபநேரம் 9.05-10.35 மணிவரை
அமிர்த சித்தம்.

**மேடம்** உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், கொடுத்த வாக்கை காப்பாற்ற நண்பர்கள் கடைசி நேரத்தில் உதவுவர், கனவு பலித முண்டு.

**இடபம்** விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், பக்குவமாகப் பேசி காரியங்களை சாதிப்பீர்கள், சேமிப்பில் சிறிது கரையலாம், மாலை நேரத்தில் குடும்பத்தின ருடன் குதூகலப்பயணம் ஒன்றை மேற்கொள் வீர்கள்.

**மிதுனம்** எண்ணிய காரியங்கள் உடனுக்குடன் நிறைவேறும், தனவரவுகள் தாரா ளமாக வந்து சேரும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்.

**கடகம்** வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்து கொள்ளும் நாள், குடும்பத் தில் கலகலப்பான சூழ்நிலை உருவா கும், நல்ல தகவலைத் தரும் செய்தி யொன்று வந்து சேரலாம்.

**சிங்கம்** தேக ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், சொத்துக்களால் இலாபம் கிட்டும், போட்டியாக இருந்தவர்கள் விலகுவர், பேச்சில் கவர்ச்சி ஏற்படும்.

**கன்னி** கவலைகள் தீர வழிபாடு தேவை, குடும்ப பெரியவர்கள் உங்களின் செயற்பாடுகளில் குறை கண்டு பிடிக்கலாம், மறதியால் சில தொல் லைகளுக்கு ஆட்பட நேரிடும்.

**துலாம்** சந்தித்தவர்களால் சந்தோசம் அதி கரிக்கும் நாள், தம்பதியினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், திட்டமிட்ட வெளியூர் பயணங்களை செல்ல நேரிடலாம்.

**விருச்சிகம்** திட்டமிட்ட காரியங்கள் திட்டமிட்ட படியே நடக்கும்நாள், பொது வாழ்வில் புகழ் கூடும், மனக்குழப்பம் அகலும், பயணங்களால் பலன் உண்டு.

**தனுசு** வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரும் நாள், கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, தடைப்பட்ட காரியங்கள் கைகூடும், கனவுகள் நனவாகலாம்.

**மகரம்** வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடை யும்,மனதிற்கினிய செய்திகள் வந்து சேர லாம், மதிப்பும், மரியாதையும் கிடைக் கும்நாள், விழாக்களில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம்.

**கும்பம்** எடுத்த காரியங்களில் வெற்றி கிட்டும் நாள், காலையில் நிறுத்தி வைத்த வேலை யொன்றை மாலையில் முடிப்பீர்கள், பகைவர்கள் உங்களைவிட்டு விலகுவர், வழி பாட்டால் பெருமை சேர்க்கும் நாள்.

**மீனம்** எதிர்பாராத தனலாபம் வீடு வந்து சேரலாம், ஆடை, ஆபரண சேர்க் கையுண்டு, சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகி மன நிம்மதியை ஏற் படுத்தும், வாகனசுகம் உண்டு.

வளவன்

# வாரம் ஒரு தகவல்

## சத்தமில்லாத யுத்தம்

"சரசு உன் வீட்டுக்காரர் எங்கே?"

"அரசியல்வாதியானதற்குப்பின் அவர் எங்கே வீட்டில் தங்கிறார்? எந்த ஊரில் எந்த மேடையில் பேசிக் கொண் டிருக்கிறாரோ?"

"பேசட்டும் பரவாயில்லை. ஆனால் சத்தம் போட்டுப் பேசச் சொல்லாதே"

"ஏன்?"

"சத்தம்போட்டுப் பேசுபவர்களுக்கு குரல்வளை பாதிக்கப்படுவதாக டாக்டர்கள் சொல்கிறார்கள்."

"அப்படியா?"

"ஆமாம். 16 விதமான நோய்கள் குரல்வளையைப் பாதிக்கிறதாம். முக்கியமாக பாதிப்புக்குள்ளாகிறவர்கள் யார் தெரியுமா?"

"யார்?"

"ஆசிரியர்கள், பாடகர்கள், அரசியல்வாதிகள்"

"அப்படியானால் இவர்களெல்லாம் பாடம் நடத்தினா லும் பாடினாலும் பேசினாலும் அதிக சத்தம் போடா மல் இருப்பது நல்லது என்கிறாயா?"

"ஆமாம், அதனால் தான் எனது வீட்டுக்காரரிடம் கூடச் சொல்லி வைத்திருக்கின்றேன்."

"என்ன சொல்லி வைத்திருக்கின்றாய்?"

"என்னைத் திட்டுவதென்றால் கூட மெதுவாகத் திட்டுங்கள் என்று சொல்லி வைத்திருக்கின்றேன்."

"உங்களுக்குள் சண்டைவருமா?"

"என்ன அப்படிக்கேட்டு விட்டாய்? தினமும் சண்டை சச்சரவுதான் இருந்தாலும் பக்கத்து வீட்டுக்குக் கூட கேட்காது."

"ஆச்சரியமாக இருக்கிறதே!"

"இருந்தாலும், அடுத்த ஜென்மத்திலும் அவரே என் கணவராக வரவேண்டும் என்று வேண்டிக் கொண்டிருக் கிறேன்."

"அப்படியா?"


"ஆமாம். போடவேண்டிய சண்டை இன்னும் பாக்கி இருக்கிறது."

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 100 | 70 |
| தக்காளி | 90 | 50 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 60 |
| கோவா | 90 | 80 |
| கரட் | 100 | 90 |
| பூசணி | 50 | 30 |
| புடோல் | 40 | 40 |
| வாழைக்காய் | 60 | 50 |
| சின்ன வெங்காயம் | 70 | 50 |
| பெரிய வெங்காயம் | 80 | 70 |
| பாகற்காய் | 100 | 90 |
| வெண்டிக்காய் | 80 | 40 |
| கரணைக்கிழங்கு | 80 | 80 |
| பயிற்றங்காய் | 120 | 100 |
| லீக்ஸ் | 140 | 120 |
| பீற்றூட் | 60 | 40 |
| கறிமிளகாய் | 100 | 80 |
| முருங்கைக்காய் | 140 | 100 |
| போஞ்சி | 160 | 80 |
| கத்தரி தம்புள்ள | 50 | 40 |
| கீரை – 1 பிடி | 25 | 30 |
| தேசிக்காய் | 80 | 90 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 |

# கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு முச்சக்கர வண்டி அன்பளிப்பு



யாழ் கொக்குவில் இந்துக்கல்லூரிக்கு பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முச்சக்கரவண்டியொன்றை அன்பளிப்புச் செய்துள்ளார்.

நேற்று அமைச்சரின் யாழ் அலுவலகத்தில் வைத்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் சார்பில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி யின் யாழ் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்த்திரி அலன்ரின் இதனை வழங்கினார்.

கொக்குவில் இந்துக்கல்லூரி கல்விச் சமூகத்தினர் அமைச்சரிடம் விடுத்த வேண்டுகோளுக்கு அமைவாக இந்த முச்சக்கர வண்டி கையளிக்கப்பட்டது.

இந்த வைபவத்தில் கல்லூரி அதிபர் அ.அகிலதாஸ், பழைய மாணவர் சங்கத் தலைவர் அ.பஞ்சலிங்கம், பிரதி அதிபர்களான க.வேலாயுதம், க.வேலாயுதபிள்ளை மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் இ.செல்வநாதன் ஆகியோர் கலந்து கொண்டு முச்சக்கர வண்டியைப் பெற்றுக்கொண்டனர்.

அண்மையில் ஊர்காவற்துறை மற்றும் வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் அமைச்சர் முச்சக்கர வண்டியினை அன்பளிப்புச் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (6)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் சமூக கற்கைகள் துறையினரால் நடத்தப்படும் சமூக விஞ்ஞானத்தில் சான்றிதழ் கற்கை நெறி (Certificate in Social Sciences), இளைஞர் அபிவிருத்தியில் டிப்ளோமா Diploma in youth Development), கலைமாணி (BA in Social Sciences), அபிவிருத்திக்கொள்கையில் முதுகலைமாணி (MA in Development studies and public policy) ஆகிய கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கான விண்ணப்பப்படிவங்களை யாழ். பிராந்திய நிலையத்தில் பெற்று எதிர்வரும் 12ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு யாழ்.பிராந்திய நிலைய இணைப்பாளர் கேட்டுள்ளார். (6)

# மாபெரும் டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு ஊர்வலம்

(அல்வாய்)

வடமராட்சிப் பிரதேசத்தில் பருத்தித்துறை கல்விச் சமூகம் ,வர்த்தக சமூகம் மற்றும் ஏனைய ஸ்தாபனங்கள் , பொதுமக்கள் ஆகியோர் இணைந்து நடாத்தும் மாபெரும் டெங்கு ஒழிப்பு ஊர்வலம் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு பதாகைகளுடன் பருத்தித்துறை நகரிலிருந்து மந்திகை ஆதார வைத்தியசாலையில் உள்ள மாவட்ட சுகாதார அத்தியட்சகர் காரியாலயம் வரை ஊர்வலமாகச் செல்லவுள்ளது.

அத்துடன் பருத்தித்துறை புலோலி பகுதிகளிலுள்ள அரச அலுவலகங்களுக்கும் பிரதேச செயலக மட்ட டெங்கு ஒழிப்பு குழுவினால் இவ் ஊர்வலத்தில் கலந்து கொள்வதற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

சுகாதார விழிப்புணர்வு,சுகாதார ஊர் வலங்களின் மூலம் பொதுமக்களுக்கு டெங்கு தொடர்பான விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த முடியும் என வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராஜா தெரிவித்துள்ளார். (6-19)

# தேசிய பாலுற்பத்தியினை அதிகரிக்க நடவடிக்கை

(கொழும்பு)

தேசிய பாலுற்பத்தியினை அதிகரிப்பதற்காக கால்நடை மற்றும் கிராம சமூக அபிவிருத்தி அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானால் 13 பேர்கொண்ட குழு அமைக்கப்பட்டது.

இக்குழுவில் கால்நடை மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சின் மேலதிக செயலாளர் கலாநிதி.அஜந்தா ஹேவ கோப்ரா, அமைச்சரின் இணைப்பாளர் மொஹமட் காதர், எல்.எம்.எவ்.ஹெரி ஜெயவர்த்தன, மில்கோ நிறுவனத் தலைவர் சுனில் விக்கிரம சிங்க, கலாநிதி எ.சக்திவேல், டாப்பணிப்பாளர் கலாநிதி டி.ஆர்.டி.ஜி.ரத்நாயக்க, என். எல். டி.பி. லக்ஷ்மன் ஹுலு கெல, நெஸ்லே லங்கா நிறுவனத்தின் கியூ.பி. விஜேதுங்க ஆரியசீல, விக்கிரமநாயக்க ஜுட் பெர்னாந்து, போதேஜுத எச். எம்.பி. ஹேரத் , என்.எஸ். பத்திரன ஆகியோர் உள்ளடங்குவர்.

இக்குழு எதிர்வரும் காலங்களில் தேசிய பாலுற்பத்தியினை அதிகரிப்பதற்கான ஆலோசனைகளை பரிந்துரை செய்யும் என்று தெரிய வருகிறது.

இந்த குழுவின் தலைவராக நியமிக்கப்பட்ட லங்கா மில்க் புட்ஸ் நிறுவனத்தின் தலைவர் ஹெரி ஜயவர்த்தன தலைமையில் 13 பேர் கொண்ட குழு அமைச்சின் கேட்போர் கூடத்தில் தனது முதலாவது கூட்டத்தினை கடந்த வியாழக்கிழமை நடத்தியது.

இக்கூட்டத்தில் கால்நடைகளை பெருக்குவதற்கான புதிய உபாய முறைகளும் அதிக பாலினை பெறுவதற்கு வெளிநாட்டு இறக்குமதியினை முற்றாக நிறுத்தி தேசிய உற்பத்தியின் மூலம் மக்களின் தேவையினை நிறைவு செய்வதற்கான வழி முறைகள் பற்றி ஆராயப்பட்டன.

இலங்கையின் மொத்த பால் தேவையினை நிறைவு செய்வதற்கு 400 மில்லியன் ஏக்கர்கள் தேவைப்படுவதாகவும் அந்த இலக்கினை அடைவதற்கு எல்லா பாலுற்பத்தியாளர்களும் ஒன்றிணைந்து ஒரு திட்டத்தினடிப்படையில் செயற்படுவது அவசியம் எனவும் குறிப்பிடப்பட்டது.

மேலும் கால்நடை வைத்தியர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் கண்டறியப்பட்டு அதற்கு தீர்வு காணப்பட வேண்டும் என்பதுடன் பாலுற்பத்தியுடன் தொடர்புடைய இறக்குமதி தீர்வைகள் நீக்கப்படவேண்டும் எனவும் இதில் பரிந்துரை செய்யப்பட்டது. (6)


யாழ். நகரில் 50 வருடத்திற்கு மேற்பட்ட வியாபாரத்துறையில் அனுபவம் பெற்ற நிறுவனத்தினர் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வன்னி பெருநிலப்பரப்பு மக்களுக்கு உதவும் முகமாக கிளிநொச்சி கரடிப்போக்கு இலங்கை வங்கிக்கு அருகாமையில் 27.08.2010 அன்று ஆரம்பித்துள்ளோம்.

மொத்தமாகவும் சில்லறையாகவும் நியாயவிலையில் பெற்றுக் கொள்ளலாம்

எம்மிடம் கீழ் காணும் பொருட்கள்










- ☆ கட்டடப் பொருட்கள், கம்பி, சீமெந்து, கூரைத்தகடு
- ☆ பெயின்ற் வகைகள்
- ☆ சைக்கிள், சைக்கிள் உதிரிப்பாகங்கள்
- ☆ National P.V.C குழாய் மற்றும் குழாய் இணைப்புகள்
- ☆ கோழிவலை, இதர வலைகள்

இ.ச.பே. நாகரத்தினம் அன் கோ
A9,கரடிப்போக்கு,
கிளிநொச்சி.

சி-(948)

# பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் தங்கியுள்ள வீட்டைக் காலிசெய்து தரும்படி கோரி அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கு

(கொழும்பு)

பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு பெண் பொலிஸார் தங்கியுள்ள தமது வீட்டைக்காலி செய்து தரும்படி கோரி அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு வெள்ளவத்தையை நிரந்தர வசிப்பிடமாகவும் தற்காலிகமாக சுவிற்ஸர்லாந்து நாட்டில் தங்கி இருப்பவர்களுமான சண்முகம் சிவராசா, சரோஜினிதேவி சிவராசா ஆகிய இருவருக்கும் சொந்தமான இல 18, 18/1, 18/2 பயங்கரவாத புலனாய்வு பிரிவு பெண் பொலிஸார் கடந்த 26.06.09 இல் இருந்து தங்கியுள்ளதனால் தமது அடிப்படை மனித உரிமை மீறப்பட்டுள்ளதாக சட்டத்தரணி, கௌரிசங்கரி தவராசா மூலம் உயர் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்திருந்தனர்.

இந்த வழக்கில் பயங்கரவாத புலனாய்வு பிரிவின் பொறுப்பதிகாரி பிரசன்னா டிஅல்விஸ், பொலிஸ் மா அதிபர் பாலசூரிய, பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, பாதுகாப்பு உதவி செயலாளர் பாலசூரிய, சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

18/1 இலக்கம் கொண்ட முதலாம் மாடி வீட்டை மனுதாரரிடம் ஒப்படைக்கும்படியும் நஷ்ட ஈடாக ரூபா 10 இலட்சம் மனுதாரருக்கு வழங்கும்படி உத்தரவிடும்படியும் அந்த அடிப்படை மனித உரிமை மீறல் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த மனுவில் மேலும் கூறப்பட்டதாவது, மனுதாரர்களுக்கு சொந்தமான மாடி கட்டிடத்தில் முதலாவது மாடி மருத்துவ சேவை நிலையமொன்றிற்கு வாடகைக்கு விடப்பட்டதாகவும் 26.06.09 இல் பயங்கரவாத புலனாய்வு பொலிஸ் பிரிவைச் சேர்ந்த பொலிஸார் அங்கு வந்து முதலாம் மாடியை முற்றாக சோதனையிட்டதுடன் அங்கு கடமையிலிருந்த பணியாட்கள் இரண்டு பேரையும் கைது செய்ததுடன் முதல் மாடியையும் பூட்டு திறப்புகளை தங்களுடன் எடுத்துச் சென்றதாகவும் பின்னர் பயங்கரவாத புலனாய்வு பிரிவில் கடமையாற்றும் பெண் பொலிஸார் பலாத்காரமாக தற்பொழுதும் அங்கு வசித்து வருவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

முதலாம் மாடி வீட்டை திரும்ப தங்க ளுக்கு ஒப்படைக்கும்படி கேட்கப்பட்ட பொழுது அதனை திரும்ப ஒப்படைக்க புலனாய்வுப் பிரிவினர் மறுத்ததாகவும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்த பொழுது பயங்கரவாதப் புலனாய்வு பிரிவிற்கு சார்பாக ஆஜராகிய சிரேஷ்ட அரச சட்டத் தரணியால் அம்சா நீதிமன்றில் தாங்கள் மாடி வீட்டில் உரிமையாளர்களான மனுதாரர்களுடன் இணக்கப்பாட்டிற்கு வருவதாகவும் முதலாம் மாடி வீட்டை மனுதாரர்களுக்கு திரும்ப ஒப்படைப்பது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதாகவும் அதற்காக கால அவகாசம் தருமாறும் கோரினார்.

இந்த மனுவை விசாரணை செய்த நீதியரசர்கள் அரசசட்டத்தரணியின் வேண்டுகோளையடுத்து இந்த மனுவின் மேலதிக விசாரணையை ஒக்டோபர் மாதம் 29 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார். (6)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்

இளம் வயதில் 'பேராசிரியர்' என்ற மிக உயர்ந்த பதவியைப் பெற்றுக் கொண்டுள்ள எங்கள் ஆசானை வாழ்த்துகின்றோம்.



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர்

கலாநிதி

கிருஷ்ணபிள்ளை விசாகரூபன்

அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தினால் அண்மையில் பேராசிரியராகப் பதவி உயர்த்தப் பட்டுள்ளார்.

தமிழ்த்துறையின் புகழ்பூத்த பேராசிரியர்களான சு.வித்தியானந்தன், க.கைலாசபதி, கா.சிவத்தம்பி, ஆ.வேலுப்பிள்ளை, அ.சண்முகதாஸ், எஸ்.சிவலிங்கராஜா என்ற வரிசையில் எங்கள் ஆசானும் இடம்பெறுகின்றமை குறித்து மிகவும் பெருமை கொள்கின்றோம். பேராசிரியரின் பணிக்காலத்தில் தமிழ்த்துறை எல்லா நிலைகளிலும் சிறந்தோங்க உளமார வாழ்த்துகின்றோம்.

"வாழ்க தமிழ்! வளர்க அவரின் தமிழ்ப் பணி"

பாராட்டி வாழ்த்துவோர் :

திரு.கனகசபை உருத்திரகுமாரன் (J.P) B.A, M.A (Tamil)
ஆசிரியர் யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி

திரு.சிவபாதசுந்தரம் சிவகுமார் B.A(Hons), M.A (Tamil)
ஆசிரியர் யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி

(2271)


# அற்றைத்திங்கள் கூத்துருவ நாடகம்

(கொழும்புத்துறை)

திருமறைக் கலாமன்றத்தின் திறந்த வெளி அரங்கில் *அற்றைத்திங்கள்* எனும் கூத்துருவ நாடகம் இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை 6 மணிக்கு மேடையேற்றப்படவுள்ளது.

*முல்லைக்கு தேர் கொடுத்து பாரி மன்னனின்* வரலாற்றை சித்தரிக்கும் மேற்படி ஆற்றுகையில் 64 கலைஞர்கள் பங்கு பற்றுகின்றனர்.

அத்துடன் இவ் ஆற்றுகையினை திருமறைக்கலாமன்றபிரதி இயக்குனர் யோ.ஜோன்சன் ராஜ்குமார் எழுதி நெறியாள்கை செய்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (6-51)

# சுகாதாரமற்ற முறையில் உணவு விற்பனை செய்த 212 உணவு விடுதிகளுக்கு வழக்கு

(கொழும்பு)

கொழும்பு நகரில் சுகாதாரமற்ற விதத்தில் உணவுகளை விற்பனை செய்த 212 உணவு விடுதிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்வதற்கு கொழும்பு மாநகர சபை தீர்மானித்துள்ளது.

கடந்த நான்கு தினங்களில் கொழும்பு மாநகர சபைக்குட்பட்ட 550 இற்கும் அதிகமான உணவுவிடுதிகள் சோதனையிடப்பட்டதாக கொழும்பு மாநகர சபையின் பிரதம சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் பிரதீப் காரியவசம் குறிப்பிட்டார்.

குறித்தவிடுதிகளில் தூய்மையற்ற முறையில் உணவு தயாரிக்கப்படுவதாக சுட்டிக்காட்டிய அவர், விடுதிகளில் உணவு வாங்கும் போது மக்கள் விழிப்புடன் செயற்பட வேண்டும் எனவும் உணவின் நிறம் மாற்றமடைந்திருந்தாலோ அல்லது வித்தியாசமான மணம் தோன்றினாலோ அது தொடர்பில் தமக்கு அறிவிக்கவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டுள்ளார்.

இவ்வாறான முறைப்பாடுகளை 011 2676161 என்னும் இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தமக்கு அறிவிக்க முடியும் என மாநகர சபையின் பிரதம சுகாதார வைத்திய அதிகாரி மேலும் தெரிவித்தார். (6)

# அங்கவீனமுற்றவர்களுக்கென தனியான வைத்தியசாலை

(கொழும்பு)

அங்கவீனமுற்றவர்களுக்கு புனர்வாழ்வளிக்கும் முகமாக விசேட வைத்தியசாலை ஒன்றை நிர்மாணிப்பதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

ஹந்தலையில் அமைந்துள்ள வைத்தியசாலை வளாகத்தில் இந்த புதிய வைத்தியசாலை நிர்மாணிக்கப்படவுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

இந்த வைத்தியசாலையில் தீடிர்விபத்துக்கள் காரணமாக அங்கவீனமுற்றவர்களுக்கு புலனாய்வு அழிக்கப்படவுள்ளதுடன் இதற்காக விசேட பயிற்சிகளைப் பெற்ற குழுவொன்று நியமிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (6)

# வடக்கின் வீதி அபிவிருத்தி பணிகளுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியுதவி

(கொழும்பு)

வடக்கின் வீதி அபிவிருத்தி பணிகளுக்காக ஆசிய அபிவிருத்தி வங்கி 154.4 மில்லியன் அமெரிக்க டொலர்களை நிதியுதவியாக வழங்கவுள்ளது.

173 மில்லியன் அமெரிக்க டொலர்கள் முதலீட்டில் முன்னெடுக்கப்படவுள்ள இந்த திட்டத்திற்காக அரசாங்கம் 18.6 மில்லியன் அமெரிக்க டொலர்களை செலவிடவுள்ளது.

இந்த திட்டத்தின் மூலம் வடக்கு மாகாணத்தில் உள்ள வீதிகளை புனரமைப்பதற்கும் வடக்கு மற்றும் தெற்கு மாகாணங்களை இணைப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தின் கீழ் வடக்கில் 108 கிலோ மீற்றரும் வடமத்திய மாகாணத்தில் 62 கிலோ மீற்றருமாக 170 கிலோ மீற்றர் தேசிய நெடுஞ்சாலை புனரமைக்கப்படவுள்ளது.

அத்துடன் வடபகுதியில் உள்ள வீதிகள் மற்றும் பாலங்கள் புனரமைக்கப்படவுள்ளதுடன் வடக்கு மாகாணத்தில் உள்ள வீதி அபிவித்தி திணைக்களத்தின் அலுவலகமும் புனரமைக்கப்படவுள்ளது.

இந்த திட்டத்திற்கான ஒப்பந்தம் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சில் நேற்று முன்தினம் கைச்சாத்திடப்பட்டதாக அரச தகவல்கள் திணைக்களத்தில் செய்தி வெளியாகியுள்ளது. (6)


இணுவில் மஞ்சத்தடி அருணகிரிநாத சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்

## பரிபாலன சபை

## பொதுச்சபைக் கூட்டம் – 2010

காலம் :- 30.08.2010 திங்கட்கிழமை

நேரம் :- பி.ப 3.30 மணி

இடம் :- கோவில் மண்டபம்

மேற்படி ஆலயத்தின் பொதுச்சபைக் கூட்டத்திற்கு மாண்புமிகு கௌரவ அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்களது வருகையுடனும், நல்லூர் பிரதேச செயலரது பங்குபற்றுதலுடனும் இக்கூட்டம் நடைபெற இருப்பதாலும் புதியதோர் நிர்வாக சபையை தெரிவு செய்ய இருப்பதால் சகல திருவிழா உபயகாரர்களையும் தயவுகூர்ந்து உரிய நேரத்திற்கு இக்கூட்டத்திற்கு சமுகம் தந்து ஒத்துழைக்குமாறு தயவாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

இங்ஙனம்
கா. நடராசா
சந்ததி உரித்துடைய தலைவர்
மஞ்சத்தடி அருணகிரிநாத சிவசுப்பிரமணிய கோயில்.

மஞ்சத்தடி,
இணுவில்.

(2270)

# வெளிநாடுகளில் உயிரிழக்கும் 20க்கு மேற்பட்டோரின் சடலங்கள் மாதந்தோறும் இலங்கைக்கு

## தேசிய காப்புறுதி நிதியத்தின் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

வெளிநாடுகளில் உயிரிழக்கும் 20க்குமேற்பட்டவர்களின் சடலங்கள் மாதந்தோறும் இலங்கைக்கு கொண்டு வரப்படுவதாக தேசிய காப்புறுதி நிதியத்தின் தலைவர் சேனக அபேகுணசேகர தெரிவித்துள்ளார்.

திடீர் விபத்துக்கள் மற்றும் இயற்கைக் காரணங்களினால் வெளிநாடுகளில் உயிரிழக்கும் 20க்கும் மேற்பட்ட இலங்கையர்களின் சடலங்கள் இலங்கைக்குக் கொண்டு வரப்படுகிறது.

வெளிநாடுகளில் பணியாற்றி உயிரிழக்கும் நபர்களின் சடலங்களை நாட்டுக்கு கொண்டு வருவதற்காக நான்கு இலட்ச ரூபா செலவிடப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

காப்புறுதித் தொகையில் சடலத்தை கொண்டு வருவதற்காக செலவிடப்படும் தொகையைத் தவிர்ந்த எஞ்சிய தொகை உறவினர்களுக்கு வழங்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மாதாந்தம் இலங்கையைச் சேர்ந்த பதினெட்டாயிரம் பேர் பல்வேறு நாடுகளில் தொழில் வாய்ப்புப் பெற்றுச் செல்வதாகத் தெரிவித்துள்ளார்.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் ஊடாக வெளிநாடு செல்லும் அனைவரும் தேசிய காப்புறுதி நிதியத்தின் கீழ் காப்புறுதிப் பயன்களைப் பெற்றுக் கொள்வதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.(6)

# முன்னாள் பிரதியமைச்சரின் வீட்டில் கொள்ளைச் சம்பவம்

முன்னாள் பிரதியமைச்சரும் இலங் கைத் தொழிலாளர் காங்கிரஸின் சிரேஷ்ட உறுப்பினருமான ஜெகதீஸ்வரனின் வீடு கொள்ளையிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நுவரெலியா மாவட்டத்தின் ஹட்டன் நகரில் அமைந்துள்ள அவரது வீட்டில் இந்தக் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக லக்பிம சிங்கள நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

சுமார் 15 இலட்ச ரூபா பெறுமதியான தங்க ஆபரணங்கள் மற்றும் பணம் ஆகியன கொள்ளையிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 16 ஆம் திகதி மருத்துவ சிகிச்சை பெற்றுக் கொள்ளும் நோக்கில் குறித்த வீட்டை மூடிவிட்டு கொழும்பு சென்றதாகவும் மீண்டும் வீட்டிற்கு வந்தபோது கொள்ளையிடப்பட்டமை தெரிய வந்ததாக முன்னாள் பிரதியமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை ஹட்டன் பொலிஸார் மேற்கொண்டு வருவதாகவும் இதுவரையில் இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய எவரும் கைது செய்யப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. (6)

# வீதிகள் புனரமைப்பு

(பருத்தித்துறை)

கரவெட்டி பிரதேச சபைக்கு உட்பட்ட 7 வீதிகள் புனரமைக்கப்படவுள்ளன.

இதற்கமைவாக துன்னாலை சரவண பவா வீதி, கோவில் குறுக்கு வீதி, கோவில் சந்தை குறுக்கு வீதி, இரும்பு மதவடி இணைப்பு வீதி, நெல்லியடி சந்தை உள்வீதி, சம்பந்தர் கடையடி இணைப்பு வீதி மற்றும் நெல்லியடி அந்திரான் வீதி ஆகியவை இப் பிரதேசசபையினால் திருத்தம் செய்யப்படவுள்ளன. இதற் கான ஏற்பாடுகளை செயலாளர் வே. குலநாயகம் மேற்கொண்டுள்ளார். (6-2-10)


# Calling for Tender - Teaching Hospital, Jaffna.

## Renovation of ward 24

01. The Chairman of the Divisional Tender Board, Teaching Hospital, Jaffna will receive sealed tender for Renovation of Ward 24, T.H., Jaffna up to 10.00am on 08.09.2010 Tender form may be collected from Director, TH, Jaffna up to 04.09.2010 on payment on non refundable deposit of Rs.2,000/-

02. Tender will be opened immediately after closing, at the office of the Director, Teaching Hospital, Jaffna. Tenders or their authorized representative are requested to be present at the opening of Tenders.

03. Tender forms are issued only to contractors, who have a valid registration in Grade C8 (Old scheme Grade M7) and above in the field of Building Constructions and other institute of Constructions Training And Development (ICTAD) criteria and valid membership of National Construction of Contractors Association of Sri Lanka (NCCASL).

04. Sealed Tender may be dispatched either by registered post or be directly handed over to Director, Teaching Hospital, Jaffna or deposited in the Tender Box at Teaching Hospital, Jaffna on or before 10.00 am on 08.08.2010.

05. Tender Document may be inspected free of charge at the Residence Engineers office, CECB, Jaffna.


06. For further details please contact Hospital Secretary, T.H., Jaffna.

**The Chairman,**
**Divisional Tender Board,**
**Teaching Hospital,**
**Jaffna.**

(C-949)


# நல்லூரான் திருவடிக்கு இன்று 15ஆம் திருவிழா

15ம் திருவிழா



படங்கள் -அரவிந்

## உன்னருட் காட்சி தாராய்

முருகா குமரா முத்துக்குமரா சரணம்! சரணம்!!
உருகா மனமும் உருகக் காட்சிதரும் கந்தா! கடம்பா!!
திருமால் மருகா நீ நல்லூர் வீதியிலே நல்லருள் புரிய
ஒருக்கால் வந்தே உன்னருள் காட்சி தாராய் சரணம்! சரணம்!!

சிவநெறிக்கலாநிதி இராசையா ஸ்ரீதரன்

## நல்லருள் காட்டு

ஆடுமயிலேறி அழகுவேல் கைபிடித்து
பாடுபுகழ் நல்லையிலே பதிகொண்ட வேலவனே
நாடும் அடியவர்க்கு நல்லருள் காட்டு முன்
வீடு தேடி வந்தோம் திருவிழாவைக் காணவென்று
மாடு மனையிழந்தோம் மக்களையும் நாம் இழந்தோம்
தேடும் தோட்டமெல்லாம் தெருவழியில் தொலைந்நின்று
கூடுதனை நாடிக் கூவித்திரிகின்றோம்
வாடும் பயிரெம்மை வாழவைப்பாய் வேல்முருகா

பத்மகிரி, புலோலி

## தீர்த்து வைப்பாய் வேலவனே

மண்ணில் மக்கள் துயர் தீர
வழிகள் பலவும் அமைவாக
எண்ணம் எல்லாம் நிறைவேற
சிவத்தில் நன்றாய்ப் பொருந்திடவே
நல்லை நகரின் வீதியிலே
வண்ண மயிலில் ஏறிவந்து
எந்தன் துயரை அடியோடு
தீர்த்து வைப்பாய் வேலவனே

கவிமணி கந்தமுருகேசதாசனார்

## "வரமது அவன் தருவான்"

அலங்காரக் கந்தனை அனுதினம்
நாடியே எம்குறை சொல்லிடுவோம்
தலமதில் சிறப்புறு நல்லையில்
அமர்ந்த தத்துவ முருகனவன்
நலமாக வாழ்ந்திட ஏற்றவை
நல்கிடும் நம்பியைப் பணிந்திடின்
வலமாகவே வீதியுலா வந்து
வரமது அவன் தருவான்

அரியாலையூர், சி.சிவதாசன்


ஆறுமுக வேலவா அருள் மழை பொழிந்திடுவாய் !



ஆசைப்பிள்ளை அன் சன் நகைமாடம்

இல.10, பஸ் நிலையம் முன்பாக,
சங்கானை

# கவிதைக் கலசம்

## சங்குநாதம்

### கைகூ....

உன் நினைவுகள்
நிறைமாதக் கர்ப்பினிபோல்
தினம் தினம் நான் சுமந்துவரும்
பிரசவமில்லாத என் சிசு

உன்பெயர்
வாழ்க்கை என்ற இடத்தை
தேடிச் செல்கையில்
எனக்குக் கிடைத்த முகவரி

பூ வாசனை
இயற்கை அன்னை தனக்கு
ஆங்காங்கே தடவிக்கொண்ட
வாசனைத் திரவியம்

உதடு
வேதனை சூழ்கையில்
மெதுவாக மொட்டவிழும்
ரோஜா இதழ்

செ.வினுஷா
வட்டு- இந்துக் கல்லூரி

### தேடல்

பத்திரிகைகள் கைவசம்
கிடைத்துவிட்டால்
பரபரப்புடன் தேடல்கள்
ஆரம்பித்துவிடும்
நான் மட்டுமல்ல
பெற்றவர்களும் தேடுவார்கள்
நான் தேடியது
வேலைக்கான விண்ணப்பம்
பெற்றவர்கள் தேடியது
மணமகள் தேவை
என்ற விளம்பரம்
இருபதை தாண்டியதே
இத்தனைக்கும் காரணம்

செ.சுசி
குப்பிளான் தெற்கு

### சமத்துவம்

இம்சைகளை
இனங்கண்டபோது
அது...
அகிம்சையின்ஆளுமைக்குள்
ஆழமாக...
கால்பதித்துக்கொண்டது
தன்னை
தரிசாக்கிக்கொண்டு

க.நாகேஸ்வரா
சண்டிலிப்பாய்

### நம் வாழ்க்கை

ஆசைப்பட்ட வாழ்க்கை
கிடைக்கவில்லை என்று
திண்டாடுவதே
நம் வாழ்க்கை அல்ல
கிடைத்து வரும் வாழ்க்கையை
ஆசைப்பட்டு ஏற்றுக்கொள்வதே
நம் வாழ்க்கை

எம்.ஆர்.கலீபன்
புத்தூர்

### பிரிவதில்லை காதல்

கனவுகள் நிஜமாவதில்லை
நிஜங்கள் அழிவதில்லை
நல்லவை கெடுவதில்லை
அதுபோல்
என் காதல் என்றும்
உன்னை விட்டு
பிரிவதில்லை

ஷோபா இராஜேந்திரம்

### மலர்ப் பொய்கையில் மனம்

நீலத்திரைக் கடலினிலே
என் கண்மணிகளின் சிதறல்கள்
பளபளத்த ஒளிக்கீற்றுக்கள்
பறிக்க நினைத்த சந்தோசங்கள்
அழகைப் பொறித்த மலர்கள்
விருதுபெற்ற ராகங்கள்
என் உயிரிலே கலந்துள்ளது
காவியமாய்...

அருளானந்தம் நேதிகா
இணுவில்

### இமயம் தொட...

வாழ்வில் வெற்றிபெற
தோளில் தட்டித்தர
ஆளில்லையென
சோகம் கொள்ளாதே!
உன்னில் நம்பிக்கைகொள்
அதுவே உனை உயர்த்தும்
ஏணிப் படிகள்
எறும்பைப்பார்
அதுதான் உன் வழிகாட்டி

மாவை. நா.கஜேந்திரா

மொழிபெயர்ப்பு....

### எனது முற்றமும், எனது மரமும்

விரிந்து பரந்திருந்தது
முற்றம்
அதில்தான் அத்தனை
விளையாட்டுகளும்
முற்றத்தின் முன்னேயிருந்தது
அந்த மரம்
என்னைவிட உயரமாயிருந்தது
நான் பெரியவனானதும்
அதன் உச்சியை தொடுவேன்
என்ற நம்பிக்கையிருந்தது
வருடங்கள் கழிந்து
வீடு திரும்பினேன்
முற்றம் சின்னதாயிருந்தது
மரம் முன்னைவிட உயரமாயிருந்தது

ஜாவேத் அக்தர்
தமிழில் :- மதியழகன் சுப்பையா

# மௌனத்தின் தேடல் - 34



### மீள் குடியேற்றம்?

எம் மண்ணில் - எமக்கு
மீள் குடியேற்றம் அங்கு
சென்றுதான் பார்த்தோம் அது
வெறும் வார்த்தைகளின்
அரங்கேற்றம் என்பதை!

அருமை-அன்பு
கொற்றையூர்

### காத்திருப்பு

சொந்த ஊரை இழந்து
அகதிகளாகி
நலன்புரிகளில் வாழ்ந்த
உறவுகள் தங்கள்
மீள்குடியமர்வுக்காக
கொளுத்தும் வெயிலில்
காத்துக்கிடக்கிறார்களோ?

வி.அபிசன்
துன்னாலை,கரவெட்டி

யுத்த அரக்கனின்
ஊழித் தாண்டவத்தில்
சொந்த ஊரிழந்து
சொந்தங்களிழந்து
வெட்டவெளியினிலே
சோகமாய் வாழ்வதுதான்
எம் இனத்தின்
விதியாகியதோ?

கி.சரண்யா
தாவடி

### அகதி

அந்தஸ்து கேட்ட எமக்கு
அகதி என்ற அழியாத - முத்திரை
ஐ.நா கூட கேட்கவில்லை
அகதிமாடுகளாய் ஒரு
வனாந்தர வெளியினில்

ஆ.சுஜன்
மானிப்பாய்

### வாராரோ இனி

கட்டிஅணைத்தெம்மை
காவிச் சுமந்து வெறும்
வெட்டவெளிக்கு போகின்ற
எம்தாயே
வெறிச்சோடிய இடமெல்லாம்
பார்க்கின்றேன்
எங்கள் அப்பா
வாராரோ இனி

உடு.இந்திரஜித்தன்

வன்னியிலிருந்து
இடம்பெயர்ந்த நாம்
வீடுவாசல்களோடு எங்கள்
அப்பாவையும் இழந்து
இன்று அநாதையாய்
நிற்கிறோம்
ஆண்டவரே...
எங்கள் எதிர்காலத்தையாவது
வளம்பெற அமைக்கமாட்டாயா?

சோ.சுலக்ஷனா
கோப்பாய்

### ஒருநாள் விடிவுவரும்...

சின்னஞ்சிறுமகளே
என்ன பார்க்கிறாய்?
இங்கே
சாகடித்தவர்களுக்கு மட்டுமே
"செங்கம்பளம்"
எங்களுக்கு கண்ணீரும்
முட்புதர்களும்
முறுக்குவேலிகளும்தான்
ஆனாலும்
துணிந்துநட...
ஓர்நாள் விடிவு வரும்

திருமதி எஸ்.வியவரதன்
அச்சுவேலி வடக்கு.

### ஏதிலியாய் ஏங்குகின்றோம்

போர் எனும் பெருமரக்கன்
தேர் ஏறி வந்ததினால்
தெருவோர நாயகராய்
தீருவோடு ஏந்துகின்றோம்
வன்னிப் பெருமண்ணில்
வளமோடு வாழ்ந்தவர் நாம்
எந்தையரை இரைகொடுத்து
எண்ணில்லா துயர்சுமந்து
ஏதிலியாய் ஏங்குகின்றோம்

வி.பாரதி
அச்சுவேலி

### அகதித் துயர்வெளி

அலைந்து திரிந்த
குடும்பங்களுக்கு
இறுதியில் கிடைத்தது ஏனோ
ஆகாயமே கூரையாகத்தான்
சிறுமி சுமக்கின்றாள்
வாழ்க்கைச் சுமையையும் சேர்த்து

ஜெ.நிவர்சன்
காலையடி, பண்டத்தரிப்பு

### பயணம்

பள்ளியை நோக்கி உன் கால்கள்
பயணிக்கும் வயதில்
ஏன்தான்
குடும்பத்தின் சுமையை
இந்தவயதில்
சுமக்கிறாய்
எதற்காக?

ர.வித்தியா
பருத்தித்துறை

சங்குநாதம்

# மௌனத்தின் தேடல்- 35



அன்பு வாசகர்களே!

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகளை

ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 03.09.2010 ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளிற்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

# அரச சார்பற்ற நிறுவனப் பணியாளரை நாட்டிலிருந்து வெளியேற உத்தரவு

(கொழும்பு)

இலங்கையில் சேவையாற்றும் முன்னணி அரச சார்பற்ற நிறுவனமொன்றில் பணியாற்றி வந்த பெண் ஒருவர் நாடு கடத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முரண்பாடுகளற்ற சமாதான அமைப்பு என்ற அரச சார்பற்ற நிறுவனத்தில் கடமையாற்றி வந்த பெண் ஒருவரே இவ்வாறு நாடு கடத்தப்படவுள்ளார்.

குறித்த கென்ய நாட்டு அரச சார்பற்ற நிறுவனப் பணியாளர் எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னதாக நாட்டை விட்டு வெளியேற வேண்டுமென உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நாட்டை விட்டு வெளியேறுமாறு குறித்த அரச சார்பற்ற நிறுவனப் பணியாளருக்கு குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

புலனாய்வுப் பிரிவினர் வழங்கிய அறிக்கையின் அடிப்படையில் குறித்த பெண் நாடு கடத்தப்படவுள்ளார்.

நாட்டின் தேசியப் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படும் வகையில் செயற்பட்ட காரணத்தினால் குறித்த பெண் நாடு கடத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (6)

# இலங்கைப் பணிப்பெண்ணை சித்திரவதைக்குள்ளாக்கிய எஜமானருக்கு எதிராக சட்ட நடவடிக்கை

இலங்கைப் பணிப்பெண் ஒருவரை சித்திரவதைக்கு உட்படுத்திய சவுதி அரேபிய எஜமானருக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் அறிவித்துள்ளது.

பணிப்பெண் மீதான சித்திரவதைகள் தொடர்பிலான மருத்துவ அறிக்கை மற்றும் ஊடக அறிக்கைகள் திரட்டப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. சவுதி அரேபிய எஜமானருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பது குறித்து சட்டமா அதிபரிடம் ஆலோசனைப் பெற்றுக்கொள்ளப்படவுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் விசேட காவல்துறையினர் சம்பவம் தொடர்பான அறிக்கை ஒன்றை சட்டமா அதிபருக்கு சமர்ப்பித்துள்ளனர்.

இந்த விடயம் குறித்து சவுதி அரேபிய அதிகாரிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தப்படவுள்ளது. (6-2)

# புத்தகக் கண்காட்சியும் மஜிக் காட்சியும்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தன் மஹோற்சவத்தையொட்டி காயத்திரி பப்ளிகேஷனால் நடத்தப்படும் புத்தகக் கண்காட்சி நேற்று சனிக்கிழமை ஆரம்பமானது. இக் கண்காட்சி எதிர்வரும் 7ஆம் திகதி வரை மதியம் 12 மணிமுதல் இரவு 8 மணிவரை நல்லூர் கந்தசுவாமி ஆலய பின்புற வீதியில் அமைந்துள்ள மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

அத்துடன் இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள மஜித் அரசன் பிரதீப் கூடினோ தனது குழுவினருடன் இணைந்து வழங்கும் மஜிக் காட்சிகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் 7 ஆம் திகதி வரை தினமும் பிற்பகல் 1.30 மணிக்கும் மாலை 6.30 மணிக்கும் இரு காட்சிகளாக நடைபெறவுள்ளது.

இதேவேளை இந்நிறுவனத்தால் ஈழத்து எழுத்தாளர்களின் எழுத்துருவில் உள்ள படைப்புக்கள் அச்சுருவேற்றப்படவுள்ளதுடன் அவர்களைக் கௌரவிக்கும் முகமாக சிறுகதைகள், நாவல்கள், குறுநாவல்கள், சிறுவர் கதைகள், இருபந்தைந்து இளம் கவிஞர்களின் கவிதைகள், புதுமுக எழுத்தாளர்களின் ஆக்கங்கள், பாடசாலை, பல்கலைக்கழக மாணவர்களுக்குத் தேவையான கல்வி சார்ந்த நூல்கள், உளவியல் நூல்கள், கணனி நூல்கள் ஆகியன அச்சேற்றப்படவுள்ளன. உரியவர்கள் நூல்களை கண்காட்சி அலுவலகத்தில் கையளிக்க முடியும் எனவும் அல்லது ஆக்கங்களையும் அச்சுறு ஏறாத ஆக்கங்களையும் நூல் தரப்படுத்தல் குழுவிற்கு வே. நவமோகன், காயத்திரி பப்ளிகேஷன், 257/1F, காலிவீதி, வெள்ளவத்தை என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறும் மேலதிக தகவல்களுக்கு 0114981906 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (6-4)

# இலவச தொலைபேசிச்சேவை வழங்க கூகுள் இணையத்தளம் திட்டம்

தனது வாடிக்கையாளர்களுக்கு இலவச தொலைபேசி வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க கூகுள் இணையத்தளம் திட்டமிட்டுள்ளது.

கூகுள் இணையத்தளத்தின் மின்னஞ்சல் முகவரியை கொண்டவர்கள் இந்த சேவையை பயன்படுத்திக் கொள்ளமுடியும்.

தற்போது அமெரிக்கா,மற்றும் கனடா நாடுகளுக்கான பரீட்சார்த்த சேவைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் விரைவில் அது ஏனைய நாடுகளுக்கும் வழங்கப்படும் எனவும் கூகுள் இணையத்தள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கையடக்கத்தொலைபேசிகளுக்கும் வீட்டு இணைப்பு தொலை பேசிகளுக்கும் இலவச சேவை வழங்கப்படவுள்ளதாக அவை மேலும் தெரிவித்துள்ளன. (6-2)

# ரயில்வே பொதுமுகாமையாளர் பதவியில் இருந்து இடைநிறுத்தம்

(கொழும்பு)

ரயில்வே திணைக்களத்தின் பொது முகாமையாளர் பீ.பீ விஜயசேகரன் தமது பதவியில் இருந்து இடை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளார்.

பொது முகாமையாளருக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள இலஞ்சக்குற்றச்சாட்டு தொடர்பாகவே அவரின் பதவி இடை நிறுத்தப்பட்டுள்ளதாக போக்குவரத்துத்துறை அமைச்சர் குமாரவெல்கம தெரிவித்துள்ளார்.

12ஆண்டுகளுக்கு முன்னர் இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரிக்கும் ஆணைக்குழுவில் செய்யப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் இந்த வழக்கத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது என தெரியவருகிறது.

ரயில்வே பொதுமுகாமையாளரின் பதவியை இடைநிறுத்துவது தொடர்பாக தம்மால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரம் அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டதாக தெரிவித்த அமைச்சர் இவருக்கு பதிலாக கடமையாற்ற இதுவரை எவரும் நியமிக்கப்படவில்லை என குறிப்பிட்டார். (6)

# 29.08.2010

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

## நிகழ்வுகள்

- 708-செப்பு நாணயம் முதன் முதலில் ஜப்பானில் வார்க்கப்பட்டது.
- 1498-வாஸ்கொடகாமா கோழிக்கோட்டில் இருந்து போர்த்துக்கல் திரும்ப முடிவு செய்தார்.
- 1521-ஒட்டோமான் இராணுவம் பெல்கிரேட் நகரைக் கைப்பற்றியது.
- 1541-ஒட்டோமான் துருக்கியர் ஹங்கேரியின் தலைநகரைக் கைப்பற்றினர்.
- 1655-வார்சா சுவீடனின் பத்தாம் சார்ள்ஸ் குஸ்டாவின் சிறு படைகளிடம் சரணடைந்தது.
- 1658-புரொட்டஸ்தாந்து சீரமைப்பு யாழ்ப்பாணத்தில் முதன் முதலாக வண. டாக்டர் பால்டியஸ் என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்டது.
- 1756-ரஷ்யாவின் இரண்டாம் பிரடெரிக் ஜெர்மனியின் சாக்சனியை முற்றுகையிட்டான்.
- 1825-பிரேஸிலைத் தனிநாடாக போர்த்துக்கல் அறிவித்தது.
- 1831-மைக்கேல் பரடே மின்காந்தத் தூண்டலைக் கண்டுபிடித்தார்.
- 1842-முதலாவது ஓப்பியம் போர் முடிவுக்கு வந்தது. ஹொங்கொங் ஐக்கிய இராச்சியத்தின் குடியேற்ற நாடாக அறிவிக்கப்பட்டது.
- 1882- லண்டனில் நடைபெற்ற தேர்வுத் துடுப்பாட்டத்தில் அவுஸ்திரேலியா இந்திலாந்தை 7ஓட்டங்களால் தோற்கடித்தது. பின்னர் பிரபலமான ஆஷஸ் தொடர் ஆரம்பமாக இது வழிவகுத்தது.
- 1885- கோட்லீப் டாயிம்லர் மோட்டார்சைக்கிளுக்கான காப்புரிமம் பெற்றார்.
- 1898-குட்இயர் கம்பனி ஆரம்பிக்கப்பட்டது.
- 1907-கியூபெக் பாலம் அமைக்கப்படும்போது இடிந்து வீழ்ந்ததில் 75 தொழிலாளர்கள் கொல்லப்பட்டனர்.
- 1910- ஜப்பானியர் கொரியாவின் பெயரை சோசென் (Chosen) என மாற்றினர்.
- 1930- சென் கில்டா தீவுகளின் கடைசி குடிமக்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டு ஸ்கொட்லாந்தின் ஏனைய பகுதிகளுக்குக் குடியேற்றப்பட்டார்கள்.
- 1944- 60,000 சிலவாக்கியர் நாசிகளுக்கு எதிராகக் கிளர்ச்சியை ஆரம்பித்தனர்.
- 1944-அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி ஜீ.ஜீ.பொன்னம்பலம் தலைமையில் அமைக்கப்பட்டது.
- 1949- சோவியத் ஒன்றியம் ஜோ 1 என்ற தனது முதலாவது அணுகுண்டுச் சோதனையை கஸகஸ்தானில் நடத்தியது.
- 1966-பீட்டில்ஸ் தமது கடைசி நிகழ்ச்சியை சான் பிரான்சிஸ் கோவில் நடத்தினர்.
- 1991-சோவியத் உயர்பீடம் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் அனைத்து நடவடிக்கைகளையும் முடக்கியது.
- 1995-முல்லைத்தீவுக் கடற்பரப்பில் இலங்கைக் கடற்படையினரின் ஐரிஸ் மோனா என்ற கப்பலை விடுதலைப் புலிகள் மூழ்கடித்தனர்.
- 1996-நோர்வேயில் பயணிகள் விமானம் ஒன்று ஸ்பிட்ஸ்போர்ஜன் என்ற தீவில் உள்ள மலையுடன் மோதியதில் 141 பேர் கொல்லப்பட்டனர்.
- 1997-அல்ஜீரியாவில் ரைஸ் என்ற இடத்தில் 98 ஊர் மக்கள் இஸ்லாமியத் தீவிரவாதிகளினால் படுகொலை செய்யப்பட்டனர்.
- 2005-அமெரிக்காவின் லூசியானா முதல் புளோரிடா வரையான கரையோரப் பகுதிகளை கத்ரீனா சூறாவளி தாக்கியதில் 1,836 பேர் கொல்லப்பட்டு $115 பில்லியன் சேதம் ஏற்பட்டது.

## பிறப்புகள்

- 1632 - ஜான் லாக், ஆங்கிலேயத் தத்துவவியலாளர் (இ.1704)
- 1936 - ஜான் மெக்கெய்ன், அமெரிக்க அரசியல்வாதி, 2008நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் குடியரசுக் கட்சியின் வேட்பாளர்.
- 1958 - மைக்கேல் ஜாக்சன், அமெரிக்கப் பாடகர், (இ.2009)
- 1977 - விஷால், திரைப்பட நடிகர்

## இறப்புகள்

- 1976 - காசி நஸ்ருல் இஸ்லாம், வங்காளக் கவிஞர் (பி.1899)
- 2008 - ஆர்வி, தமிழ் எழுத்தாளர் (பி.1919)
- 2009 - மாவை வரோதயன்,ஈழத்து எழுத்தாளர்.

**1782 - திருகோணமலை கோட்டையை பிரெஞ்சுக்காரர் பிரித்தானியரிடம் இருந்து மீளக் கைப்பற்றினர்.**



# இலங்கை மத்திய வங்கி அதன் வைர விழாவைக் கொண்டாடுகின்றது

## இலங்கையை ஆசியாவின் ஆச்சரியமாக்க மத்திய வங்கிக்கு பாரிய பொறுப்புண்டு

### நிதியமைச்சின் செயலாளர் கலாநிதி பி.பீ.ஜயசுந்தர தெரிவிப்பு



இலங்கை மத்திய வங்கியின் வைர விழாவினையொட்டி வெளியிடப்பட்ட முத்திரையை, தபால் மற்றும் தொலைத்தொடர்புகள் அமைச்சர் ஜீவன் குமாரதுங்க, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கையளிப்பதையும் அமைச்சர்கள் மற்றும் மத்திய வங்கியின் ஆளுநர் ஆகியோர் அவதானிப்பதையும் காணலாம்.

இலங்கையை ஆசியாவின் ஆச்சரியம் மிக்க தேசமாக மாற்றியமைக்கும்போது இலங்கை மத்திய வங்கிக்கு பாரிய பொறுப்புக்கள் நிறைவேற்றப்பட இருப்பதாக நிதி அமைச்சின் செயலாளர் கலாநிதி பி.பீ.ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

கலாநிதி பி.பீ.ஜயசுந்தர ராஜகிரியவிலுள்ள மத்திய வங்கியின் கற்கை கேந்திர நிலையத்தில் இடம்பெற்ற மத்திய வங்கியின் வைர விழா வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை மத்திய வங்கி ஸ்தாபிக்கப்பட்டு 60 ஆண்டுகள் பூர்த்தியடைந்துள்ளது. எரிபொருள் விலையேற்றம், சுனாமி பேரழிவு மற்றும் பயங்கரவாதச் செயற்பாடுகள் இடம்பெற்ற காலத்தில் நாட்டின் பொருளாதாரத்திற்குப் பாரிய பாதிப்புகள் ஏற்பட்டன. இதனால் உரியவாறு திட்டமிடல் முகாமைத்துவச் செயற்பாடுகள் இலங்கை மத்திய வங்கியால் மேற்கொள்ளப்பட்டது. மத்திய வங்கியின் பணிகள் விரிவுபடுத்தப்பட்டன. பணவீக்கம் உட்பட, வரவு-செலவு திட்ட துண்டுவிழும் தொகை போன்ற பல்வேறுபட்ட நெருக்கடிகளுக்கு தீர்வு வழங்க மத்திய வங்கிக்கு முடிந்தது.

நுகர்வோருக்கு நிவாரணம் வழங்கும் பணியையும் மத்திய வங்கி முறையாக முன்னெடுத்தது. இதனால் பாரிய வெற்றிகளைப் பெற்றுக் கொள்ள வாய்ப்புக் கிட்டியது.

ஆசியாவின் புத்தெழுச்சி பெற்று வரும் பொருளாதாரத்தினைக் கொண்ட நாடாக இலங்கை மாற்றம் பெற்றுள்ளது. நாட்டின் பொருளாதார அபிவிருத்தி 7 சதவீதத்தை எட்டியுள்ளது. இதனைத் தொடர்ச்சியாக முன்னெடுக்க திட்டங்களும் வகுக்கப்பட்டுள்ளன.

இலங்கை மத்திய வங்கியின் வைர விழாவையொட்டியே இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. வைர விழாவை முன்னிட்டு வெளியிடப்பட்ட முத்திரை மற்றும் தபால் உறையை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், அமைச்சர் பசில் ராஜபக்ஷ மற்றும் நிதி அமைச்சின் செயலாளர் பி.பீ. ஜயசுந்தர ஆகியோரிடம் கையளித்தார்.

இலங்கை மத்திய வங்கி, தனது 60ஆவது ஆண்டு நிறைவினை நேற்றுக் கொண்டாடியது. இதனையொட்டி பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

வைரவிழாவினை முன்னிட்டு மிகச் சிறந்த பேச்சாளர்களின் தொடர்ச்சியான உரைகள், ஞாபகார்த்த முத்திரை மற்றும் கடித உறை வெளியிடல், ஞாபகார்த்த நாணயக் குத்தி மற்றும் புதிய தொடர் நாணயத்தாள்களின் வெளியீடு, நினைவுக் குறிப்புகள் அடங்கிய புத்தக வெளியீடு என பல நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இவற்றுடன் இணைந்ததாக மத்திய வங்கி சர்வதேச ஆராய்ச்சி மாநாட்டினையும் தென் கிழக்காசிய மத்திய வங்கி ஆளுநர்களின் மாநாட்டையும் நடத்தவுள்ளது.

இதேவேளை நேற்று முன்தினம் - மத்திய வங்கியின் 60ஆவது ஆண்டு விழாவினைக் குறிக்கும் விதத்தில் ஞாபகார்த்த முத்திரையினையும் முதல் நாள் கடித உறையினையும் வெளியிடும் நிகழ்வு இடம்பெற்றது.

இதேவேளை வைர விழாவையொட்டி நேற்றும் இன்றும் கிரிக்கெட் சுற்றுப் போட்டி ஒன்றும் நடத்தப்பட்டு வருகிறது.

இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர், நாட்டின் பொருளாதார அபிவிருத்தி ஊக்குவிப்பு, நிதித் துறையொன்றுக்கான தேவை மற்றும் ஒழுங்கான நாணயக் கொள்கையொன்றின் தேவை என்பவற்றைக் கருத்தில் கொண்டு அரசாங்கம் மத்திய வங்கியை அமைத்தது. இலங்கை மத்திய வங்கியை இலங்கையில் நிறுவுவதற்கான நிபுணத்துவத்தை இலங்கை அரசாங்கம் அமெரிக்காவிடம் கோரியிருந்தது. அமெரிக்காவும் பொருளியலாளர் ஜோன் எக்ஸ்டர் என்பவரை இதற்கென நியமித்தது.

இவரின் ஆலோசனைக்கமைய 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணயக் கட்டளைச் சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கி நிறுவப்பட்டு அதன் செயற்பாடுகள் 1950ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 28ஆம் திகதி ஆரம்பமானமை குறிப்பிடத்தக்கது.

## பார்லீட் பைனான்ஸ் லீசிங் மூலம் குறைந்த ஆ.கட்டணத்தில் ஆட்டோ

முச்சக்கர வண்டிக்கான லீசிங் வழங்கும் துறையில் இலங்கையில் முன்னோடியாக திகழும் பார்லீட் பினான்ஸ் நிறுவனம் சுயதொழில் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் முதலில் 28ஆயிரம் ரூபாயை மட்டும் செலுத்தி முச்சக்கர வண்டி ஒன்றை புதிதாகக் கொள்வனவு செய்வதற்கான லீசிங் வசதியை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

இதனடிப்படையில் டேவிட் பீரிஸ் நிறுவனத்திற்கு முதலில் 28 ஆயிரம் ரூபாயை மாத்திரம் செலுத்தி முச்சக்கர வண்டி ஒன்றை கொள்வனவு செய்து கொள்ள முடிவதுடன், எஞ்சிய தொகையை லீசிங்கில் செலுத்தக் கூடிய வசதியை பார்லீட் பைனான்ஸ் செய்து கொடுத்துள்ளதாக நிறுவனத்தின் பொது முகாமையாளர் சம்பத் நிஷாந்த தெரிவித்தார்.




## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 111.85 | 113.44 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 173.05 | 176.66 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 141.44 | 144.89 |
| சுவிஸ் பிராங் | 108.32 | 111.79 |
| கனேடிய டொலர் | 104.76 | 108.21 |
| அவுஸ்திரேலிய டொலர் | 98.28 | 101.29 |
| சிங்கப்பூர் டொலர் | 82.11 | 84.11 |
| ஜப்பான் யென் | 1.31 | 1.35 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.41 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 30.66 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

## பங்குச்சந்தை முதலீடுகளுக்கான அறிமுகம்

கடந்த ஞாயிறன்று வெளியான, கொழும்பு பங்குப் பரிவர்த்தனை-யாழ்பாணக் கிளையினரின் தொகுப்பின் தொடர்ச்சி இங்கு பிரசுரிக்கப்படுகிறது.

**பங்குச் சந்தையில் முதலீட்டினை ஆரம்பித்தல்**
**(Step in to the Stock Market)**

**முதலாம் தரச்சந்தை மூலம்**
**(Primary Market)**

ஆரம்ப பங்கு வழங்கல்களின் (Initial Public Offering-IPO) போது கம்பனியிடமிருந்து நேரடியாக பங்குகளைக் கொள்வனவு செய்ய முடியும். இது முதல்தரச் சந்தை எனப்படும்.

**பங்குச்சந்தை மூலம்**
**(Secondary Market)**

இங்கு முதலாந்தரச் சந்தையில் கொள்வனவு செய்யப்பட்ட பட்டியல் படுத்தப்பட்ட கம்பனிகளின் பங்குகளைக் கொள்வனவு, விற்பனை செய்யலாம். அதாவது முதலீட்டாளர்கள் தம்மிடம் உள்ள பங்குகளை மீள் பரிமாற்றம் செய்வதன் ஊடாக அவற்றை பணமாக மாற்ற வசதியளிக்கின்ற செயலொழுங்கு இலங்கையில் கொழும்பு பங்குப்பரிவர்த்தனை அல்லது பங்குச் சந்தை எனப்படும்.

**பங்குச் சந்தையுடன் தொடர்புடைய நிறுவனங்கள்**
**(Stock Market Related Organizations)**

கீழ்க் குறிப்பிட்ட 4 அமைப்புகளும் ஒன்றுடன் ஒன்று நெருங்கிய தொடர்பினை ஏற்படுத்திக் கொண்டு இலங்கையில் பங்கு வியாபாரமானது வினைத்திறனாக செயற்பட உதவுகின்றன. அதாவது இவ் நான்கு அமைப்புகளின் செயற்பாடுகளின் ஒருங்கிணைந்த முயற்சி பங்குப் பரிவர்த்தனை எனப்படும்.

**1. இலங்கை பிணையங்கள் பரிமாற்று ஆணைக்குழு**
**(Securities Exchange Commission)**

இலங்கையில் பிணைகளின் பரிமாற்றங்களை நெறிப்படுத்தி முகாமை செய்வதனை முதன்மை நோக்காகக் கொண்டு 1987-ம் ஆண்டு 36-ம் இலக்க பிணைகள் ஆணைக்குழு சபை சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட சட்ட ஆளுமையுடைய அரச துறை சார்ந்த நிறுவனம் ஆகும். இதன் முதன்மை நோக்காக மூலதனச் சந்தைச் செயற்பாடுகளை நியாயமான முறையில் நெறிப்படுத்துதல் ஆகும். இந்த வகையில் முதலீட்டாளர்களின் நட்ட அச்சத்தினை குறைக்கும் வகையில் நட்டஈட்டு நிதியத்தினை ஏற்படுத்துதல், பிணையங்களின் பரிமாற்றங்களை மேற்பார்வை செய்தல் என்பன அமைகின்றன.

**2) கொழும்பு பங்குப்பரிவர்த்தனை**
**(Colombo Stock Exchange)**

இலங்கையில் பங்குச் சந்தை நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான நிறுவனம் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையாகும். இந்நிறுவனம் 1982 ஆம் ஆண்டு 17-ம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் உத்தரவாதத்தால் பொறுப்பு வரையறுக்கப்பட்டதும், இலங்கையில் பிணையங்களின் சந்தையை முறைமைப்படுத்த பிணைகள் பரிமாற்று ஆணைக் குழுவின் உரிமம் பெற்றதுமான ஓர் கம்பனியாகும். இதன் துணைக் கம்பனியாக மத்திய வைப்புத்திட்டக் கம்பனி (Central Depository Systems (Pvt) Ltd-CDS) தீர்வச் செயற்பாடுகளை பொறுப்பேற்று நிறைவேற்றுகின்றது. தற்பொழுது கொழும்பு பங்குப் பரிவர்த்தனையானது 237 பட்டியல் படுத்தப்பட்ட கம்பனிகளையும், 15 அங்கத்துவ நிறுவனங்களையும், 6 வியாபார அங்கத்துவ நிறுவனங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

**3) பட்டியல்படுத்தப்பட்ட கம்பனிகள்**
**(Listed Companies)**

கம்பனிகள் தமது பகுதியளவிலான உரிமைத்துவத்தை பொதுமக்களிடையே பகிர்ந்து கொள்வதனூடாக மேலதிக நிதித் தேவைகளை பூர்த்தி செய்து கொள்கின்றன. இதற்காக கம்பனிகள் தம்மை பட்டியல் விதிமுறைக்கமைவாக கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியல்படுத்துகின்றன. இவ்வாறான கம்பனிகள் பட்டியல் படுத்தப்பட்ட கம்பனிகள் எனப்படும்.

**4) பங்குத்தரகர் நிறுவனங்கள்**
**(Stock Brokers)**

பங்குச்சந்தைப் பிணையங்கள் (பங்குகள், நம்பிக்கை அலகுகள், தொகுதிக்கடன்கள், திறைசேரி உண்டியல்கள்/முறிகள்) மீது தமது நிதியினை முதலீடு செய்ய விரும்பும் முதலீட்டாளர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றும் அதிகாரத்தினையுடைய உரிமம் பெற்ற நிறுவனங்கள் பங்குத்தரகர் நிறுவனங்கள் எனப்படும். இலங்கையில் 21 பங்குத் தரகர் நிறுவனங்கள் செயற்படுகின்றன.

பங்குச்சந்தையில் முதலீடு செய்ய விரும்புபவர்கள் பங்குத் தரகர் ஊடாக மாத்திரம் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் துணைக்கம்பனியில் கணக்கினை ஆரம்பிப்பதன் ஊடாக பங்கு வியாபாரத்தில் தன்னையும் இணைத்துக் கொள்ள முடியும். இக் கணக்கு மத்திய வைப்புத் திட்டக் கணக்கு எனப்படும்.

**பங்குச்சந்தையில் பின்வரும் படிமுறைகளை அறிந்து கொண்டு பங்குத்தரகர்களின் உதவியுடன் பங்குகளை நாம் இலகுவாக பெற்றுக் கொள்ள முடியும்.**

**எப்படி மத்திய வைப்புத்திட்ட கணக்கினை (CDS Account) ஆரம்பிக்க முடியும்?**

மத்திய வைப்புத் திட்டக் கணக்கானது வங்கிக் கணக்கினைப் போன்று ஆரம்பித்தல் ஒரு இலகுவான நடைமுறையாகும். பங்குச் சந்தையில் நாம் பங்குகளில் முதலீடு செய்யும் போது பங்குகள் தொடர்பான கொடுக்கல் வாங்கல்கள் பிரத்தியேகமாக மத்திய வைப்புத்திட்டக் கணக்கினூடாக சீராக்கம் செய்யப்படுகிறது. பங்குத் தரகர்களின் உதவியுடன் இலவசமாக CDS கணக்கினை ஆரம்பித்து முதலீட்டினை மேற்கொள்ள முடியும்.

இங்கு ஒன்றுக்கு மேற்பட்ட கணக்குகளை வேறுபட்ட பங்குத்தரகர் நிறுவனங்களூடாக ஆரம்பித்து கொள்ள வசதியளிக்கப்பட்டுள்ளது.

**பங்குத்தரகர்களிடம் சமர்ப்பிக்கவேண்டிய ஆவணங்கள் எவை?**

பங்குத் தரகர்களுடன் தொடர்பு கொண்டு கணக்கு ஆரம்பித்தல் படிவத்தினைப் பெற்று நிரப்புதல் வேண்டும். இதற்கு பங்குத்தரகரின் முழுமையான ஒத்துழைப்பினை பெற்றுக் கொள்ள முடியும்.

நிரப்பப்பட்ட படிவத்துடன் உங்கள் தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டின் நிழல் பிரதியுடன், உங்கள் வதிவிடத்தை உறுதிப்படுத்தும் ஆவணத்தின் பொருத்தமான பிரதியினையும் (மின்சாரச் சிட்டை அல்லது தொலைபேசிச் சிட்டை அல்லது கிராம அலுவலர் உறுதிப்படுத்தி வழங்கும் பொருத்தமான பிரதி) இணைத்து வழங்குவதன் ஊடாக 1 அல்லது 2 நாள்களுக்குள் கணக்கினை ஆரம்பித்துக் கொள்ள முடியும்.

பங்குச்சந்தை தொடர்பான மேலதிக தகவல்களை இல.398/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கொழும்பு பங்குப் பரிவர்த்தனை யாழ்ப்பாணக் கிளையிலும் அறிந்து கொள்ள முடியும். (முற்றும்)

## பங்குச் சந்தை விபரம்

(வார இறுதியில்)

| துறை | புள்ளி | அதிகரிப்பு/ குறைவு |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 5634.15 | 71.15 |
| மிலங்கா விலைச்சுட்டி | 5897.11 | 34.11 |
| புரள்வு (ரூபா.மில்லியன்) | 8283.64 | |

***உயர்வடைந்த பங்குகள்:*** லங்கா ஓரிக்ஸ் லீசிங் கம்பனி(எல்.ஓ.எல்.சி), த பினான்ஸ் கம்பனி, பெர்கஸ் ஹோட்டல், கொ.பாமர்சி, எஸ்.எம்.பி.லீசிங்.
***சரிவைக் காட்டிய பங்குகள்:*** சிலோன் லெதர், என்வெயர்மென்டல் றிசோசஸ்(W), சிலோன் ரொபாக்கோ கம்பனி, கொமர்ஷல், எச்.என்.பி.,






# நான் மகான் அல்ல

காதலில் மிகுந்த கலர்ஃபுல் இளைஞனின் வாழ்க்கையை ஒரு குற்றச் சம்பவம் புரட்டிப்போடும் கதை.

கார்த்திக் டேக் இட் ஈஸி சென்னைப்பையன். காஜல் அகர்வாலுடன் கண்டதும் காதல் வேலையோடு வந்து பேசு என்கிறார் கஜாலின் அப்பா. அதே சென்னையில் இன்னொரு புறத்தில் அத்தனை குற்றங்களிலும் மூழ்கி முக்குழிக்கும் கல்லூரி மாணவர்கள் சிலர் அந்த மாணவர்கள் கார்த்தியின் அப்பா ஜெயப்பிரகாசின் வாழ்க்கையில் குறுக்கிடுகின்றனர். அது ஜெயப்பிரகாசின் உயிரையே பறிக்க தந்தையைக் கொன்றவர்களைப் பழிவாங்க கார்த்தி எடுக்கும் ரிவேஞ் எக்ஸ்பிரஸ் மீதிக் கதை! முதல் பாதி... கலகலப்பு இரண்டாம் பாதி... விறுவிறுப்பும் எனக் கோடு பிரித்து ரோடு போட்டு இருக்கிற இயக்குநர் சுசீந்திரனுக்கு ஒரு சபாஷ்!கார்த்திக்குக்கு இது கனமான வாய்ப்பு. ஒரு மிடில் கிளாஸ் சென்னை இளைஞனை அட்டகாசமாகக் கொண்டு வந்திருக்கிறார். லவ்ஃ பெயிலியர். அஸ்திரம் ஏவி. கஜால் அகர்வாலைக் காதலிப்பது விக்கிரமன் பாணியில் சென்டிமென்ட் பேசி பின்னணி லாலாலாவுக்காக இடைவெளி விடுவது அவன் குடும்பஸ்தான்டா என்று குடும்பஸ்தருக்கு வணக்கம் சொல்வது அப்பாவின் மரணத்துக்கு பின்னர் ஆக்ரோஷ முகம் காட்டுவது என்று கலக்கல் கார்த்தி !

குண்டுக்கண்களும் குறும்புப் பார்வையுமாக காஜல் அகர்வால் வழக்கமான தமிழ் சினிமா கதாநாயகிகள் செய்ததையே ஆயிரத்து எட்டாவது தடவையாகச் செய்கிறார். என்றாலும் கிடைத்த வாய்ப்பில் அழகாக நடித்திருக்கிறார்.

பொறுப்பான பாத்திரம் ஜெயப்பிரகாசுக்கு நல்லா மாப்பிள்ளையைப் பார்த்துக்கம்மா அப்புறம் உங்க அம்மா மாதிரிப் புலம்பாதே என்று மகளிடம் நட்பு முகம் காட்டி நெகிழும் அந்த அன்பான தந்தை கொலையாகும் போது மனம் திடுக்கிடுறது.





"எல்லோருக்கும் வங்கியில் போட்டாத்தாண்டா செக் பவுன்ஸ் ஆகும் இவனுக்குக் கீழே போட்டாலே செக் பவுன்ஸ் ஆகும்" என்று அலுத்துக் கொள்ளும் நண்பன் சூரி இந்தக் காலத்துப் பசங்களுக்கு எல்லாத்தையும் சீக்கிரம் பார்க்கிறதில.

அவசரம் அதானால்தான் காதல் கல்யாணம் கசக்குது என்ற பகீர் தத்துவம் சொல்லும் காஜலின் அப்பா ரவி பிரகாஷ் டேய் நம்ம முருகேசன் ஃப்ரெண்டுடா என்ற ஒரு நிமிடத்தில் நட்புக் கரம் நீட்டும் ரவுடி தாஸ் ஆளைத் தீர்க்க அழகாக ஸ்கெட்ச் போடும் ராமச்சந்திரன் என சின்னச் சின்ன கரக்டர்கள் படத்துக்குப் பெரிய பலம் . கொலைகார மாணவர்களாக வரும் வினோத், இமானுவேல், மகேந்திரன், அருண்குமார், அன்புராஜ் ஐந்து பேரிடமும் என்னா ஒரு வில்லத்தனம்!

"எல்லோரும் விட்டுக்கொடுத்து வாழ்வாங்க... நீங்க சுட்டுக்கொடுத்து வாழ்றீங்க" என்று பாஸ்கர் சக்தியின் வசனங்கள் இடம்பார்த்துப் பொருள் சேர்க்கின்றன. அனல் அரசுவின் சண்டைக் காட்சிகள். ஆக்ஷன் காரம் குறிப்பாக அந்த க்ளைமாக்ஸ் சண்டை, மிரட்டல்! யுவன்ஷங்கர் ராஜாவின் பின்னணி இசை தித்திக் கூட்டுகிறது.

கொலைகளிலும் கற்பழிப்புகளிலும் தொடர்ந்து நான்கைந்து மாணவர்கள் ஈடுபடுவதும் அதைப் பொலிஸோ மற்றவர்களோ கண்டுபிடிக்காமலே இருப்பதும் இடிக்கிறது. ஆனால் விறுவிறு திரைக்கதையால் மனதை மயக்குகிறான் "நான் மகான் அல்ல"!.





## தெலுங்கு படத்தில் நடிக்கப் போகிறார் விஜய்

இதுவரை தமிழ்ப் படங்களில் மட்டுமே நடித்து வந்த நடிகர் விஜய் முதன்முறையாக நேரடி தெலுங்குப் படமொன்றில் நடிக்கப் போகிறார். அந்தப் படம் த்ரீ இடியட்ஸ் தெலுங்கு ரீமேக் டைரக்டர் ஷங்கர் இயக்கப் போவதாகக் கூறப்படும் இப்படத்தின் தமிழ்ப் பதிப்பில் விஜய், ஆர்யா, ஜீவா நடிக்கிறார்கள்.

தெலுங்கில் விஜய் பாத்திரத்தில் மகேஷ் பாபு நடிப்பார் என்று முதலில் கூறப்பட்டது.



இப்போது தெலுங்கிலும் விஜய்யையே நடிக்க வைக்கும் முயற்சியில் இறங்கியிருக்கிறார் விஜய்யின் தந்தை எஸ்.ஏ.சி. இதற்காக தனது முன்னாள் சிஷ்யரான டைரக்டர் ஷங்கரிடம் பேசிய சந்திரசேகர், அதில் வெற்றியும் கண்டுவிட்டதாக தெரிகிறது.

த்ரீ இடியட்ஸின் தெலுங்கு ரீமேக்கில் விஜய் நாயகனாக நடிப்பார் என்ற தகவல் ஹோலிவுட்டில் பரவலாக பரவுகிறது. விரைவில் அதிகாரப் பூர்வமாக அறிவிப்பு வெளி வரலாம்.

## விஜய்யுடன் கை கோர்க்கிறார் அஜித்



அஜித்தின் அடுத்த படம் என்ன? என்ற கேள்விக்கு விடை கொடுத்து மங்காத்தா சூட்டிங் விறுவிறுவென நடந்து வருகிறது. இப்படத்தை முடித்த கையோடு அஜித், கிரீடம் விஜய்யுடன் கூட்டணி சேரப் போகிறாராம். விஜய் இயக்கத்தில் முதன் முதலில் உருவான படம் கிரீடம். எதிர்பார்த்த அளவுக்கு வெற்றிபெறவில்லை என்றாலும் தயாரிப்பாளரின் கையைக் கடிக்காமல் விட்ட படம் கிரீடம். அவர் இயக்கிய மதராசபட்டினம் படத்தைப் பார்த்து வியந்துபோன அஜித், அதேமாதிரி ஒரு ஹிஸ்டோரிகல் கதையைத் தயார் செய்யச் சொல்லியிருக்கிறாராம்.

மதராச பட்டினம் வெற்றியில் திக்கு முக்காடியிருக்கும் கிரீடம் விஜய், புதிய கதையை உருவாக்கும் முயற்சியில் இறங்கியிருக்கிறார். சுதந்திரத்திற்கு முந்தைய தமிழகத்தின் வாணிப நிலைதான் படத்தின் ஒன்லைன் ஸ்டோரி.

## பிரபுதேவா–நயன்தாராவுக்கு டிசம்பரில் கெட்டிமேளம்?

நடிகர் பிரபுதேவா, நயன்தாரா திருமணம் எதிர்வரும் டிசம்பர் மாதம் நடக்கும் என்று தகவல் வெளியாகி உள்ளது. வில்லு படத்தை பிரபுதேவா இயக்கினார். இதில் ஹீரோயினாக நடித்த நயன்தாராவுக்கும் பிரபுதேவாவுக்கும் நட்பு மலர்ந்தது. இருவரும் நெருங்கிப் பழகினர். வெளியூர் ஷூட்டிங் சென்றாலும் செல்போனில் மணிக் கணக்கில் பேசுவார்கள். இருவருக்கும் காதல் பற்றிக் கொண்டதாக தமிழ் சினிமாவில் பரபரப்பு பரவியது. எங்களுக்குள் அப்படி எதுவும் இல்லை என இருவரும் மறுத்து வந்தனர்.

ஒரு கட்டத்துக்குப் பின்னர் விமர்சனங்களைப் பற்றி கவலைப்படாமல் இருவரும் ஜோடியாக பல இடங்களுக்கு சென்று வந்தனர். விழாக்களுக்கும் ஒன்றாகவே வந்தனர். விளம்பர படங்களில் நடிக்காமல் இருந்த நயன்தாரா சில மாதங்களுக்கு முன்பு ஒரு நிறுவனத்துக்காக பிரபுதேவா இயக்கவிருந்த விளம்பரப் படத்தில் முதன் முறையாக நடிக்க ஒப்புக் கொண்டார்.



சில காரணங்களால் அந்தப் படத்தை பிரபுதேவா இயக்கவில்லை. இதையறிந்ததும் நயன்தாராவும் ஒதுங்கிக் கொண்டார்.

தமிழ் தெலுங்கு படங்களில் பிஸியாக நடித்துக் கொண்டிருந்த நயன்தாரா சமீபகாலமாக புதிய படங்கள் எதையும் ஒப்புக்கொள்ளவில்லை. "பாஸ் என்கிற பாஸ்கரன்" படத்தில் மட்டும் நடித்து வந்தார்.

அதையும் முடித்து விட்டார். கன்னடம், தெலுங்கு மொழிகளில் ஒப்புக் கொண்டிருந்த படங்களையும் முடித்துக் கொடுத்து விட்டார். புதிய பட வாய்ப்பு எதையும் ஏற்கவில்லை.

இதனால் பிரபுதேவாவும் நயன்தாராவும் திருமணம் செய்து கொள்ளப் போவதாக சினிமா வட்டாரத்தில் தகவல் பரவி உள்ளது. டிசம்பரில் இருவரும் மாலை மாற்றிக் கொள்வார்கள் என கூறப்படுகிறது.

இது பற்றி நயன்தாரா முகாமையாளரிடம் கேட்ட போது,

கைவசம் உள்ள படங்களை நயன்தாரா முடித்துக் கொடுத்துவிட்டார். புதிய படம் எதையும் ஒப்புக்கொள்ளவில்லை.

மற்ற படி வேறு எதுவும் தெரியாது என்றார் பிரபுதேவா. ஏற்கனவே திருமணமாகி மனைவியை பிரிந்து வாழ்கிறார்.

# ஈழத்தவர் வரலாறு

19

# 4. சிங்கை நகர் அரசு

## (கி.மு 5 ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 1621 ஆம் ஆண்டு வரை)

கலாநிதி க.குணராசா
செங்கை ஆழியான்

### 4.1 புராதன பெயர்கள்

வரலாற்றுக் காலத்தில் யாழ்ப்பாண இராச்சியம் என்னும் பெயரால் நாம் அறியும் வட இலங்கை இராச்சியம், எப்போது ஸ்தாபிக்கப்பட்டது என்பதைச் சரியாக அறிந்து கொள்வதற்கு இதுவரை சான்றுகள் கிடைக்



யாப்பஹுவ (அனுராதபுரத்துக்குத் தெற்கில்) மலையில் உள்ள பதின்மூன்றாம் நூற்றாண்டு மாளிகையில் காணப்படும் பரத நாட்டிய நடனமாதர் சிற்பம்.

கவில்லை என நவீன வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர். கல்வெட்டு ஆதாரங்கள், சாசன ஆதாரங்கள் இருந்தால் தான், இலக்கிய ஆதாரங்களின் மெய்மையை ஏற்றுக்கொள்ள முடியும் என்கின்றனர். பனையோலைகளில் எழுதிய நம் முன்னோர், செப்பேடுகளில் எழுதிப் புதைக்காது போயினராம். யாழ்ப்பாண இராச்சியத்தின் வரலாற்றைக்கூறும் மூலநூல்களாக கைலாய மாலை, வையாபாடல், யாழ்ப்பாண வைபவ மாலை ஆகிய மூன்றுங் கருதப்படுகின்றன. இந்நூல்களின் அடியொற்றியும், இத்துறை சார்ந்த பல்வேறு நூல்களின் துணை கொண்டும் கல்வெட்டுகள், சாசனங்கள், அகழ்வாராய்ச்சியின் பெறுபேறுகள் என்பனவற்றை ஆதாரமாகக் கொண்டும் காலத்திற்குக் காலம் பல நூல்களும் கட்டுரைகளும் வெளிவந்திருக்கின்றன. யாழ்ப்பாண வைபவ கௌமுதி (க.வேலுப்பிள்ளை - 1918), யாழ்ப்பாண வைபவ விமர்சனம் (சுவாமி ஞானப்பிரகாசர்-1928), யாழ்ப்பாணச் சரித்திரம் (ஜோன்-1930), யாழ்ப்பாணச் சரித்திரம் (ஆ.முத்துத்தம்பிப்பிள்ளை - 1933), யாழ்ப்பாணச் சரித்திரம் (செ.இராசநாயகம் -1933), Tamils and Ceylon (சி.எஸ்.நவரத் தினம்), The Northern Kingdom (எஸ். நடேசன் -1960), யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றம் (கா.இந்திரபாலா-1972), The Kingdom of Jaffna (ச.பத்மநாதன் -1978), யாழ்ப்பாணத் தமிழரசர் வரலாறும் காலமும் (பொ.ஜெகந்நாதன் -1987), யாழ்ப்பாண இராச்சியம் (சி.க. சிற்றம்பலம் -1994), பூநகரி தொல்லியலாய்வுகள் (ப.புஸ்பரட்ணம்) ஆகிய நூல்கள் இவ்வகையில் குறிப்பிடத்தக்கன.

பதின்மூன்றாம் நூற்றாண்டின் நடுப் பகுதியிலிருந்து தான் வடவிலங்கையில் தோன்றிய அரசானது யாழ்ப்பாண இராச்சியம் என அழைக்கப்படுகிறது. பண்டைய வட விலங்கை அரசு எவ்வாறு அழைக்கப்பட்டது?

"தமிழர் காலத்து வடவிலங்கையை யாழ்ப்பாணம் என்னும் பெயரால் வழங்குவது ஒரு காலவழுவாகும்.தீவின் வடபாகத்தில் ஆட்சி நடாத்தியவனை யாழ்ப்பாணத்து மன்னனென்று கூறுவதும் சரியன்று, என ஞானப்பிரகாசர் தனது நூலிற் கூறுகிறார். வட இராச்சியத்தில் வரலாற்றின் ஆரம்பத்தில் யாழ்ப்பாணம் என்ற பெயர் அதற்கு இருக்கவில்லை என்றே கூற வேண்டும். யாழ்ப்பாண இராச்சியத்தின் எல்லை மன்னாரிலிருந்து திருகோணமலைவரை வரைந்த கோட்டிற்கு வடக்கு பரந்த ஒரு பெரும் பிரதேசமாகும். வலிகாமம், தென்மராட்சி, வடமராட்சி, பச்சிலைப்பள்ளி, வன்னி நிலங்களும் பிற நிலங்களும் இதனுள் அடங்கியிருந்தன. சிலவேளைகளில் யாழ்ப்பாண இராச்சியத்தின் மேலாதிக்கம் கம்பளை வரை பரந்திருந்தது. சில வேளைகளில் ஜயவர்த்தன கோட்டை வரை பரந்திருந்துள்ளது.

எனவே, யாழப்பாண இராச்சியம் என்ற வடவிலங்கை இராச்சியத்தின் பண்டைய பெயர் என்ன? வடவிலங்கை நாகநாடு, சிங்கை நாடு (சிங்கைநகர்), மணவை (மணற்றி), ஈழம், உத்தரதேசம், தமிழ்ப்பாட்டினம் எனப் பலவாறாக அழைக்கப்பட்டிருக்கின்றது. இலங்கையின் வட பெரும்பகுதி



பொலநறுவையில் கிடைத்த நடராஜர் சிலை.1960 இல் அகழ்ந்து பெறப்பட்டது.

ஆரம்பத்தில் நாகதீபம் அல்லது நாகதீவு என அழைக்கப்பட்டுள்ளது.பின்னர் நாகதீவு என்ற பெயர் யாழ்ப்பாணக் குடாநாட்டிற்குரிய பெயராக மாறியது.

அவ்வேளை எஞ்சிய வட விலங்கை உத்தரதேசம் என்று கூறப்பட்டது. உத்தர தேசத்தின் ஒரு பகுதியாக நாகதீவு அவ்வேளை இருந்தது. யாழ்ப்பாணக் குடாநாடு தீவு என்ற பெயருக்கேற்ப வரலாற் றுக் காலத்தில் பெருநிலத் தீவினின்றும் கடலால் பிரிக்கப்பட்டு ஒரு பெரிய தீவாக யாழ்ப்பாணக் குடாநாடு விளங்கியது. (தொடரும்)

---

# சங்க - மன்யோசு அகப்பாடல்களில் கூற்றுநிலை-ஓர் ஒப்பீடு

02

## செம்மொழி மாநாட்டு ஆய்வுக்கட்டுரை

செல்வி. செல்வ அம்பிகை நடராஜா
விரிவுரையாளர், தமிழ்த்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

இன்றைய ஹைக்கூப் பாடல்களுக்கும் 5-7 என்ற அசை அடிப்படையாகின்றது. தங்க, சோக பா வடிவங்களே ஜப்பானிய இலக்கியங்களில் அதிகம் கையாளப்பட்டுள்ளன. மன்யோசுப் பாடல்கள் வாய்மொழி மரபில் அமைந்ததால் சிறப்பான சொற்கள் திரும்பத் திரும்ப இடம்பெறுவதுண்டு. மகுர கொதப என அழைக்கப்படும் தலையணைச் சொற்றொடர்களும் இடம் பெறுகின்றன. இவை உவமை போன்ற அலங்காரப் பண்புகளைக் குறிப்பதற்கு மரபு வழியாகப் பயன் படுத்தப்படும் சொற்றொடர்களாகும்.

அகப்பாடல்களில் கூற்று பெறும் இடம் கூறு என்னும் வினையடியில் பிறப்பது கூற்று ஆகும். தொல்காப்பியர் செய்யுளுக்குரிய உறுப்புகளில் ஒன்றாகக் கூற்றினைக் கொண்டுள்ளார். (இளம் - 416) கூற்றுப் பற்றிய நேரடியான விளக்கத்தை தொல்காப்பியர் அளிக்கவில்லை.

கூற்றுக்குரியவர்களைச் சிறப்பாக உணர்த்திச் செல்கின்றார். கிளவி, செப்பு, சொல், உரை, மொழி, கழறல், கிளத்தல், செப்பல், கூறுதல், சாற்றல், உசாஅதல் போன்ற சொற்களைத் தொல்காப்பியர் கூற்றுக்குரிய மாற்றுச் சொற்களாக கையாண்டுள்ளார்.

கூற்று என்னும் அம்சம் அகப்பாட்டின் அமைப்புக் கூறுகளில் மிக அடிப்படையானது. அகப்பாடல் ஒவ்வொன்றும் ஒவ்வொரு கதைமாந்தர் கூறும் கூற்றுப் பாடலாகவே அமையும். கூற்று நிலை அகப்பாட்டின் அமைப்பைத் தெளிவாக வரையறை செய்து விடுகின்றது. சங்க அகப்பாடல்கள் அகமாந்தர்களின் கூற்றுநிலை அடிப்படையில் அமைந்த பாடல்களின் தொகுப்பாகும். கூற்று நிலையான அகப்பாடல்கள் புறப் பாடல்களிலிருந்து வேறுபட்டவை. கருப் பொருளைத் தொடர்புறுத்தி அமைந்த கூற்று நிலைப்பாடல்களை அகப்பாடல்களே கொண்டுள்ளன.

கூற்று மாந்தர்களாகத் தலைவன், தலைவி, தோழி, செவிலி, நற்றாய், பாங்கன், பாணன், பரத்தை, விறலி, கண்டோர் எனப் பலர் உள்ளனர்.

அகமாந்தர்கள் தங்கள் கூற்றாலும் கூற்றை முன்னிலைப்படுத்திக் கூறும் முறையாலும் கூறவேண்டிய இடத்தில் கூறாது அமைதி கொள்ளும் முறையாலும் தங்கள் மன உணர்வுகளைப் புலப்படுத்தி நிற்கின்றனர். சங்க அக இலக்கியங்களில் கூற்று நிகழ்த்துபவர்கள் பெரும்பாலும் பெண்களாகவே காணப்படுகின்றனர். கூற்றுக்களை நிகழ்த்தும் பாத்திரங்களில் அதிகமானோர் பெண்களாக இருப்பதே இதற்குக் காரணமாகும். புலவர்கள் அகமாந்தரின் கூற்று நிலைக்குச் சிறப்புத் தருவதற்கு பாத்திரங்களின் மன உணர்வைப் புலப்படுத்திக் காட்ட விரும்பியமை காரணமாகலாம். சங்க அகப் பாடல்கள் அகமாந்தர்களின் உணர்வுகளையும் அவை தோன்றும் பின் புலங்களையும் முதன்மைப்படுத்தி நிற்கின்றன. அகமாந்தர்கள் தங்கள் உணர்வுகளைப் பல்வேறு உத்திகளைக் கையாண்டு வெளிப்படுத்தியிருக்கின்றனர். அவை பின்வருமாறு அமையும்.

1. கூற்றாலும் செயலாலும் தம் உணர்வுகளை வெளிப்படுத்துதல்.
2. கூற்றை அல்லது செயலைத் தவிர்த்தலால் தம் உணர்வுகளை வெளிப்படுத்துதல்.
3. கூற்றினைக் கூறும் முறையால் கேட்போர்க்குத் தம் உணர்வுகளைத் தெரியப் படுத்துதல். (உவமை, உள்ளுறை, இறைச்சிப் பொருள், வெளிப்படையாகக் கூறி உணர்த்தல் போன்ற உத்திகள் இதில் கையாளப் படுகின்றன.)

அகப்பாடல்களில் கூற்று மாந்தர்களாகப் பலர் இடம்பெறுகின்ற போதிலும் தலைவன், தலைவி கூற்றுக்கள் மட்டுமே இங்கு ஒப்பீட்டாய்வுக்கு எடுத்துக்கொள்ள்ளப்படுகின்றன. தலைவனது கூற்றில் பிரிந்த தலைவியின் துயரை எண்ணி அவன் கொள்ளும் வருத்தம், செலவு விடுத்து தலைவியை சந்திக்கத் துடிக்கும் விருப்பம், பருவம் வரும் முன் தலைவியோடு இன்புற விழையும் வேகம், தலைவியைக் காணும் பொழுது அவன் கொள்ளும் மகிழ்வு போன்ற பண்புகள் பரந்துபட்டு நிற்கின்றன. அகப்பாடல்களில் கூற்று நிகழ்வது தலைவன்தான் என்பதைக் கண்டறிய பின்வரும் குறிப்புக்கள் உதவுகின்றன:

1. கூற்றில் பேசப்படும் பொருள்.
2. கூற்று நிகழும் பின்னணி
3. முன்னர் நடந்த நிகழ்வுகள்.
4. கூற்று நிகழ்த்துபவர் அநுபவம்.
5. படர்க்கையில் சுட்டப்படும் பாத்திரம்
6. தனக்கும் பிற பாத்திரத்துக்குமான உறவுநிலை.
7. கூற்று நிகழ்த்துபவர் மேற்கொள்ளும் செயல்.
8. கூற்று நிகழ்த்துபவரின் மனநிலை.

தலைவனின் கூற்றுக்கள் இருவகையின. அவை பின்வருமாறு அமையும்.

1.பிற அக மாந்தர்களிடம் (தோழி, தலைவி, பாங்கன், பாகன்) அல்லது இயற்கைப் பொருட்களை முன்னிலைப்படுத்தி தன் மன உணர்வுகளைக் கூறுவது.

2. தலைவன் தன் நெஞ்சுக்குக் கூறுவது.

இரந்து பின் நிற்கும் போது தோழியுடனும், இடித்துரைக்கும் போதும் வினை முற்றி மீளும் போதும் பாகனுடனும், உடன் போக்கில் தலைவியுடனும், தன் உணர்வுகளைக் கூறி தூது விடும் போது இயற்கைப் பொருட்களுடனும் தலைவனின் கூற்றுக்கள் நிகழ்த்தப் பெறுகின்றன. அல்ல குறிப்பிட்டு மீளும் போதும், இடைச்சுரத்தின் போதும் பாசறைக் கண்ணும் நெஞ்சுக்குக் கூறப்படுகின்றன. தலைவியின் கூற்றுக்கள் பெரும்பாலானவை தலைவியின் பிரிவுக்கால மனநிலையைப் புலப்படுத்துவனவாக அமைகின்றன. தலைவன் சிறப்புறமாக நிற்கும் பொழுது தலைவிக்கு அமைந்த பின் புலங்கள் எடுத்துரைக்கின்றன. (தொடரும்)

# இருபதாம் நூற்றாண்டு இலங்கை கல்வியில் அரசியல் அழுத்தங்கள்

## இலங்கையின் கல்வி வளர்ச்சிப் போக்குகள்

கனிஷ்ட இடைநிலைக்கல்வி 6ஆம் வகுப்பு முதல் 9 ஆம் வகுப்பு வரையுள்ள பருவமாகும். இப்பருவத்தில் விஞ்ஞானத்தையும், புதிய தொழில்நுட்பத்தையும் அடிப்படையாகக் கொண்டு வாழ்க்கைத் திறன்களைக் கற்பதற்கான வாய்ப்புக்கள் உருவாக்கப்படும். க.பொ.த (உ/த) மாணவர்களுக்குத் தொழில்நுட்பப் பாடம் அறிமுகம் செய்யப்பட்டது. அத்துடன் ஆங்கிலம் கற்பதற்கான விசேட வசதிகளை உருவாக்குதல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. பாடசாலைப்பிள்ளைகளுக்கும், பல்கலைக்கழங்களில் கல்வி பயில்வோருக்கும் கணனிக் கல்வியை மேற்கொள்வதற்கான விரிவான வாய்ப்புக்கள் வழங்கப்படும். மேலும் கல்விச் சீர்திருத்தங்கள் வெற்றிகரமாக அமுலாக்கப்பட வேண்டுமெனின் பாடசாலைகளின் நிர்வாகமும் முகாமைத்துவமும் உயர்ந்த மட்டத்தில் பேணப்படல்வேண்டும். இதற்கமைய முதற் கட்டமாக 312 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு அவற்றை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இப் பாடசாலைகளை 1ஏபி தரத்திலான பாடசாலைகளின் நிலைக்கு கொண்டு வருவதற்கான ஏற்பாடுகளை வழங்க ஆவண செய்யப்பட்டுள்ளன. தற்போது இலங்கையில் உ/தர விஞ்ஞான வகுப்பு வசதிகளைக் கொண்ட 594 பாடசாலைகள் உள்ளன. இவ்வாறு விருத்தி செய்யப்பட பெரும்பாலும் கிராமிய மட்டப்பாடசாலைகளே தெரிவு செய்யப்பட்டுள்ளன. அடுத்து குறைவிருத்தி பிரதேசங்களாக இனங்காணப்பட்டுள்ள பெருந்தோட்டங்கள், தொலைக் கிராமப் பகுதிகள், கரையோர மீன்பிடிக்கிராமங்கள், நகர்புற அபிவிருத்தி அடையாத மக்கள் கூட்டத்தினர் வசிக்கும் பிரதேசங்கள் போன்றவற்றிலுள்ள கனிஷ்ட பாடசாலைகளை விருத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஓர் ஆண்டு காலப் பகுதியில் வழங்கப்படுகின்ற ஆண்டு 5 இற்கான புலமைப்பரிசில்கள் எண்ணிக்கை 7500 லிருந்து 10 ஆயிரம் வரை அதிகரிக்கப்பட்டவுடன் மேலும் அதிகரிப்பதற்கும் உத்திதேசிக்கப்பட்டுள்ளது. அத்துடன் தேசிய பாடசாலைகளுக்கும் ஏனைய பாடசாலைகளுக்குமான கட்டட சாதனங்களை வழங்க 1995 ஆம் 1996 ஆம் ஆண்டுகளிலும் 1997 ஆம் ஆண்டினைத் தொடர்ந்து மத்திய அரசாங்கத்தால் அமைச்சினூடாக சுமார் 3042 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. மொத்தத் தேசிய உற்பத்தியில் தற்போது அண்ணளவாக 3% கல்விக்காக ஒதுக்கப்படுகின்றது. எதிர்வரும் 4 ஆண்டு காலப்பகுதியினுள் இது 4.5% வரை அதிகரிக்கப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. தற்போதைய அரசினால் கல்வி கற்கும் மாணவர்களின் எதிர்கால நன்மை கருதியே புதிய கல்வி சீர்திருத்த பிரேரணைகள் முன் வைக்கப்பட்டன. ஆண்டு தோறும் க.பொ.த (சா/த) க.பொ.த (உ/த) பரீட்சைக்கு தோற்றிய சமூகத்தில் பிரவேசிக்கும் பிள்ளைகளுக்கும் ஏனைய பிள்ளைகளுக்கும் வெற்றிகரமான வாழ்க்கையைக் கொண்டு செல்ல தேவையான அறிவு, திறன், மனப்பாங்கு விருத்தி செய்யப்பட வேண்டியது அத்தியாவசியமானதொன்றாகும் எனவே ஆணைக்குழுவின் தேசிய கல்விக் கொள்கையானது ஒப்பீட்டளவில் நீண்டகால விளைவுடையதாகவும், நிருவாகங்களினதும், அரசுகளினதும் மாற்றங்களால் பாதிக்கப் படாமல் குறித்த ஒரு காலப்பகுதிக்கு வலுவுள்ளதாகவும் இருத்தல் வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

எனவே கல்வியின் வளர்ச்சியினை வரலாற்றுக்கூடாக பார்க்கும் போது அதன் தொடக்க காலத்தில் மதக்குருமாரே கல்வியை வழங்கும் பொறுப்பை ஏற்று இருந்தனர். சமூகத்தில் கல்வியை வேண்டி நிற்பவர்கள் தொகை குறைவானதாக இருந்த காலத்தில் அக் கல்வியை வழங்கக்கூடிய அறிவு, அனுபவம், அவகாசம் என்பவற்றை மதகுருமாரே கொண்டிருந்த வேளையில் மதகுருமார் அப் பொறுப்பினை ஏற்றிருந்தனர். காலப்போக்கில் மதபீடம் நிறுவனமயமாகி கட்டமைப்பு ஒழுங்கில் வளர்ச்சியடைந்த போதும் ஒழுங்கு படுத்தப்பட்ட நிறுவன ரீதியான பள்ளிக் கூட அமைப்பிலும் மதபீடம் தொடர்ந்தும் அப் பொறுப்பினை நிறைவேற்றி வந்தது. இலங்கையில் பிரித்தானிய ஆட்சி காலப்பகுதியில் ஆரம்பகால கட்டத்தில் இந்நிலமையே காணப்பட்டது எனவே தொடக்க காலப்பகுதியில் கல்விக்கான செலவு குறைவானதாக இருந்ததுடன் அரசிடம் இருந்தும் மாணவர்களின் கொடுப்பனவுகளுடனும் சேர்த்து போதுமானதாக இருந்தது. ஆனால் காலப் போக்கில் கல்விச்செலவுகள் பெருகிய போது அரசிடம் இருந்து கூடிய உதவிகள் பெறும் நிலை ஏற்பட்டது. மறுபுறத்தில் அரசின் நிலைப்பாட்டிலும் மாற்றங்கள் ஏற்பட்டன. அரசு என்ற அமைப்பு குழந்தைப் பருவத்தில் இருந்த காலகட்டத்தில் இது குறிப்பிட்ட அளவிற்கு மேலான பொறுப்புக்களை ஏற்காமல் இருந் தமையை அவதானிக்க முடிகின்றது. சமூக வளர்ச்சியில் அரசு பலம் பெற்று பொறுப் புகள், கடமைகள் ஆகியவற்றில் கூடிய சுமைகளை ஏற்றுக் கொண்டு அதிகாரங்களிலும் ஆதிக்கம் பெருக கல்வி செயற்பாட்டிலும் 15 பங்கெடுக்கும் நிலைமை உருவாகியது கல்விக்கென நிதியுதவியை வழங்கியும் கல்வியை வழங்குவதில் நேரடி யாக ஈடுபடும் அரசு கல்வி தொடர்பான தனது கடமைகளை விசாலித்துக் கொண்டது. இதன் விளைவாக சகல மக்களுக்கும் கல்வியை வழங்குவதன் மூலமே இலங்கை மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் அடி கோலப்பட்டது. அதன் காரணமாக சுதந்திரத் திற்குப் பின்னர் மாறி மாறி ஆட்சியைக் கைப் பற்றிய எல்லா அரசுகளும் கல்வியை வழங்குவதற்கு கட்டுப்பாடுடையனவாய் இருந்தன. சுதந்திரத்திற்கு பின் 50 ஆண்டு காலப்பகுதிகளில் கல்வித் துறையில் ஏற்பட்ட அபிவிருத்திகள், கல்வியறிவு விகிதம், பள்ளிக்கூடத்தில் சேர்ந் தோர்

**நாகேஸ்வரி விஜயகாந்தன்**

தொகை, பள்ளிக்கூடங்களிற்கு இடையிலுள்ள தூரம் குறைதல், மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இடையிலான விகிதம் போன்றவற்றில் அபிவிருத்திகள் ஏற்பட்டன எனலாம். இவ்வாறாக கல்விக் கொள்கையில் ஏற்பட்ட மாற்றங்களை நோக்கும் பொழுது அரசியல் அழுத்தங்கள் பின்னணியில் இருந்தமையை அவதானிக்க முடிகின்றது. எனவே கல்வி வளர்ச்சியின் காரணமாக கலைத் திட்டத்திலும் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டிய சூழ் நிலை ஏற்பட்டது. ஏனெனில் கல்வி கற்றோர் வீதம் தொடர்ந்தும் அதிகரித்தமை காரணமாக அதற்கேற்ப வேலை வாய்ப்பு வசதிகள் நாட்டில் வழங்கப்படமுடிய வில்லை. (முற்றும்)

# இடம்பெயர்ந்த முகாம்களிலுள்ள மக்களை பார்வையிட மீண்டும் அனுமதி மறுப்பு

## ஜே.வி.பி.விசனம்

இடம்பெயர். முகாம்களில் தங்கியுள்ள மக்களை பார்வையிடுவதற்கு மீண்டுமொரு முறை சந்தர்ப்பம் மறுக்கப்பட்டுள்ளதாக ஜே.வி.பி விசனம் வெளியிட்டுள்ளது.

வவுனியா இடம்பெயர் முகாம்களில் தங்கியுள்ள மக்களை பார்வையிடுவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகளின் போது பாதுகாப்பு தரப்பினர் அதற்கு அனுமதி வழங்கவில்லை என ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

இடம்பெயர் முகாம்களில் தொடர்ந்தும் தங்கியிருக்கும் மக்களை பார்வையிடுவதற்கு அனுமதி வழங்குமாறு பாதுகாப்பு அமைச்சிடம் எழுத்து மூலமான கோரிக்கை விடுக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கட்சியின் நான்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் இடம்பெயர் முகாம்களுக்கு விஜயம் செய்ய உத்தேசித்திருந்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் தமது எழுத்து மூல கோரிக்கைக்கு பாதுகாப்பு அமைச்சு எவ்வித பதிலையும் தெரிவிக்கவில்லை எனக் குறிப்பிட்டுள்ளார்.

இடம்பெயர் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களை பார்வையிடுவதற்காக ஏற்கனவே விடுக்கப்பட்ட கோரிக்கைகளும் நிராகரிக்கப்பட்டதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (6)

# கிளிநொச்சி மக்களுக்கு தொலைபேசி இணைப்புகள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி 155 ஆம் கட்டை பாரதிபுரத்தில் ரெலிக்கொம் நிறுவனத்தின் தொலைத் தொடர்புக்கோபுரம் அமைக்கும் பணிகள் துரிதகதியில் இடம்பெற்று வருகின்றன.

விரைவில் இப்பணிகள் நிறைவடையும் என்றும் அதன் பின்னர் கிளிநொச்சி மக்களுக்கான தொலைபேசி இணைப்புக்கள் மற்றும் இணையத்தள சேவைகள் என்பன ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என்று ரெலிக்கொம் வட்டாரங்கள் தெரிவித்தன. (6-2)

# அரசியல் சாசனசபைக்குப் பதிலாக ஐவரடங்கிய குழுவை நியமிக்கத்திட்டம்

(கொழும்பு)

அரசியல் சாசன சபைக்கு பதிலாக ஐவர் அடங்கிய குழுவொன்று நியமிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சபாநாயகர், பிரதமர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட ஐவர் இந்தக் குழுவில் அங்கம் வகிக்கவுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

ஏனைய இரண்டு உறுப்பினர்களில் ஒருவர் எதிர்க்கட்சியினாலும் மற்றொருவர் ஜனாதிபதியினாலும் நியமிக்கப்படுவர் என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை தற்போதைய அரசியல் சாசனசபையில் பத்துபேர் அங்கம் வகிப்பதாகக் குறிப்பிடப்படுகிறது. (6)

## உதவிப் பொருட்கள் வழங்கப்படவுள்ளன

வடமராட்சி இடம்பெயர்ந்தோர் நலன் பேணும் அபிவிருத்தி அமைப்பினர், லங்கா மில்க்வூட்ஸ் நிறுவனத்தின் அனுசரணையுடன் யுத்தத்தினால் இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவிப் பொருட்களை வழங்கவுள்ளனர்.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 4 ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெயர்ந்தோர் நலன் பேணும் அபிவிருத்தி அமைப்பின் காரியாலயத்தில் வைத்து மேற்குறித்த உதவிப் பொருட்களை வழங்கவுள்ளதாக இவ் வமைப்பின் தலைவர் வே.தவச்செல்வம் தெரிவித்துள்ளார். (6-2)

# ஜோன் ஹோம்ஸின் கருத்துக்களை ஏற்றுக்கொள்ள முடியாது

## கெஹலிய தெரிவிப்பு



ஐக்கிய நாடுகள் அமைப்பின் மனிதாபிமான விவகாரப் பிரதிநிதி ஜோன் ஹோம்ஸ் அண்மையில் இலங்கை தொடர்பாக வெளியிட்டுள்ள கருத்துக்களை ஏற்றுக் கொள்ள முடியாதென ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

மனித உரிமை மீறல் மற்றும் யுத்தம் தொடர்பாக ஏற்கனவே இலங்கையில் விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மனித உரிமை மீறல் குற்றச் சாட்டுக்களை விசாரணை செய்யும் நோக்கிலேயே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவொன்றை நிறுவியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இவ்வாறான பின்னணியில் இலங்கையில் யுத்தம் முடிவடைந்துள்ள போதிலும் பல கேள்விகளுக்கு இன்னமும் பதில் கிடைக்கவில்லை என்ற ஜோன் ஹோம்ஸின் கூற்று அடிப்படையற்றதென அமைச்சர் கெஹலிய தெரிவித் துள்ளார்.


இலங்கை மீது குற்றச்சாட்டுக்களை அடுக்குவதனை விடவும் தமது நாட்டில் இடம்பெறும் மனித உரிமை விவகாரங்கள் குறித்து ஜோன் ஹோம்ஸ் கவனம் செலுத்த வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் நீதித்துறை கட்டமைப்பில் குறைபாடுகள் காணப்படுவதாக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என அவர் தெரிவித்துள்ளார். (6-2)

ஒன்றுபட்ட இலங்கைக்குள்

# தமிழர்களுக்கு தன்னாட்சி உரிமையை வழங்குவதாக அரசியல் தீர்வு இருக்கவேண்டும்

## -டி.கே. ரங்கராஜன் வலியுறுத்தல்



இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைக்கு விரைந்து அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு உறுப்பினர் டி.கே. ரங்கராஜன் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் 19ஆவது தேசிய மாநாடு கொழும்பில் நேற்று முன்தினம் ஆரம்பமாகியது. இதில் இந்திய மார்க்கிஸ்ட் கட்சியின் சார்பில் டி.கே. ரங்கராஜன் கலந்துகொண்டு உரையாற்றினார்.

அங்கு தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர், ஒன்றுபட்ட இலங்கைக்குள் தமிழர்களுக்கு தன்னாட்சி உரிமையை வழங்குவதாக அரசியல் தீர்வு இருக்க வேண்டும் என்பதனை இந்திய மார்க்சிஸ் கட்சி கம்யூனிஸ்ட் கட்சி ஏற்றுக்கொள்கிறது என குறிப்பிட்டார்.

அது இலங்கையின் ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டினையும் வலுப்படுத்தும் என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உணர்வதாகவும் அத்துடன் அரசியல் தீர்வுக்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும் போதே பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குதல், மறுவாழ்வு மற்றும் மீள் குடியமர்வுக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கைத் தமிழ் மக்களையும் விடுதலைப்புலிகளையும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஒன்றாகப் பார்ப்பதில்லை வேறுபடுத்தித்தான் பார்க்கிறது என கூறிய அவர், தமிழ் மக்களின் நியாயமான தேவைகளையும் உணர்வுகளையும் புரிந்துகொள்ளும் அதேநேரத்தில் விடுதலைப்புலிகளின் அதிதீவிர நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பினையும் மார்க்கீஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வெளிப்படுத்தியுள்ளதாகவும் தெரிவித்தார்.

போர் முடிந்துள்ள நிலையில் போரினால் இடம்பெயர்ந்து முகாம்களில் வாழும் தமிழர்களை மீள் குடியேற்றுவதில் பிரதான கவனம் செலுத்தப்பட வேண்டும் என பல தடவைகள் வலியுறுத்திக் கூறினார்.

இதேவேளை இந்திய அரசியல் குறித்து பேசிய அவர், உலகப் பொருளாதார நெருக்கடியால் இந்தியாவும் பாதிக்கப்பட்டது. மார்க்கிஸ்ட் உள்ளிட்ட இடதுசாரி கட்சிகள் இந்தப் பிரச்சினையில் தலையிட்டதால் பாதிப்பு ஒரு வரையறைக்குள் இருந்தது எனத் தெரிவித்தார்.

காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு இந்த நெருக்கடிகளிலிருந்து எந்தப் பாடங்களையும் கற்றுக்கொள்ளவில்லை எனவும் இப்போது ஆட்சியைத் தக்கவைத்துக்கொள்ள இடதுசாரிகளின் ஆதரவு தேவையில்லை என்ற எண்ணத்தோடு இந்த நெருக்கடி காரணமான தாராளமய கொள்கைகளை செயல்படுத்திக் கொண்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

அமெரிக்காவுடன் எப்படியாவது நீண்டகால உறவினை ஏற்படுத்திக்கொள்ள காங்கிரஸ் கூட்டணி அரசு துடிக்கிறது. இந்திய அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தம், அணு உலை விபத்து இழப்பீடு மசோதா ஆகியவை இந்திய மக்களின் நலன்களுக்கு எதிரானது மட்டுமல்ல நாட்டின் இறையாண்மையை பாதிக்கும் நடவடிக்கைகளாகும் எனக் குறிப்பிட்டுள்ளார். (6-2)

## மும்பையில் விமான என்ஜினில் தீ; 30 பயணிகள் படுகாயமடைந்தனர்

(மும்பை)

மும்பையில் இருந்து சென்னை புறப்பட இருந்த விமானத்தின் என்ஜினில் திடீரென்று தீப்பிடித்ததால் அவசர வழியாக வெளியேற முற்பட்டதில் பயணிகள் 30 பேர் காயமடைந்தனர்.

மும்பை விமான நிலையத்தில் இருந்து சென்னை செல்வதற்கான ஜெட் ஏர் வேஸ் பயணிகள் விமானம் நேற்று முன்தினம் இரவு புறப்பட தயாராக இருந்தது. அப்போது என்ஜினில் தீப்பிடித்திருப்பதாக உணர்ந்த விமானி உடனடியாக எச்சரிக்கை விடுத்தார். இதனையடுத்து விமான நிலையத்தில் அவசரகால எச்சரிக்கை விடுக்கப்பட்டு மீட்புப் படையினர் அங்கு விரைந்தனர் அவசரகால கதவு திறக்கப்பட்டு பயணிகள் அனைவரையும் வெளியேறுமாறு அறிவுறுத்தப்பட்டது.

ஒரே நேரத்தில் பலரும் அதன் வழியாக வெளியேற முற்பட்டதில் பயணிகள் 30 பேர் காயமடைந்தனர். அவர்கள் அனைவரும் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். பின்னர் விமானத்தில் நடத்திய சோதனையில் தீப்பிடித்ததற்கான அறிகுறியே இல்லாதது தெரியவந்தது. (6-2)

# வீழ்ச்சியில் இருந்து தமிழகம் மீட்சி பெறவேண்டும் -வைகோ



தமிழகத்தில் பாசிச ஆட்சியை கருணாநிதி நடத்தி வருகிறார். வீழ்ச்சியில் இருந்து தமிழகம் மீட்சி பெற வேண்டும் என கொடி பயணத்தின் நிறைவு நிகழ்ச்சியில் ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ உரையாற்றினார்.

ம.தி.மு.க. சார்பில் கொடி பயணம் நாமக்கல் மாவட்டத்தில் மூன்று நாட்கள் நடந்தது. இறுதி நாள் அன்று நிறைவு பொதுக்கூட்டம் வேலூரில் நடந்தது.

இதில் வை. கோ. உரையாற்றுகையில்,

மாவட்டத்தில் நடந்த மூன்று நாள் கொடி பயணம் ம.தி.மு.கவுக்கு ஊக்கத்தை தந்துள்ளது. நாளுக்கு நாள் மக்கள் உள்ளத்தில் பதிவு செய்யப்பட்டு அங்கீகாரம் கிடைத்துள்ளது. இளைஞர்கள் கூட்டம் அதிகளவில் வந்துள்ளதை பார்க்கிறேன் ஜனநாயகத்துக்கு ஆபத்து வந்துள்ளது. ஒன்று ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்களின் ஆதிக்கம் மற்றொன்று விலைவாசி உயர்வு அறிவிக்கப்படாத மின்தடை இவற்றால் தமிழக மக்களின் வாழ்வாதாரம் சிதைந்துள்ளது. அறிவிக்கப்படாத மின்தடை அனைத்து தரப்பு மக்களையும் பாதிக்கும் வகையில் தமிழகத்தின் பொருளாதாரத்தை வீழ்த்தும் அளவுக்கு உள்ளது.

ஆனால் பன்னாட்டு நிறுவனங்களுக்கு தடையில்லா மின்சாரம் வழங்குகிறது. பண முதலைகள் சம்பாதிப்பதற்காக அவர்களுக்கு தடையில்லா மின்சாரம் வழங்கும் தமிழக அரசின் நோக்கம் என்ன? அதனால் கிடைக்கும் ஆதாயம் என்ன? இந்தக் கேள்வி தொழில் முனைவோர், தொழில் அதிபர்கள் மத்தியில் எழுந்துள்ளது. தற்போது இப்பகுதியில் பிளாட்டினம் இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது. அதனால், இப்பகுதியில் வசிக்கும் மக்கள் மிகவும் அச்சத்தில் உள்ளனர். அரசு தங்களது நிலத்தை அபகரித்து விடும் வீடுகளை விட்டு வெளியேற்றிவிடும் என பயத்தில் உள்ளனர்.

தமிழக அரசு மீது மக்களுக்கு எதிர்ப்பு வந்துள்ளது. அதற்கு முக்கிய காரணம் கோவை செம்மொழி மாநாடு தமிழகத்தில் பாசிச ஆட்சியை கருணாநிதி நடத்துகிறார் வீழ்ச்சியில் இருந்து தமிழகம் மீட்சி பெற வேண்டும் என்று தெரிவித்தார். (6-2)

## மன அழுத்தமா?

## உங்களுக்கு விருப்பமானவற்றின் பக்கம் கவனத்தை திருப்புங்கள்

### மனநல நிபுணர்கள் தெரிவிப்பு

மன அழுத்தத்தை விரட்ட உங்களுக்கு பிடித்தமான நடவடிக்கையில் ஈடுபட வேண்டுமென மனநல நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். இன்றைய பரபரப்பான வாழ்க்கைச் சூழலில் மன அழுத்தம் இளவயதினர் உட்பட அனைத்து தரப்பினருக்கும் ஏற்படுகிறது. இது வாழ்க்கை முறை வேலை உள்ளிட்ட காரணங்களால் ஏற்படுகிறது.

மன அழுத்தம் காரணமாக இரத்த அழுத்தம் அஜீரண கோளாறுகள் முடிகொட்டுதல், தோல் நோய்கள் போன்றவை ஏற்படுகின்றன. மேலும் இதயம் தொடர்பான பிரச்சினைகள் மற்றும் நீரிழிவு நோய் போன்றவற்றிற்கும் மன அழுத்தம் மூல காரணமாக இருக்கிறது.

இது குறித்து மனநல மருத்துவர்கள் கூறுகையில் , ஒருவருக்கு ஏற்படும் மன அழுத்தம் அவரது உடலை பாதிப்பதோடு அல்லாமல் மற்றவர்களின் மனதிலும் உறவு மற்றும் நட்பு போன்றவற்றிலும் பாதிப்பை ஏற்படுத்துகிறது. மன அழுத்தத்தால் பாதிக்கப்படுபவர்கள் மது உள்ளிட்ட போதை பழக்கங்களுக்கு ஆளாகின்றனர்.

இதனால் அவர்கள் மீதான சமூகத்தின் பார்வை வேறுவிதமாக மாறுகிறது. எனவே மன அழுத்தத்தை விரட்டுவதற்கு உங்களுக்கு பிடித்தமான செயல்களில் ஈடுபடுவதன் மூலம் கவனத்தை திசை திருப்பி மன அழுத்தத்தை குறைக்க முடியும்.

கலை நிகழ்ச்சிகள், சினிமா, நடன வகுப்புகள், இசை நிகழ்ச்சிகள், சமையல் வகுப்புகள் உள்ளிட்டவற்றுக்கு போவது, பிள்ளைகளுக்கு பாடம் சொல்லித் தருவது, புத்தகம் படிப்பது தோட்ட வேலைகளில் ஈடுபடுவது போன்ற நமக்கு பிடித்தமான செயல்களில் ஈடுபடும் போது மனதில் அமைதியும் மன நிறைவும் ஏற்படுகிறது. வேலைக்கு போவது, வீட்டிற்கு வருவது, சாப்பிடுவது, உறங்குவது, திரும்பவும் மறுநாள் காலை பரபரப்பாக அலுவலகத்திற்கு புறப்பட்டு ஓடுவது போன்றவற்றை இயந்திரத்தனமாக தொடர்ந்து செய்து வருவதால் மனதில் வெறுமை தோன்றுகிறது.

எனவே தான் பிழைப்புக்கான வேலையை தவிர நமக்குப் பிடித்தமான விளையாட்டு இசை, சினிமா, இலக்கியம் போன்ற ஏதாவது ஒன்றில் ஈடுபாட்டை வளர்த்துக்கொள்ள வேண்டுமென மருத்துவர்கள் கூறினர். (6-2)

## பாரதச் செய்திகள்



## தமிழகத்தில் கரையொதுங்கும் இலங்கை பிளாஸ்டிக் கழிவுகள்

சுற்றுச்சூழல் பாதிப்பில் பிளாஸ்டிக் பயன்பாடு பேராபத்தை ஏற்படுத்தி வருகிறது. இது குறித்த விழிப்புணர்வு , இந்திய அளவில் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக , கடல் வாழ் உயிரினங்களுக்கு பிளாஸ்டிக் பயன்பாட்டால் ஆயுட்காலம் குறைய வாய்ப்புள்ளது.

இதன் காரணமாகவே இராமேஸ்வரம் தீவில் பிளாஸ்டிக் மீதான தடை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

இதனால் அங்கு 75 சதவீதம் பிளாஸ்டிக் பயன்பாடு குறைந்துள்ளது.

இந்நிலையில் இலங்கையில் கடலோரம் கொட்டப்படும் சமையல் எண்ணெய் மற்றும் குளிர்பான போத்தல்கள் மற்றும் பொலித்தீன் உறைகள் போன்ற கழிவுகள் கடல் வழியாக வந்து தமிழக கடலோர பகுதிகளில் ஒதுங்கி, சுற்றுச் சூழலை மாசுபடுத்தி வருவதாக குறிப்பிடப்படுகிறது.

இதனால் பவளப்பாறைகளின் சுவாசம் பாதிக்கப்படுவதுடன் மக்கள் நடமாட்டம் இல்லாத பகுதிகளில் கரை ஒதுங்கும் அவை அப்பறப்படுத்தப்படாததால் புதைந்து விடுவதாகவும் இதன் காரணமாக தமிழக சுற்றுச் சூழல் பாதிக்கப்படுவதாகவும் விசனம் தெரிவிக்கப்படுகிறது. (6-2)

# சீனா அமைக்கும் விண்வெளி நிலையம்

விண்வெளி நிலையம் ஒன்றை அமைப்பதற்குச் சீனா திட்டமிட்டு வருகிறது. அதற்கான முதலாவது பிரிவைத் தற்போது உருவாக்கியிருக்கிறது. அடுத்த ஆண்டு விண்வெளிச் சுற்றுப் பாதையில் ஏவப்படவிருக்கும் அந்தப் பிரிவின் மின்னணுச் சுற்று மற்றும் பிற அமைப்புக்களைத் தற்போது ஆராய்ந்து வருகிறார்கள்.

எட்டரை தொன் எடை கொண்ட இந்த 'டியான்கோங்க 1' பிரிவை விண்வெளிக்கு எடுத்துச் சென்று ஏவும் வகையில் 'லாங் மார்ச் 2 எப்' ரொக்கெட்டில் மாற்றங்கள் செய்யப்பட்டு வருகின்றன.

விண்வெளியில் அமையும் இந்த நிலையத்தில் 2011 ஆம் ஆண்டின் பிற் பகுதியில் 'ஷென்ஸோ 8' விண்கலம் இணையும். அதைத் தொடர்ந்து 2012 ஆம் ஆண்டில் 'ஷென்ஸோ' 9,10 விண்கலங்கள் இணையும்.


விண்கலங்களை அனுப்புவது, விண்வெளிக்கு மனிதர்களை அனுப்பும் சீனாவின் திட்டத்தில் ஓர் அங்கமாகும்.

ஆனால் விண்வெளி நிலையம் எப்போது அமைத்து முடிக்கப்படும் அல்லது அங்கு எப்போது ஆட்கள் அமர்த்தப்படுவார்கள் என்று தெரிவிக்கப்படவில்லை.

2012 ஆம் ஆண்டில் நிலவுக்கு ஆளில்லாத விண்கலத்தை அனுப்பி ஆராயவும் சீனா திட்டமிட்டு வருகிறது.

முதன்முதலாக கடந்த 2003 ஆம் ஆண்டில் விண்வெளிக்கு வீரர்களை சீனா அனுப்பியது. அதன்மூலம், அமெரிக்கா, ரஷ்யாவுக்குப் பின்னர் விண்வெளிக்கு மனிதர்களை அனுப்பிய மூன்றாவது நாடு என்ற பெருமையைப் பெற்றது.

ஆனால் வழக்கமான இரகசியம் காக்கும் தன்மை, இராணுவத்துடனான தொடர்பு காரணமாக மற்ற நாடுகளின் விண்வெளித் திட்டங்களுடன் இணைந்து செயல்பட சீனா தயங்குகிறது.



எப்போதும் சுறுசுறுப்பாகப் பணிகள் நடைபெறும் சர்வதேச விண்வெளி நிலையத்தில் கூட இணைந்து செயல்பட சீனா முன்வரவில்லை.

# சுறா போன்ற படகு!




வடிவமைப்பில் 'சுறா' போன்றே உள்ள' அதைப் போலவே காற்றில் சீறிப் பாயும் ஒரு படகை அமெரிக்காவின் 'இன்னஸ் பேஸ்' நிறுவனம் தயாரித்திருக்கிறது. பெரிய வெள்ளைச் சுறா போன்ற இந்தப் படகு பக்கவாட்டில் இப்படியும் அப்படியுமாக நன்றாகச் சாயும். காற்றில் 12 அடி உயரம் வரை எழும் பிப் பாயும்.

வேடிக்கையான முயற்சிகளில் அதிக ஆர்வம் காட் டும் பெரும் பணக் காரார்களுக்கு இது பிடித்தமானதாக இருக்கக் கூடும். காரணம் இதன் விலை அப்படி! ஏறக்குறைய அரைக் கோடி ரூபாய்.

'சீபிரீச்சர் எக்ஸ்' என்ற இந்தப் படகு தண்ணீரில் மூழ்கியும் செல்லும். பக்க வாட்டு மற்றும் மேல் துடுப்புகள்' திறக்கும் தாடை' சுறாவுக்கே உரிய நீள நீளமான 'பற்கள்' எல்லாமே உண்டு.

இந்தப் படகு ஏறக்குறைய நிஜ சுறாவின் நீளத்துக்கே அமைந்துள்ளது. அதாவது 16.5 அடி. இந்த 'சுறா படகால்' தண்ணீருக்கு மேல் மணிக்கு 80 கீலோமீற்றர் வேகத்திலும், தண்ணீருக்குள் 40 கி.மீ. வேகத்திலும் செல்ல முடியும்.

இரண்டு இருக்கைகள் கொண்ட இப் படகின் உட்புறம் மிக நவீன வசதிகளுடன் ஆடம்பரமாக உருவாக்கப்பட்டிருக்கிறது.


# 'மோப்பம் பிடிக்கும்' பக்டீரியாக்கள்!

சில மோசமான வாசனைகளை பக்டீரியாக்கள் உருவாக்குகின்றன என்பது உண்மை.

ஆனால் பக்டீரியாக்களுக்கும் 'மூக்கு' உண்டு, காற்றில் கலக்கும் வாசனையுள்ள 'அம்மோனியா' போன்ற வேதிப் பொருட்களை அவை 'மோப்பம் பிடிக்கின்றன' என்று விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

இதுதொடர்பான ஆய்வை நியூகேசில் பல்கலைக்கழக ஆய்வாளர் குழு மேற்கொண்டது. அக்குழு, ஒரு பக்டீரியாவானது, எதிர் பக்டீரியா உற்பத்தி செய்து காற்றில் கலந்து விடும் 'அம்மோனியா' போன்ற வேதிப்பொருட்களை உணர்கிறது என்று கண்டு பிடித்தது. வாசனைக்குப் பதில் வெளிப்பாடாக ஓர் உயிர்ப் படலத்தை பக்டீரியா ஏற்படுத்துகிறது.

ஒரேவகையான தனித்தனி பக்டீரியாக்கள் சேர்ந்து உருவாக்கும் அந்தப் படலம்,



போட்டி பக்டீரியாவுக்கு எதிராக அமைகிறது என்றும் விஞ்ஞானிகள் கூறுகின்றனர். இந்தக் கண்டுபிடிப்பு, உயிரினங்கள் எவ்வாறு மோப்பம் பிடிப்பதற்குக் கற்றன என்பதை அறிய உதவும் என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

# வாய்பேச இயலாதோருக்கான செல்போன்!

வாய்பேச இயலாதோர், காது கேளாதோருக்கு இனிப்பான செய்தி இது. அவர்கள், சைகை மொழியைப் பயன்படுத்தக் கூடிய செல்போன் விரைவில் சந்தைக்கு வரவிருக்கிறது. ஆரம்பகட்டமாக "அமெரிக்க சைகை மொழி''யை செல்போனில் அனுப்ப முடியும்.

வோஷிங்டன் பல்கலைக்கழகப் பொறியியலாளர்கள் இந்த செல்போனை உருவாக்கியிருக்கிறார்கள்.

இது, ''அமெரிக்க சைகை மொழி''யைப் புரிந்துகொள்ளும் வகையில் அசைவு கண்டுபிடிப்புத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகிறது. அசைவுகளை வீடியோக் காட்சி களாக்கி செல்போன் நெட்வேர்க் மூலம் அனுப்புகிறது.

இதற்கான உபகரணத்தை வீடியோக் கமராவுடன் கூடிய எந்த நவீன செல்போனிலும் இணைக்கமுடியும். தற்போது கள ஆய்வில் இந்த செல்போன் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த செல்போனைக் கொண்டு மேற்கொள்ளப்படும் பெரிய அளவிலான கள ஆய்வில் 11 பங் கேற்பாளர்களும், ஆய்வாளர்களும் இறங்கி இருக்கின்றனர்.

"இது, காது கேளாதோர் எப்படி மொபைல் வீடியோ போன்களை பயன்படுத்த முடியும் என்று அமெ ரிக்காவில் மேற்கொள்ளப்படும் முதல் ஆய்வாகும்'' என்று இந்தத் திட்டத் தலை வரான ஈவ் ரிஸ்கின் கூறுகிறார். இவர் வோஷிங்டன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மின்னியல் பொறியியலாளர். தற்போது ஒரு நொடிக்கு 30 'கிலோபைட்ஸ்' அளவிலான தகவல்களை எடுத்துச் செல்லும் வகையில் இந்தத் தொழில்நுட்பத்தை மேம்படுத்தும் முயற்சியில் விஞ்ஞானிகள் ஈடுபட்டிருக்கின்றனர்.

மேலும் இதற்குத் தேவையான பற்றரி சக்தியையும் குறைக்கும் விதமாக, உண்மையிலேயே சைகை செய்யப்படுகிறதா என்று அறியும் வகையில் 'அசைவு சென்சார்களையும்' விஞ்ஞானிகள் பொருத்தியிருக்கிறார்கள்.

மக்கள் தங்கள் தினசரி வாழ்க் கையில் இந்த செல்போனை எப்படிப் பயன்படுத்துகிறார்கள், அப்போது என்ன தடைகளை அவர்கள் எதிர்கொள் கிறார்கள் என்றும் விஞ்ஞானிகள் தங் களின் கள ஆய்வில் தற்போது கவனித்து வருகிறார்கள்.





# 3டி படத்தை இனி தொட்டும் பார்க்கலாம்

3டி தொழில்நுட்பம் நாளுக்கு நாள் வளர்ச்சியடைந்து வருகிறது. ஹொலி வுட்டில் பல சினிமாக்கள் 3டியில் வரு கின்றன. வீட்டு நிகழ்ச்சிகளை 3டியில் படம் பிடிக்கும் கமராக்கள் வந்துவிட்டன. 3டி ஒளிபரப்பு அனுமதிக்கு டிஸ்கவரி உள்ளிட்ட சனல்கள் விண்ணப்பித்துள் ளன. 3டி காட்சிகளைப் பார்த்து ரசிக்கும் டிவியை எல்ஜி, சொனி, பனசொனிக் நிறுவனங்கள் அறிமுகப்படுத்துகின்றன.

இந்நிலையில், திரையில் தெரியும் 3டி காட்சிகளைத் தொட்டு, தடவிப் பார்க்கும் வசதியை ஜப்பான் தேசிய அறிவியல், தொழில்நுட்ப நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது.

திரை யில் ஒரு பலூன் வருகிறது என வைத்துக் கொள்வோம். அதை எடுப்பது போல கையைக் கொண்டு சென்றால், நம் கையில் பலூன் தவழ்வது போலக் காட்சி மாறும். பலூனின் பிம்பம் நமது கையிலேயே விழும். பலூனை தத் ரூபமாக நம் கையிலேயே பார்க்கலாம்.

குத்துவதுபோல விரலைக் கொண்டு சென்றால், பலூன் பிம்பம் மாறுதல் அடை



ந்து குழி உருவானது போலக் காட்சியளிக்கும். பிரத்தியே கமாக கமராக்களின் உதயுடன் நமது கைகளின் இயக்கம் தொடர்ந்து படம் பிடிக்கப்பட்டது. அதற்கேற்ப காட்சிகள் மாறுகின்றன. சுகுபா நகரில் நேற்று முன்தினம் நடந்த அறிமுக நிகழ்ச்சி யின் போது இதை அந்த நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் செய்துகாட்ட, பார்த்த வர்கள் மிரண்டே போய்விட்டனர். முக்கியமான ஒபரேஷன்கள், வீடியோ கேம் ஆகியவற்றில் இத் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தவுள்ளனர்.

# பாகிஸ்தானில் மழை வெள்ளம் காரணமாக பாரிய மனிதப் பேரவலம்; 10 இலட்சம் பேர் வெளியேற்றம்



(கராச்சி)

பயங்கர வெள்ளப்பாதிப்பிலிருந்து பாகிஸ்தான் மீண்டு வருவதற்கு முன்பே ஒரு மாதத்துக்குள் இரண்டாம் முறையாக சிந்து நதியில் அபாய கட்டத்தைக் தாண்டி வெள்ளம் பெருகி வருகிறது. அதனால் அப்பகுதியில் வசிக்கும் மக்கள் உடனடியாக வெளியேற வேண்டும் என்று அந்நாட்டு அரசு உத்தரவிட்டுள்ளது.


இந்நிலையில் கடந்த 48 மணி நேரத்தில் பாக். தென்பகுதியில் 10 இலட்சம் மக்கள் தங்கள் வசிப்பிடங்களை விட்டு வெளியேற்றப்பட்டதாக ஐ.நா. தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானில் பெய்த பலத்த மழையால் சிந்து நதியில் வெள்ளம் ஏற்பட்டு ஆயிரத்து 600 பேர் பலியாகினர். 60 இலட்சம் பேர் தங்கள் வீடு, உடைமைகளை இழந்து நிவாரணப் பணியை எதிர்நோக்கிக் காத்திருக்கின்றனர். நிவாரண முகாம்களில் பாதுகாப்பான உணவு , குடி நீர் கிடைக்காததால் பல்வேறு நோய்களால் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இந்நிலையில், பருவ மழை தீவிரமடைந்ததால் பாகிஸ்தானின் தென்பகுதியில் பாயும் சிந்து நதியில் கடந்த 26 ஆம் திகதி இரவில் அபாய கட்டத்தையும் தாண்டி வெள்ளம் பெருக்கெடுத்துள்ளது.

சிந்துடெல்டா பகுதியில் உள்ள தாட்டா நகரின் அருகில் ஆற்றில் உடைப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் சிந்து டெல்டா பகுதி வெள்ள அபாயத்தில் சிக்கியுள்ளது. இதையடுத்து தாட்டா என்ற நகரப் பகுதியில் வசிக்கும் மூன்று இலட்சம் மக்கள் உடனடியாக அப்பகுதியிலிருந்து வெளியேறும் படி அந்நாட்டு அரசு உத்தரவிட்டுள்ளது. படகுகள் , பேருந்துகள் , புகையிரதங்கள், ஹெலி கொப்டர்கள், இராணுவம் , கடற்படை உட்பட பல்வேறு போக்குவரத்துகளைப் பயன்படுத்தி மக்களை வெளியேற்ற பாக். அரசு முனைந்துள்ளது.

தாட்டா பகுதியிலிருந்து வெளியேறும் மக்கள் ஐதராபாத் கராச்சி மற்றும் பாடின் மாவட்டங்களுக்கு செல்ல ஆரம்பித்துள்ளனர். இதற்கிடையில் ஐ.நா. அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் பாகிஸ்தானின் தென்பகுதியில் மட்டும் கடந்த 48 மணி நேரத்தில் 10 இலட்சம் மக்கள் தங்கள் குடியிருப்புகளை விட்டு வெளியேற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பாகிஸ்தான் சிந்து நதியில் ஏற்பட்டுள்ள வரலாறு காணாத வெள்ளத்தால் அந்நாட்டு பொருளாதாரம் கடுமையாக பாதிப்புக்குள்ளாகியிருக்கிறது.

இந்த நிதியாண்டில் அந் நாட்டு பொருளாதார மொத்த வளர்ச்சி 4.5 சதவீதத்தைத் தொட்டு விடும் என்று எதிர்பார்க்கப்பட்டது.



ஆனால் இந்த வெள்ளச் சேதத்தால் அது 3 சதவீதத்துக்குள் மட்டுமே இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. கோதுமை உற்பத்தியில் ஆசியாவின் மூன்றாமிடம் வகிக்கும் பாகிஸ்தானில் சேமித்து வைக்கப்பட்டிருந்த ஆறு இலட்சம்தொன் கோதுமை வெள்ளத்தால் ஏற்கனவே சேதம் அடைந்தது.

இந்நிலையில் இரண்டு நாட்களுக்கு முன் அந்நாட்டு உணவு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்தியில், மேலும் ஒரு இலட்சத்து 25 ஆயிரம் தொன் கோதுமை வீணாகியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. வடக்கு சிந்து மாகாணத்தில் 16 இலட்சம் தொன் அரிசி வெள்ளத்தில் சிக்கி வீணாகியுள்ளது.

இதற்கிடையில் ஐ.நா உணவுத் திட்டத்தின் செய்தித் தொடர்பாளர் அளித்த பேட்டியில், வெள்ளச் சேதத்தைப் பயன்படுத்தி நிவாரணப் பணிகளில் பயங்கரவாதிகள் மற்றும் கலவரக்காரர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இதன் மூலம் பாகிஸ்தானின் பெரும் பகுதியைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைக்கும் முயற்சிக்கு மக்களிடம் ஆதரவைப் பெற முயல்கின்றனர் என்று தெரிவித்துள்ளார். தவிரவும் பாக். நிதியமைச்சரும் மேலதிக வங்கி ஆளுநரும் சர்வதேச நிதி நிறுவனமான ஐ.எம்.எப். இடம் 100 கோடி டொலர் கேட்டு காத்திருக்கின்றனர். இந்த நிதி வருமா என்று தெரியாததால் பங்குச் சந்தையில் நேற்று முன்தினம் வீழ்ச்சி ஏற்பட்டது. (6-2)




## வீட்டுச் சுவரை உடைத்து வெளியேறிய குண்டுப்பெண்



(பாங்கொங்)

தாய்லாந்தின் பாங்கொக் நகரைச் சேர்ந்த பெண் உம்னாய்பான் டாங்ப்ரபாய் வயது (40) என்பவர் நாட்டிலேயே மிகவும் குண்டான பெண் ஆவார். இவரது எடை 274 கிலோ வாகும். கடந்த 3 ஆண்டாக இவர் வீட்டை விட்டு வெளியேறவில்லை. இவரால் வீட்டில் உள்ள குளியலறைக்கு மட்டுமே நடந்து செல்ல முடியும். இவருக்கு எல்லா உதவிகளையும் மகனே செய்து வந்தார்.

இந்நிலையில் இவரது காலில் கட்டி ஏற்பட்டது. அதை அகற்றுவதற்காகவும் உடல் எடையை குறைப்பதற்காகவும் வைத்தியசாலைக்கு செல்ல முடிவு செய்தார். ஆனால் வாசல்வழியாக அவரால் வெளியேற முடியாது. அபார்ட்மென்ட்டின் 3 ஆவது மாடியில் வசிக்கும் பெண்ணை வைத்தியசாலையில் சேர்க்க உதவுங்கள் என உள்ளூர் அதிகாரிகளுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டது.


இதையடுத்து மீட்பு குழுவினர் வந்து வீட்டு சுவரை உடைத்து சிறப்பு எலிவேட்டர் மூலம் குண்டுப்பெண்ணை கீழே இறக்கினர். அதன் பின் சிறப்பு நோயாளர் காவு வாகனத்தில் அவர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். அவருக்கு அபார்ட்மென்ட்டில் குடியிருப்போர் கையசைத்து வாழ்த்து தெரிவித்தனர். சிகிச்சைக்குப் பின் கடற்கரைக்கு சென்று அலை நீரில் குதித்து விளையாட வேண்டும் என ஆசையாக உள்ளது என்கிறார் உம்னாய்பான். (6-2)

## இந்திய ரி.வி.சனல்களுக்கு பாகிஸ்தானில் தடை

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் ஒளிபரப்பு செய்யப்படும் இந்திய தொலைக்காட்சி அலைவரிசைகளை உடனடியாக நிறுத்தும் படி அந்நாட்டு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. அரசின் உரிமம் பெறாமல் ஒளிபரப்பப்படும் தொலைக்காட்சி அலைவரிசைகளை உடனடியாக நிறுத்த உத்தரவிட்டுள்ளது.

இந்திய அலைவரிசைகள் மட்டுமல்லாது பல வெளிநாட்டு அலைவரிசைகளும் இந்த முடிவால் பாதிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக பாக்-இங்கிலாந்து விளையாடும் கிரிக்கெட் போட்டியை காண முடியாமல் ரசிகர்கள் தவிப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (6-2)




கென்யாவில் புதிய அரசியல் சாசனத்திட்டத்தில் அந்நாட்டு அதிபர் ம்வாய் கிபாகி (நடுவில்) கையெழுத்திட்டார்.

## உலகின் கனவுலக விமானம்; போயிங் நிறுவனத்தால் அறிமுகம்

பல ஆண்டுகளாக எதிர்பார்க்கப்பட்ட போயிங் நிறுவனத்தின் கனவுலக விமானம் போயிங் 787 டிரீம்லைனர் விமானம் சமீபத்தில் வெள்ளோட்டம் விடப்பட்டது. உலகின் அதிநவீன சொகுசு விமானம் என்று அழைக்கப்படும் இந்த விமானம் இன்னும் சில நாட்களில் பயன்பாட்டிற்கு வரவுள்ளது.

கடந்த ஆறு ஆண்டுகளுக்கு முன் இந்த கனவுலக விமானத் திட்டம் குறித்து போயிங் நிறுவனம் அறிவித்தது. ஆனால் இந்த புதுமையான விமானம் திட்டமிட்டபடி வெளி வரவில்லை. அதிக விலையும் குறைவான ஓடர்களுமே இதற்கு முக்கிய காரணமாக இருந்தது. மேலும் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம், மூலப் பொருட்கள் பற்றாக்குறை, அதிக எடை இறக்கைகளை பொருத்துவதில் ஏற்பட்ட தொழில் நுட்ப சிக்கல் போன்றவைகளும் டிரீம்லைனர் விமானம் தாமதமானதற்கு காரணங்கள் ஆகும்.

இத்தனை தடைகளையும் தாண்டி சமீபத்தில் இந்த விமானம் வெள்ளோட்டம் விடப்பட்டது. இவ் விமானம் பல்வேறு சிறப்புகளை கொண்டது. அமர்ந்திருப்பதே தெரியாத



அளவிற்கு மெத்தை போன்ற இருக்கைகள், கண்களைக் கவரும் பல வண்ண விளக்குகள், மிக குறைந்த எரிபொருள் செலவு நிறைந்த திறனும் குறைந்த சத்தமும் கொண்ட இன்ஜின்கள், பயணிகள் விண்ணைப் பார்த்து ரசிப்பதற்காக நீண்ட ஜன்னல்கள் என பல சிறப்புகள் இந்த விமானத்தில் உண்டு. இந்த விமானம் சிட்னியில் இருந்து சிகாகோ வரையில் தரையிறங்காமல் தொடர்ந்து பறக்கும் திறன் கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது. (6-2)

தன்னிடம் தானே நம்பிக்கையிழப்பது இறைவனிடம் நம்பிக்கையிழப்பதாகும்.

*- விவேகானந்தர்.*

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## ரணிலை முந்திய ஹக்கீம் நம்ப நட; நம்பி நடவாதே

அரசியலமைப்பு சீர்திருத்தம் தொடர்பில் பொது உடன்பாடு ஒன்றை எட்டுவதற்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் சில தடவைகள் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

பேச்சுவார்த்தையில் நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சிமுறைக்கு முடிவுகட்டி நாடாளுமன்றுக்குப் பொறுப்புக் கூறும் வகையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட பிரதமர் ஆட்சிமுறையைக் கொண்டுவரும் நடவடிக்கைபற்றி இருவரும் ஆராய்ந்தனர்.

நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சிமுறையை இல்லாதொழிக்க வேண்டும் என்பதில் ரணில் விக்கிரமசிங்க உறுதியாக உள்ளார்.

ரணிலின் மனநிலையை உணர்ந்து கொண்ட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவருடன் பேச்சு நடத்தி அவரின் திட்டத்தை அறியும் அதே நேரம், ரணில் விக்கிரமசிங்க அரசுடன் இணங்கிச் செல்கின்றார் என்ற தோற்றப்பாட்டையும் ஏற்படுத்திக் கொண்டு,

ரணிலின் பக்கத்தில் உள்ளவர்களை தன் பக்கம் இழுக்கும் முயற்சியையும் வெற்றிகரமாக மேற்கொண்டார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் ரணில் விக்கிரமசிங்க பேச்சுவார்த்தை நடத்தும் போதே பிரபாகணேசன் அரசின் பக்கம் தாவினார்.

அதற்குப் பின்பும் ரணில் விக்கிரமசிங்க திருந்தினாரல்ல. தன்னிடம் உள்ளவர்களை அரசு தன்பக்கம் இழுத்தாலும் தான் நினைத்த மாதிரி நிறைவேற்று அதிகாரம் கொண்ட பிரதமர் ஆட்சிமுறையை ஜனாதிபதியுடன் இணைந்து அமுலாக்கி விடவேண்டுமென்பதில் ரணில் கொண்டிருந்த வைராக்கியம், எதையும் சிந்திப்பதற்கு அவருக்கு இடம் தரவில்லை.

அதேநேரம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை ரணில் நம்பினார். ஜனாதிபதி மகிந்தவோ ரணில் தன்னை நம்பும்படியாக நடந்தாரேயன்றி ரணிலை அவர் நம்பவில்லை.

இந்நிலையில்தான் ரணில் அரசுடன் சேர்ந்து விட்டார் என்ற பிரசாரம் கட்டவிழ்த்து விடப்பட்டது.

ரணில் மீதான குற்றச்சாட்டை தகுந்த முறையில் – தமக்கு சாதகமாக்கிக் கொண்ட முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் ஜனாதிபதியின் பக்கம் தாவினார்.

என்ன செய்வது, ரணிலின் கெடுகாலம் எந்தப்பாதையையும் திறந்துவிடுவதாக இல்லை. ஒரு காலத்தில் சந்திரிகா குமாரதுங்கவை விட்டு விலகி வெளியேறிய ரவூப் ஹக்கீமால் சந்திரிகா குமாரதுங்க அசௌகரியங்களைச் சந்தித்தார். இப்போது ரணிலுக்கு ஹக்கீம் பாடம் புகட்டியுள்ளார்.

என்ன செய்வது! எங்க நாட்டு அரசியலின் சிறப்பு அப்படித்தான்.

# பரமேஸ்வராக் கல்லூரியை தோற்றுவித்த வள்ளல் சேர்.பொன்.இராமநாதன்



**ஓர் நினைவுப் பார்வை**

1915 ஆம் ஆண்டு இலங்கையின் தென்மாகாணத்தில் கட்டுக்கடங்காத வகையில் சிங்கள – முஸ்லிம் மக்களிடையே கலவரம் மூண்டு அன்றிருந்த ஆங்கிலேய ஆட்சியாளர்களினால் அடக்க முடியாது போகவே அன்றிருந்த பல சிங்கள அரசியல் தலைவர்களை கைது செய்து சிறையில் போட வேண்டிய நிலைமைக்குள்ளானது.

நீதி நிர்வாகம், சிவில் நிர்வாகம், முக்கிய சட்டவாக்கம் எல்லாமே ஆங்கிலேயரினால் இங்கிலாந்திலிருந்து செயற்பட்ட காரணத்தினால் இங்கிருந்த ஆங்கில ஆட்சியாளர் இங்கிலாந்தின் கட்டளைகளுக்கு மாத்திரமே செவிமடுப்பர்.

சிங்கள – முஸ்லிம் கலவரத்துக்கு தீர்வு காணும் எண்ணத்துடனும் கைது செய்து சிறையிலுள்ள சிங்களத் தலைவர்களை மீட்கவுமாக தமிழனான சேர்.பொன். இராமநாதன் இங்கிலாந்துக்கு விரைந்தார். அவர் அச்சமயம் இலங்கை சட்டவாக்க சபையில் ஒரு அங்கத்தவராக தெரிவு செய்யப்பட்டு செயற்பட்டு வந்தார். அக்காலத்தில் ஆகாய விமானம் ஓடுவதில்லை. கடல் கப்பல் மூலம் தான் பிரயாணங்கள் மேற்கொள்ளப்பட்ட காலம். இங்கிலாந்து சென்ற சேர்.பொன். இராமநாதன் தொடர்பு கொள்ள வேண்டிய அதிகாரிகளுடன் பிரச்சினைகளை எடுத்துக்கூறி ஒரு சுமுகத் தீர்வுடன் நாடுதிரும்பினார். கைது செய்யப்பட்ட சிங்களத் தலைவர்கள் விடுதலை செய்யப்பட்டார்கள். இதன் காரணமாக கடல் கப்பல் மூலம் கொழும்பை வந்தடைந்த சேர். பொன். இராமநாதனை விடுதலை அடைந்த சிங்களத் தலைவர்கள் உட்பட சிங்கள மக்களினால் ஒரு குதிரை வண்டியில் உட்கார வைத்து குதிரைகளை அகற்றி அவற்றிற்குப் பதிலாக தாங்களே குதிரை வண்டியை இழுத்துவந்து தங்களது நன்றியை தெரிவித்துக் கொண்டார்கள்.

இவ்வாறான ஒரு சிறந்த அரசியல் தலைவராகவும் சட்ட வழக்கறிஞராகவும் திகழ்ந்தவர் தான் வடக்கில் யாழ்ப்பாணத்தில் மருதனார்மடத்தில் இராமநாதன் மகளிர் கல்லூரியை 1913ஆம் ஆண்டிலும் திருநெல்வேலியில் பரமேஸ்வராக் கல்லூரியை 1921ஆம் ஆண்டிலும் தோற்றுவித்து சைவப்பிள்ளைகளின் படித்தலுக்கும் சைவப் பண்பாடுகளை ஊக்கு வித்து மேம்படச் செய்யவும் வித்திட்ட சேர்.பொன். இராமநாதன் ஆவார்.

சேர். பொன். இராமநாதன் 1851ஆம் ஆண்டு (சித்திரை) ஏப்ரல் மாதம் 15ஆம் திகதி கொழும்பில் பிறந்தவர். தனது படிப்பை கொழும்பு றோயல் கல்லூரியில் ஆரம்பித்து பின்னர் தென்னிந்திய மதராசில் (சென்னை) பிரசிடன்ஸி ï Ù (PRESIDENCY COLLEGE) மேற்படிப்பை மேற்கொண்டார். அதன்பின்னர் சட்டத்துறையை தெரிவு செய்து 1874 ஆம் ஆண்டு கொழும்பு நீதிமன்றில் வழக்கறிஞர் (ADVOCATE) ஆனார். சேர். பொன். இராமநாதனின் அரசியல் வாழ்க்கை 1879ஆம் ஆண்டில் ஆரம்பமானது. சட்டவாக்க சபையில் உத்தியோகபூர்வமற்ற அங்கத்தவராக நியமனம் செய்யப்பட்டார். 1892ஆம் ஆண்டு வரையிலும் தொடர்ந்து பதவி வகித்து வந்தார்.

இங்கிலாந்து அரசினால் 1889ஆம் ஆண்டில் KCMG என்ற அதி உயர் பட்டத்தையும் 1903ஆம் ஆண்டு இராசாவின் நியாயவாதி (KING'S COUNSEL) பட்டத்தையும் பெற்றிருந்தார்.

அவருடைய நேர்மையையும் திறமையையும் கண்ட ஆங்கில அரசு அவரை நீதி நிர்வாகத்தில் சொலிசிற்றர் ஜெனரலாக நியமனம் செய்தது. 1892ஆம் ஆண்டில் இருந்து 1908ஆம் ஆண்டு வரை அப்பதவியை வகித்தார்.பின் மீண்டும் அவர் அரசியலுக்குள் நுழைந்தார். சட்டவாக்க சபையில் ஒரு அங் கத்தவரானார். சேர்.பொன். இராமநாதன் மானிப்பாயைச் சேர்ந்த முதலியார் இ.நன்னித்தம்பி என்பவரின் மகளான செல்லாச்சி அம்மாளை மணமுடித்து மகேசன், இராஜேந்திரா, வாமதேவன் என்னும் ஆண் மகன்களையும் மூன்று பெண் பிள்ளைகளையும் பெற்றிருந்தார். 1906ஆம் ஆண்டில் மனைவி இறந்த பின் அவுஸ்திரேலியாவைப் பிறப்பிடமாகக் கொண்ட (R.L.HARRISON) ஆர்.எல். ஹரிசன் என்ற பெண்ணை மணம் செய்தார். அவரை தனது செயலாளராகவும் வைத்திருந்தார். பின்னர் இராமநாதன் மகளிர் கல்லூரியின் அதிபராக நியமனம் செய்தார். பல ஆண்டுகளாக வயது முதிர்ச்சி யடையும் வரையும் அம்மணி அப் பதவியை வகித்து வந்தார். அன்னார் தனது பெயரை லீலாவதி என தமிழ்ப் பெயராக மாற்றம் செய்தது மட்டுமின்றி இந்து சமயத்திலும் தன்னை இணைத்துக் கொண்டார். அத்துடன் சைவ உணவு உண்பவராகவும் தன்னை ஆக்கித் கொண்டார்.

சேர். பொன். இராமநாதன் இவர் மூலமாக பெற்ற ஒரே ஒரு பெண் பிள்ளையின் பெயர் சிவகாமசுந்தரி. இவரை இந்தியாவிலிருந்து வரவழைத்த சு. நடேசபிள்ளை என்ற உயர்ந்த நற்பண்புகளைக் கொண்ட கல்விமானுக்கு திருமணம் செய்வித்து வைத்தார். நடேசபிள்ளை அவர்களை பரமேஸ்வராக் கல்லூரியின் முதல் அதிபராகவும் நியமித்து 1921 இல் கல்லூரியை ஆரம்பித்தார்.

பரமேஸ்வராக் கல்லூரியை ஆரம்பித்து அதனை செயற்படுத்துவதற்கு ஒரு சட்டமூலத்தை அன்றைய சட்டவாக்கு சபையில் இயற்றி அச்சட்டம் 1925ஆம் ஆண்டைய 7ஆம் இலக்க நியதிச்சட்டமாக இன்றும் வலுவில் உள்ளது. சட்ட மூலம் (ENACTMENTS)அத்தியாயம் 298இல் உள்ளதை எவரும் கண்டு கொள்ளலாம்.

அச்சட்ட முன்னுரையில் பரமேஸ்வராக்கல்லூரியில் அமைப்பு விதிகள் பற்றியும் அக்கல்லூரியின் பணிப்பாளர் சபையை உருவாக்கல் சம்பந்தமாகவும் அது வெளிப்படுத்துகிறது என்று கூறப்பட்டுள்ளது. மேலும் அம் முகவுரையில் இந்து மாணவர்களுக்கு படித்தலுடன் கூடவே உன்னத ஒழுக்கம் பேணும் குறிக்கோளை அடையவும், பூரணத்துவமாக வேலைகளில் ஈடுபடும் தன்மை, கடவுளிடம் மனதார அர்ப்பணிக்கும் தன்மை, பெரியோர்களுக்கு கீழ்ப்படிவாக நடக்கவும் இக் கல்லூரி பயிற்சி அளிக்கக் கூடியதாக இருக்கும் எனவும் கூறப்படுகின்றது.

அதற்கான அடிப்படை விடயங்களை செய்வதற்காக இக் கல்லூரிக்கு நம்பிக்கைப் பொறுப்பாளர்களாக சிலரை நியமிக்கவும் இச் சட்டம் வழி செய்கின்றது. அது இலங்கை பரமேஸ்வராக் கல்லூரியின் பணிப்பாளர் சபை என்ற பெயரில் இயங்கும். அத்துடன் அதற்கான பொது இலட்சனையும் கொண்டுள்ளது. சட்டத்தில் குறிப்பிடப்பட்ட பணிப்பாளர் சபை அங்கத்தினர் வருமாறு, சேர். பொன்.இராமநாதன், திருமதி இராமநாதன், இராமநாதன் இராஜேந்திரா, இராமநாதன் வாமதேவா, அருணாசலம் மகாதேவா, பரமேஸ்வராக் கல்லூரியின் அதிபர், வைத்திலிங்கம் துரைசாமி, சுப்பிரமணியம் இராஜரட்ணம் ஆகியோராவர். இவர்களின் ஓய்வில் அல்லது இறப்பில் அவரவர்களின் பரம்பரை வாரிசு அவ்விடங்களை நிரப்புவர் என்றும் கூறுகின்றது.

கல்லூரிக்கான எல்லா அசையும் அசையா சொத்துகளும் இனிமேல் சேரக் கூடியவைகளும் கல்லூரியின் பாவனைக்காகவும் நன்மைக்காவும் பயன்படுத்த பணிப்பாளர் சபைக்கு அதிகாரமுள்ளது. சேர்.பொன்.இராமநாதன் வாழ்நாள் தலைவராக விருப்பார் என்றும் மேலும் இச் சட்டம் கூறுகின்றது.

**கனக நமநாதன் சட்டத்தரணி**
*(தலைவர், பரமேஸ்வராக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்– யாழ்.கிளை)*

# முதலிடம் யாருக்கு?

ஆற்றலுடையவரின் ஆற்றலாவது பணிவுடன் நடத்தலாகும். அது சான்றோர் தம் பகவரைப் பகைமையிலிருந்து மாற்றுகின்ற கருவியாகும்.

உரிய இடத்தை உரிய காலத்தில் தேர்ந்தெடுப்பது ஞானமாகும் என்பது பழமொழி. இதையே இன்னொரு பழமொழியில் சொன்னால் பந்திக்கு முந்து படைக்கு பிந்து .

இவையெல்லாம் எதைக் குறிக்கின்றன என்றால், ஒவ்வொரு மனிதனும் தான் செய்கின்ற, தான் தேர்ந்தெடுக்கின்ற, தான் அடைய வேண்டிய செயல்களில் முதலிடத்தில் இருக்க வேண்டும் என்பதாகப் பார்க்கின்றோம்.

இதில் ஒன்றும் தவறில்லையே. பந்தயத்தில் ஓடுகின்ற அனைவருமே முதலிடத்தில் வரவேண்டும் என்று நினைப்பதில் தவறு ஒன்றும் இல்லை. காரணம் முதலிடம் என்பது பெருமைக்குரியது.

ஆனால், தான் முதலிடம் வருவதற்காக அடுத்தவரை சதிசெய்து, பின்னுக்குத் தள்ளிவிட்டோ, காலை வாரிவிட்ட, அல்லது காட்டிக்கொடுத்துவிட்டோ, அடைய நினைப்பது எந்த விதத்தில் நியாயம்? எந்த விதத்தில் சரியாக இருக்க முடியும்? அப்படி வருவது கோழைத்தனம், சேம்பேறித்தனம், கள்ளத்தனம்.

ஆம், இன்றைய நற்செய்தி வாசகமும் இதைத்தான் நமக்கு அழகாகப் படம் பிடித்துக் காட்டுகிறது. யேசு ஒரு சாமன்ய மனிதனைப் போன்று அனுபவசாலி அதனால் தான் மனித வாழ்வுக்கு வேண்டிய உயர்ந்த கருத்துக்களை, அன்றாட நிகழ்வுகளை வைத்து, இயற்கையாக, இயல்பாக, சாதாரண நிலையில் கூறுகிறார்.



அதாவது அருளாகிய நதி தற்பெருமை என்னும் மலையை நோக்கிப் பாயாது; மாறாக பணிவு என்னும் பள்ளத்தாக்கை நோக்கியே பாயும்.

ஒருவர் விருந்துக்கு அழைக்கும் போது உயர்ந்தவரையும், பணக்காரரையும், மட்டும் அழைக்காமல் ஏழைகள், உடல் ஊனமுற்றவர்கள், பார்வையற்றோரை அழைத்து விருந்து கொடுக்கச் சொல்கிறார். காரணம், இருப்பவருக்குக் கொடுப்பதைவிட, இல்லாமல், இயலாமையில் இருப்பவருக்குக் கொடுக்கும் போதுதான் கைமாறு இவ்வுலகில் அல்ல மறுவுலகில் அதிகமாகக் கிடைக்கும்.

ஆம், பணிவே உயர்வு; பணிவு உள்ளவரே முதலிடத்திற்குரியவர் முதலிடத்தைத் தேடிச் செல்ல வேண்டாம்;

## பரமபிதா காட்டிய பாதை

பணிவும், தாழ்ச்சியும் இருந்தால் முதலிடம் நம்மை தேடிவரும். இன்னொன்றையும் நாம் புரிந்து கொள் வேண்டும். இருப்பவர்களுக்கும் குறைகள் தான் அதிகம் தெரியும்! இல்லாதவர்களுக்கு நிறைகளே தெரியும்!

*ஜோன் ஹரபேர்ட்*


5 மில்லியன்
பெறுமதியான பரிசுகள்!
700 க்கும் அதிக
வெற்றியாளர்கள்
STAR POINTS
ExSTAR vaganza
"ExSTARvaganza" மூலம் இலட்சாதிபதியாகுங்கள்!
WIN என டைப் செய்து 141 க்கு SMS செய்யுங்கள்
ஒவ்வொரு விண்ணப்பமும் 10 Star Points பெறுமதியானதும்
SMS கட்டணங்கள் இல்லை
இறுதித் தினம் 2010 செப்டெம்பர் 5 ஆம் திகதி
STAR POINTS
Earn More. Spend Less.


தற்போது
விற்பனையில்
Safari
Motor Cycle
S.P.N. Motors
171, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்


ESWARRAN
Traders & Transport Service
GENUINE
TRANSPORT SERVICE
யாழ். → கொழும்பு
யாழ். ← கொழும்பு
பயணிகள் சொகுசு
பஸ் சேவை
No.115,69,Kasthuriar Road, Jaffna.
T.P: 021 - 2222813 / 021 - 2224317
E-mail: gmsc@sltnet.lk
201B, Dam Street, Colombo 12.
Tel : +94 112 433 889
Fax : +94 112 435 247
கிளிநொச்சியில்
ஈஸ்வரன் ரேடர்ஸ் &
ரான்ஸ்போட்
இல. 01, கரடிப்போக்கு,
கிளிநொச்சி.[செலான் வங்கி அருகில்]
தொ.பே: 021 2285306
பக்ஸ்: 021 2285307
ஈஸ்வரன் ரேடர்ஸ்
இல.115, 69, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

# இந்திய அணியை வீழ்த்தி இலங்கை அணி சம்பியன்

(தம்புள்ள)

முத்தரப்பு ஒருநாள் இறுதிப் போட்டியில் இந்திய அணியை 74 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி தொடரில் இலங்கை அணி சம்பியனானது.

இலங்கை, இந்தியா, நியூசிலாந்து அணிகள் மோதும் முக்கோண ஒருநாள் கிரிக்கெட் தொடர் தம்புள்ளயில் நடைபெற்று வந்தது. இத்தொடரின் இறுதிப்போட்டியில் நேற்று இலங்கை-இந்திய அணிகள் மோதின.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணிக்கு டில்சான், ஜெயவர்த்தனா ஜோடி சிறப்பான இணைப்பாட்டத்தை வழங்கினர்.

இந்த ஜோடி முதலாவது விக்கெட்டுக்காக 20.2 ஓவர்களில் 121 ஓட்டங்களைக்குவித்து இலங்கை அணிக்கு பலம் சேர்த்த போது மஹேல ஜெயவர்த்தனா 67 பந்துகளில் (5 பவுண்டரிகள் உட்பட) 39 ஓட்டங்களைப்பெற்று ஆட்டமிழந்தார். அடுத்து வந்த உபுல் தரங்க 06 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார்.

எனினும் அடுத்துக் களமிறங்கிய அணித் தலைவர் குமார் சங்கக்கார பொறுப்பான ஆட்டத்தை வழங்க மறுமுனையில் அதிரடியாக ஆடிய திலகரட்ண டில்சான் 107 பந்துகளில் தனது 8 ஆவது சதத்தைப் பூர்த்தி செய்தார்.

இதில் திலகரட்ண டில்சான் 115பந்துகளில் (12 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 110 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார். அடுத்துக் களமிறங்கிய கபுகெதற 12 ஓட்டங்களுடனும், மத்தியூஸ் ஒரு ஓட்டத்துடனும் ஆட்டமிழந்தனர்.

எனினும் சங்கக்காராவின் அதிரடி அரைச் சதத்தின் மூலம் இலங்கை அணி 50 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 299 ஓட்டங்களை எடுத்தது.

இதில் அணித்தலைவர் குமார் சங்கக்காரா 62 பந்துகளில் (7 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 71 ஓட்டங்ளையும் சாமர சில்வா ஆட்டமிழக்காமல் 26 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் முனாப்பட்டேல், இஷாந்த் சர்மா ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் பிரவீன் குமார், அஷிஸ் நெகரா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 300 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்குடன் துடுப்பெடுத்தாடிய இந்திய அணிக்கு ஆரம்பம் முதலே இலங்கைப் பந்துவீச்சாளர்கள் அச்சுறுத்தினர்.

ஆரம்ப துடுப்பாட்ட வீரர் தினேஸ் கார்த்திக் பூச்சியத்துடன் ஆட்டமிழந்து ஏமாற்றினார். அடுத்து ஹோலி களமிறங்கி நிதானமாகத் துடுப்பெடுத்தாட மறுமுனையில் சேவாக் 22 பந்துகளில் (6 பவுண்டரிகள் உட்பட) 28 ஓட்டங்களை எடுத்து ரன்-அவுட் முறையில் ஆட்டமிழந்தார்.

அடுத்துவந்த யுவராஜ் சிங் அதிரடியாக ஆடினார். ஆனால் 31 பந்துகளில் (4 பவுண்டரிகள் உட்பட) 26 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்து நீண்டநேரம் நிலைக்கவில்லை.

தொடர்ந்து களமிறங்கிய தோனி பொறுப்புடன் துடுப்பெடுத்ததாட மறுமுனையில் விராட் ஹோலி 57 பந்துகளில் (5 பவுண்டரிகள் உட்பட) 37 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்க இந்திய அணி 21.1 ஓவர்களில் 109 ஓட்டங்களை எடுத்து 4 விக்கெட்டுக்களை இழந்தது.

தொடர்ந்து வந்த சுரேஷ் ரெய்னா அதிரடியாகத் துடுப்பெடுத்தாடி 28 பந்துகளில் (ஒரு பவுண்டரி, 2 சிக்ஸர்கள் உட்பட) 29 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்துக் களமிறங்கிய ரோகித் சர்மா 5 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்து வெளியேற இந்திய அணியின் துடுப்பாட்ட வரிசை தகர்ந்தது.

எனினும் பின்வரிசை வீரர்களுடன் பொறுப்புடன் துடுப்பெடுத்தாடிய அணித்தலைவர் தோனி அரைச்சதம் கடந்தார்.

எனினும் இந்திய அணி 46.5 ஓவர்களில் 225 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்து 74 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதன்மூலம் முக்கோண ஒருநாள் தொடரில் இலங்கை அணி சம்பியனானது.

துடுப்பாட்டத்தில் அணித்தலைவர் தோனி 100 பந்துகளில் (5 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 67 ஓட்டங்களையும் பிரவீன் குமார் 14 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் திசேர பெரேரா, சுராஜ் ராண்டீவ் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும் லசித் மலிங்க 2 விக்கெட்டுக்களையும் மத்தியூஸ் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இப்போட்டியில் இலங்கை அணிக்கு வெற்றிக்கு சதமடித்து வழிசமைத்த திலகரட்ண டில்சான் ஆட்டநாயகனாகவும் இத் தொடரில் பிரகாசித்த இந்திய அணியின் வீரேந்திர சேவாக் தொடர் நாயகன் விருதை வென்றெடுத்தனர்.

இதன்மூலம் வீரேந்திர சேவாக் இப்பருவகாலத்தில் இலங்கை சுற்றுப்பயணத்தில் இரண்டாவது காரினை பரிசாகப் பெற்றுக் கொண்டார்.

இலங்கை அணியுடனான டெஸ்ட் தொடரிலும் சேவாக் தொடர் நாயகன் விருதுக்காக கார் ஒன்றை பரிசாகப் பெற்றுக்கொண்டது குறிப்பிடத்தக்கது.

## பகீதரனின் அசத்தல் ஜொலிஸ்ரார் வெற்றி



பகீதரன்

(யாழ்ப்பாணம்)

பகீதரனின் துல்லியமான பந்துவீச்சின் மூலம் யாழ்.ஜொலிஸ்ரார் அணி 8 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் ஈகிள்ஸ் அணியை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறியது.

யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் 7 ஆவது ஆண்டாக நடத்தும் வீ.டி.ஜெயரட்ண சிங்கம் வெற்றிக்கிண்ணத்திற்கான 50 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் 4ஆவது கால் இறுதிப் போட்டி நேற்று யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இப் போட்டியில் ஜொலிஸ்ரார் கழக அணி, ஈகிள்ஸ் கழக அணியை எதிர்கொண்டது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஈகிள்ஸ் கழக அணி 27.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 91 ஓட்டங்களை பெற்றனர். துடுப்பாட்டத்தில்கோகுலன் 23, முல்லைத் தீவன் 18 ஓட் டங்களை பெற்றனர்.

ஜொலிஸ்ரார் கழக அணி சார்பாக பந்து வீச்சில் என்.பகீதரன் 9.5 ஓவர்கள் பந்து வீசி 19 ஓட்டங்களை கொடுத்து 7 விக்கெட்டுக்களை கைப்பற்றி இச் சுற்றுப்போட்டியில் புதிய சாதனை ஒன்றை நிலை நாட்டினார்.

அத்துடன் நாதன் 2 விக்கெட்டுக்களையும் வாமணன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 92 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் கழக அணி 12.1 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை இழந்து 92 ஓட்டங்களைப் பெற்று 8 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

கௌசுதன், சிவராஜா ஆட்டமிழக்காமல் தலா 34, 28 ஓட்டங்களை பெற்றனர். இப் போட்டியில் ஜொலிஸ்ரார் கழக அணி வெற்றி பெற்றதன் மூலம் யாழ். சென்றலைட் விளையாட்டுக்கழகம் நடத்தும் 2010ஆம் ஆண்டிற்கான சிறந்த கழக அணியை தெரிவு செய்யும் பட்டியலில் 28 புள்ளிகளைப்பெற்று இரண்டாம் இடத்தில் உள்ளன. அத்துடன் 25 ஓட்டங்களை பெற்ற இரண்டாவது கழகம் என்பது குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருக்கும் யாழ்.சென்றலைட் கழக அணிக்கும் தெல்லிப்பழை கிறாஸ் கொப்பர்ஸ் கழக அணிக்குமிடையில் நடைபெறும் போட்டியில் வெற்றி பெறும் அணியுடன் எதிர்வரும் 12 ஆம் திகதி நடைபெறவிருக்கும் அரையிறுதிப்போட்டியில் ஜொலிஸ்ரார் கழக அணி மோதவுள்ளது.

## விளையாட்டுப் போட்டி

(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறை நேதாஜி இளைஞர் விளையாட்டுக்கழகத்தின் விளையாட்டுப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு நேதாஜி விளையாட்டுதிடலில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக திருமதி ச.ஜெயதாஸ் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினராக மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் மயிலேறும் பெருமாள் கலந்து கொள்ளவுள்ளார். (ந-6,63)

## தேசிய மட்ட 15 வயதுப்பிரிவினருக்கான கிரிக்கெட் தொடர்

# யாழ். இந்துக் கல்லூரி அணி சம்பியனாகுமா? இறுதிப்போட்டியில் இன்று பலப்பரீட்சை



(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை பாடசாலை மட்ட 15 வயதுப் பிரிவுக்கான மட்டுப்படுத்தப்பட்ட 50 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் தொடரின் இறுதிப்போட்டியில் இன்று யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அணியும் காலி தேசியக்கல்லூரி அணியும் மோதுகின்றன.

இலங்கை பாடசாலை கிரிக்கெட் சபையின் ஏற்பாட்டில் அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலாக 15 வயதுப் பிரிவினருக்கான மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகிறது.

இத்தொடரில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மைதானத்தில் இன்று நடைபெறும் இறுதிப்போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அணி, காலி தேசியக்கல்லூரி அணியை சந்திக்கிறது.

இத்தொடர் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அணி, யாழ். இந்துக்கல்லூரி அணியை 07 விக்கெட்டுக்களினாலும்,

யாழ். சென்பற்றிக்ஸ் கல்லூரி அணியை 122 ஓட்டங்களாலும், யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி அணியை 160 ஓட்டங்களாலும், கொக்குவில் இந்துக்கல்லூரி அணியை 226 ஓட்டங்களினாலும், மானிப்பாய் இந்துக்கல்லூரி அணியை 175 ஓட்டங்களினாலும், கரவெட்டி விக்னேஸ்வராக்கல்லூரி அணி யை 256 ஓட்டங்களினாலும் அபார வெற்றி கொண்டது.

இதன் மூலம் அரையிறுதிப் போட்டியில் யாழ். இந்துக்கல்லூரி அணி 16 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இரத்தினபுரி, கெலியகொட மத்திய கல்லூரி அணியை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறியது.

யாழ். இந்துக்கல்லூரி 15 வயதுப்பிரிவு கிரிக்கெட் அணியின் பயிற்றுவிப்பாளர் சிவபாலன் லக்ஸ்மிகாந்தனின் முழுமையான பயிற்சியின் மூலம் முன்னணி வீரர்களைக் கொண்டுள்ளது.

இதில் ஜே.கல்கோகன் தொடரில் ஒரு சதம், 3 அரைச்சதங்களையும் பெற்று துடுப்பாட்டத்திலும், பந்துவீச்சில் 5 விக்கெட்டுக்களையும் கைப்பற்றி சகல துறையிலும் ஜொலித்துள்ளார்.

அத்துடன் கே.மதுஷன் தொடரில் ஒரு சதம், ஒரு அரைச்சதத்தையும் பி.திபாகுலன் 2 அரைச்சதம் மற்றும் அணித்தலைவர் ஜே. சஜீகன் ஒரு அரைச்சதத்தையும் பெற்றுள்ளனர்.

பந்துவீச்சில் ஏ. கௌசிகன் ஒரு போட்டியில் 5 விக்கெட்டுக்கள் உட்பட தொடரில் 9 விக்கெட்டுக்களைக்கைப்பற்றியுள்ளதுடன், அணித்தலைவர் சஜீகன், சிந்துயன், ருக்மன் ஆகியோரும் தொடரின் பந்துவீச்சில் யாழ். இந்துக்கல்லூரி அணிக்கு பலம் சேர்த்துள்ளனர்.

இத்தொடரில் ஜெயக்குமார், சஜீகன் தலைமையில் சகலதுறையிலும் ஜொலித்த யாழ். இந்துக்கல்லூரி அணி இன்றைய போட்டியில் காலி தேசியக்கல்லூரி அணியை வீழ்த்தி சம்பியனாகுமா? இன்றைய ஆட்டம் விறுவிறுப்பாக அமையும்.

வெளிநாடுகளில் படிப்பதற்கும் வேலை பார்ப்பதற்கும் ஒரு அரிய சந்தர்ப்பம்!!!

31st August எமது நிபுணர்கள் யாழ்ப்பாணத்தில்......

- Free Assessment
- Free Visa Guidance
- Free Visa Consultancy
- Career Guidance etc.

Call for Appointments
0774 301 974


Inspire International (Pvt) Ltd
151, Kirulapone Avenue, Colombo-5
(C-951)

hp
PRO 2000
MT BUSINESS PC
களை பெற்றுக்கொள்ள முடியும்
Pro - 2.70GHz Dual Core, HDD - 320 GB, Ram - 2GB DDR 3, Monitor - 19" HP
68,000/-
NALIN information Technologies Pvt Ltd
PARAMESWARA JUNCTION
TP: 0212221166, 0777667974
(C-953)

# மரண அறிவித்தல்

## சந்தனம் ஆச்சாரி சவுந்தரராஜன்

(யாழ்ப்பாணம் துர்க்கா நகைப்பூங்கா உரிமையாளர்)



யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சந்தனம் ஆச்சாரி சவுந்தரராஜன் நேற்று 28.08.2010 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சந்தனம் ஆச்சாரியின் அன்பு மகனும், இராஜ லெட்சுமியின் அன்புக் கணவரும்,

பிரபாகர், சுதாகர், கமலேஸ்வரி, சுதர்சன், பபிகரன் ஆகியோரின் அன்புத் தகப்பனும், யோகேஸ்வரி, பாபு, கிந்துயா ஆகியோரின் அன்பு மாமனாரும்,

விதுர்சன், துவாரகா, கரிஸ்ராகவன், கரனிகா ஆகியோரின் அன்புப் பேரனும், அம்பிகாவதி, விஸ்வநாதன், பரமேஸ்வரி, நாகராஜா, சிறிஸ்கந்தராஜா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (30.08.2010) திங்கட்கிழமை மு.ப.11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

38, கில்னர் ஒழுங்கை,
கஸ்தூரியார் றோட்,
யாழ்ப்பாணம்.

தகவல்: மனைவி, பிள்ளைகள்.
T.P. 077 6031332
077 1554661

(2276)

வட்டுக்கோட்டை விவசாயிகளினால் நடாத்தப்படும்
மாபெரும் மாட்டுவண்டி சவாரிப் போட்டி

இடம் :- கொத்துத்துறை சவாரித்திடல்
காலம் :- 29.08.2010 ஞாயிற்றுக்கிழமை
நேரம் :- பிற்பகல் 02 மணி

விவசாயிகள் வட்டுக்கோட்டை
(C-954)

## மக்கள் நல அரசியல் அமைப்பு...

கிரஸ் தமக்கு உத்தியோக பூர்வமாக அறிவிக்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய தேசிய முன்னணியின் உறுப்பினர் கட்சியான முஸ்லிம் காங்கிரஸின் இந்த முடிபு குறித்து ஊடக செய்திகள் மூலமே அறிந்து கொண்டோம்.

இலங்கையில் நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழித்து நாடாளுமன்றத்திற்குப் பொறுப்புக் கூறக் கூடிய பிரதமர் தலைமையிலான அமைச்சரவை முறையைக் கொண்டு வருவதே தமது கட்சியின் நிலைப்பாடாக உள்ளதாகவும் முஸ்லிம் காங்கிரஸும் ஆரம்பத்திலிருந்து இந்த நிலைப்பாட்டிலேயே இருந்தது.

இந்த விடயம் குறித்து அடுத்த வாரத்தில் முஸ்லிம் காங்கிரஸுடன் பேச்சுவார்த்தை நடத்தத் திட்டமிட்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சி, குடும்ப அரசியலமைப்புத் திருத்தத்திற்குப் பதிலாக மக்கள் நல அரசியலமைப்புத் திருத்தத்தையே வலியுறுத்துகின்றது.

அரசாங்கம் எவ்வாறான திருத்தங்களை அரசமைப்பில் மேற்கொள்ள தற்போது உத்தேசித்துள்ளது என்பது பற்றி உத்தியோகபூர்வமாக எந்த அறிக்கையையும் இதுவரை வெளியிடவில்லை.

தமக்கேற்றவாறு அரசியல் அமைப்பை மாற்றுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவு கிடைக்காது என்ற பட்சத்திலேயே அரசாங்கம் முஸ்லிம் காங்கிரஸை தம்முடன் இணைத்துக் கொள்ள முயற்சிக்கின்றது.

யார் அரசாங்கத்துடன் இணைந்தாலும் எமது நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்படாது எனவும் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார். (ந-5)

## நாடு ஒன்றிணைக்கப்...

ஒரு வருடத்திற்கு முன்னர் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் வெற்றியீட்டியதன் மூலம் நாட்டின் நிலப்பரப்புக்கள் ஒன்றிணைக்கப்பட்டன.

எனினும் இன சமூகங்கள் இன்னமும் ஒன்றிணைக்கப்படவில்லை. இன சமூகங்களை இணைக்க வேண்டிய பாரிய பொறுப்புக் காணப்படுகின்றது.

சில பிரச்சினைகளுக்குத்தனிக் கட்சி ஒன்றினால் தீர்வு காண முடியாது. அவை தேசியப் பிரச்சினைகளாக உள்ளன.

துரதிர்ஷ்டவசமாக தேசியப்பிரச்சினைகளின் போது இலங்கை அரசியல் கலாசாரத்தில் கட்சிகளுக்கிடையில் இணக்கப்பாடு காணப்படுவதில்லை எனக் கூறிய அமைச்சர் டியூ.குணசேகர,

சகோதர படுகொலைகளை மேற்கொண்டமை காரணமாக தமிழீழ விடுதலைப் புலிகளை தேசிய விடுதலை இயக்கமாக ஏற்றுக் கொள்ளமுடியாது. தமிழீழ விடுதலைப் புலிகளின் இவ்வாறான நடவடிக்கைகளுக்கு தமது கட்சி எதிர்ப்பை வெளியிட்டு வந்தது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தேசிய விடுதலை இயக்கமாக இருந்திருக்குமாக இருந்தால் அது சகோதர தமிழ் மக்களைக் கொன்றிருக்காது.

இதேவேளை தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகள், அபிலாசைகள் என்பவற்றை யுத்தத்தால் பெற்றுக்கொள்ள முடியாது எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (ந-5)

புதியபிரிவுகள் ஆரம்பம்
Advanced Dip. in Video mixing (Morph, Cool3d, Project, Premiere, Soundfroge, Combustion, Power director, Vcd and convertor, Editing using Photoshop)
Auto CAD
ICT(O/L) (தரம் 10 & 11)
ICT(A/L) (தரம் 12 & 13)
GIT(A/L) (தரம் 12 & 13)
Ms Office2007 & DTP
Internet & Email
BIT, AAT, ACBF
Accounting Package
Computer Hardware
Programming Languages
Kids Programme (தரம் 01 → 09வரை)
Group Classes
CHARLES BABBAGE COMPUTER ACADEMY CBCA SRILANKA
முழுமையான கணணிக் கல்விக்கு இன்றே எம்முடன் இணையுங்கள்...
CB Computer Academy Station Road Kondavil. T.P: 021-3217903
(2275)

S.V.T கோபுரம் அரிசிக் களஞ்சியம்

S.V.T கோபுரம் அரிசிகளான
☆ சிவப்பு நாடு (ஆட்டக்காரி)
☆ சிவப்பு நாடு (1/500)
☆ கீரிச்சம்பா
☆ வெள்ளநாடு
☆ தீட்டல்
☆ உடையல்
10 kg, 50 kg Bags
பெற்றுக்கொள்ள இன்றே நாடவும்.
S.V.T. கோபுரம் அரிசிக் களஞ்சியம்
வைத்தியசாலை முன்பு, இணுவில்.
T.P.: 0214921967
(2257)

கடந்த வாரத்தில் பார்வையிடத் தவறியவர்களுக்குச் சந்தர்ப்பம் அளிக்கும் முகமாகவும், அநேகரின் வேண்டுகோளுக்கு இணங்கவும் மீண்டும்
திருமறைக் கலாமன்றம்
தயாரித்து வழங்கும்
அற்றைத் திங்கள்
(கூத்துருவ நாடகம்)
காலம் : இன்று 29.08.2010 (ஞாயிறு)
நேரம் : மாலை 6.45 மணி
இடம் : திருமறைக் கலாமன்ற அரங்கு
முல்லைக்கு தேர் ஈந்த வள்ளல் பாரி மன்னனின் வீர வரலாற்றினை ஈழத்தின் பல்வேறு கூத்துமரபுகளின் ஒன்றிணைப்பினூடாக வெளிப்படுத்தும் அரங்கப் படைப்பு
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
238, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (சி-950)
திருமறைக் கலாமன்றம்

## இலங்கைத்...

கோடி ரூபாய் செலவில் சுமார் 50 ஆயிரம் வீடுகள் கட்டித்தர உள்ளது.

இலங்கைத் தமிழர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதையே இந்திய அரசு முக்கிய கொள் கையாகக் கொண்டு செயற்பட்டுகின்றது. மழைக்காலம் தொடங்குவதற்கு முன்பாகவே இலங்கைத் தமிழர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்குமாறு அந்நாட்டு அரசை இந்தியா வலியுறுத்தியுள்ளது. (ந-5)

## ஹக்கீம்...

ஒழுங்கமைக்கவும் வேண்டுமெனில் மாற்றம் கொண்டுவரவும் செயற்பட்டோம். ஆனால் ஹக்கீம் இதனைக் குழப்பி விட்டார்.

கட்சியின் அதிஉயர் பீடம் கூடி எடுத்த தீர்மானத்தின் பிரகாரம் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மகிந்தவுக்கு ஆதரவு தெரிவித்த மையானது எழக்குச் செய்யப்பட்ட பச்சைத் துரோகம் எனத் தெரிவித்துள்ள ரணில்,

நாடாளுமன்றத்திற்குப் பொறுப்புச் சொல்லக் கூடிய ஓர் நிறைவேற்று அதிகாரமுடைய பிரதமர் தலைமையிலான ஆட்சி முறைமை யை உருவாக்குவதாக ஜனாதிபதி முதலில் உறுதியளித்த போதிலும் தற்போது அந்த உறுதிமொழியை மகிந்தவினால் மீறப்பட் டுள்ளது.

இதேவேளை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆளும் கட்சியின் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள மறைமுகமாகத் துணைபோவதாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ந-5)

## வடமராட்சி...

கோரிக்கையை முழுமையாக ஏற்க முடியாது எனத் தெரிவிக்கப்பட்டது.

வடமராட்சி கிழக்கு மாமுனையிலிருந்து ஆழியவளை வரையான பகுதிகளில் மட்டுமே மக்களை மீளக்குடியமர்த்த முடியும் எனவும் மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பான திகதியை யாழ்.படைத் தளபதியும் யாழ்.அரச அதிபரும் இணைந்து தீர்மானிப்பர் எனவும் முடிபெடுக்கப்பட்டது.

இதேவேளை இப் பகுதியின் வைத்தியசாலையைப் புனரமைத்தல் மற்றும் பிரதேச செயலகத்தை இயக்குவதற்கான நடவடிக்கையினை உடனடியாக எடுப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

வடமராட்சி கிழக்கு அம்பன் மற்றும் கொட்டோடைப் பகுதியில் முதல் கட்டமாக இவ்வாரம் மக்கள் மீளக் குடியமர்த்தப்படவுள்ளனர்.

வடமராட்சி கிழக்கின் மீள்குடியேற்றம் தொடர்பாக பல்வேறு அரசியல் கட்சிகளும் பொதுமக்களும் கோரிக்கை விடுத்து வந்த சூழலில் முதல் கட்டமாக வடமராட்சி கிழக்கில் ஒரு பகுதியில் மக்களை மீளக் குடியமர்த்துவதற்கு இணக்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ந-3,43)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.08.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.